சிலர் எட்டு மஹா நாகங்களாகவும், சிலர் ஏழு குல பர்வதங்களாகவும் ஆனார்கள். ஓ முனிவர்களே! எவரெவர்களுக்கு எவரெவர் அதிபதிகளாக இருக்கிறார்களோ அவர்களெல்லாம் ஸ்ரீ சங்கரருடைய அனுக்கிரஹ அருளால்தான் அந்தந்த ஆதிபத்யங்களை பெற்றிருப்பதாக அறிய வேண்டுமேயன்றி வேறில்லை. ஆகையால் தனக்கு மேன்மையைக் கோரிய எல்லா மனித ச்ரேஷ்டர்களும் (11) போக மோக்ஷங்களைப் பயனை அளிக்கக் கூடிய சிவபூஜையை எப்பொழுதும் செய்ய வேண்டும். சிவபூஜையின் மகிமையால் சிலர் சித்தர்களானார்கள். (12) கபிலர் முதலிய சில ஸித்தர்கள் சிறந்த யோகீச்வரர்கள் எனக் கூறப்படுகிறார்கள். மற்றும் அநேக ஸித்தர்கள் உலகத்திற்கு அதிபர்களாகவும், சிலர் நித்தியத்தன்மையை அடைந்தவர்களாகவும் ஆகியிருக்கிறார்கள். (13) சில வித்துவான்கள் சிவலோகத்தையும், சிலர் ஸ்ரீ பரமேச்வரனுடைய ஸாலோக்கியத்தையும், சிலர் ஸாமீப்யத்தையும், சிலர் ஸாரூப்யத்தையும், சிலர் ஸாயுஜ்யத்தையும் அடைந்திருக்கிறாகள். (14) மூன்று உலகத்திலுள்ள தேவ, அசுர, மனிதர்களின் சிறந்த ஐச்வரியங்களை அடைந்திருப்பவர்களெல்லாம் சிவ பூஜையின் மஹிமையால்தான் உலகத்தில் பிரஸித்தி அடைகிறார்கள். (15) (ஸாயுஜ்ய முக்தியைத்தவிர) மற்ற முக்திகளை அடைந்த சிலர் மிகுந்த ஐச்வரிய லாபத்தினால் புத்திமோகம் கொண்டு கெட்டு மறு பிறப்படைந்து, பின்னும் ஸ்ரீ பரமேச்வரனைப் பூஜித்து, மறுபடியும் ஸம்ஸாரத்திலிருந்து முன்போல் ஸ்ரீ பரமசிவனை அடைந்திருக்கிறார்கள். (16) வெற்றியில் விருப்பமுள்ள பலர் ஸ்ரீ ஜகதீசனைப் பூஜித்து, போரில் எதிரிகளை வென்று மறுபடி பூமியை ஆண்டிருக்கிறார்கள். (17) பலத்தை விரும்பிய பலர் அளவற்ற பலமடைந்திருக்கிறார்கள். புத்திரனை விரும்பியவர்கள் அநேகம் புத்திரர்களையும், மனைவியை விரும்பியவர்கள் அழகிய பல மனைவிகளையும், (18) பசுவை விரும்பியவர்கள் பசுக்களையும், குதிரையை விரும்பியவர்கள் குதிரையையும் அடைந்திருக்கிறார்கள். மேலும் பலர் ஸௌந்தரியம், சிறந்த காந்தியோடு கூடிய உருவம், கொடை, ஸத்யம்,

प्रसिद्धिञ्च जगत्यस्मिन् सर्वमिष्टञ्च लेभिरे । अर्थेष्वेतेष्वनेकेषु सेतिहासेषु काञ्चन ॥
संग्रहेण कथाभागा वर्ण्यन्ते श्रृणुताधुन ॥ २०
इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे त्रिषष्टितमोऽध्यायः ॥

॥ अथ चतुष्षष्टितमोऽध्यायः ॥

भृगुमहर्षिणा विष्णवे शापदानम् ॥

सूतः — विष्णुःपुरा पुरारातिमाराध्य पुरुषं परम् । ऋषिशापसमुद्भूतविनिपाताननेकशः ॥ १
निर्धूयाभीष्टपुत्रस्त्रीराज्यलाभमवाप्तवान् । तेषुकांश्चिदितीहासान् महापुण्यान्वदामिवः ॥ २
एकदाकलहे वृत्ते ब्रह्मविष्णवोः परस्परम् । कर्ताऽहं जगतां न त्वमहं न त्वमिति क्रुधा ॥ ३
तयोरहङ्कृतेश्शान्तिं कुर्वन् सर्वेश्वरेश्वरः । उत्पाद्य भैरवं तेन मण्डलस्थं स्वयं रवेः ॥ ४

ப்ரஸித்திஞ்ச ஜகத்யஸ்மின் ஸர்வமிஷ்டஞ்ச லேபிரே ।
அர்தேஷ்வேதேஷ்வனேகேஷு ஸேதிஹாஸேஷு காஞ்சன ॥
ஸங்க்ரஹேண கதாபாகா வர்ண்யந்தே ச்ருணுதாதுன ॥ 20

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேச காண்டே த்ரிஷஷ்டிதமோऽத்யாய: ॥

॥ அத சதுஷ்ஷஷ்டிதமோऽத்யாய: ॥

பிருகு முனிவர் விஷ்ணுவுக்குச் சாபம் கொடுத்தல்

ஸூத: — விஷ்ணு: புரா புராராதிமாராத்ய புருஷம் பரம் । ருஷிசாபஸமுத்பூதவினிபாதானனேகச: ॥ 1
நிர்தூயாபீஷ்டபுத்ரஸ்த்ரீராஜ்யலாபமவாப்தவான் ।
தேஷு காம்ச்சிதிதீஹாஸான் மஹாபுண்யான்வதாமி வ: ॥ 2
ஏகதா கலஹே வ்ருத்தே ப்ரம்ஹவிஷ்ண்வோ: பரஸ்பரம் ।
கர்தாஹம் ஜகதாம் ந த்வமஹம் ந த்வமிதி க்ருதா ॥ 3
தயோரஹங்க்ருதேச்சாந்திம் குர்வன் ஸர்வேச்வரேச்வர: ।
உத்பாத்ய பைரவம் தேன மண்டலஸ்தம் ஸ்வயம் ரவே: ॥ 4

பராக்கிரமம், (19) இந்த உலகத்தில் பிரஸித்தி முதலிய ஸகல அபீஷ்டங்களையும் அடைந்திருக்கிறார்கள். ஓ முனிவர்களே! இந்த அநேக விஷயங்களில் இதிஹாஸங்களோடு கூடிய சில கதைகளின் சுருக்கங்களைக் கூறுகிறேன் கவனமாய் கேளுங்கள். (20)

அறுபத்துமூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

அறுபத்துநான்காவது அத்தியாயம்.

ஸூதமுனிவர் கூறுகிறார்:— முன்பு விஷ்ணுவானவர் பரம புருஷராகிய ஸ்ரீ மஹாதேவரைப் பூஜித்து, அதனால் சில ரிஷிகளின் சாபத்தினால் உண்டான தீங்குகளை அநேகமாக (1) போக்கடித்து தான் விரும்பிய மனைவி, பிள்ளை, இராஜ்யம் இவைகளை அடைந்தார். அவைகளுக்குள் சிறந்த புண்ணியமான சில இதிஹாஸங்களை உங்களுக்குச் சொல்லுகிறேன். (2) ஒரு சமயம் ப்ரம்மா, விஷ்ணு இவர்களும் ஒருவரோடொருவர் நானே உலகங்களுக்கு கர்த்தாவேயன்றி நீ அல்ல. நானே கர்த்தா நீ அல்ல என்றுமிருந்த கோபத்தோடு சண்டையிட்டுக் கொள்ளுகையில் (3) ஸ்ரீ ஸர்வேச்வரன் அவர்களுடைய

नखाग्रेण विधेस्तस्य पञ्चमं मूर्धसूर्ध्वगम् । उर्वारुकफलं यद्वत्कोमळं लीलयेश्वरः ॥ ५
सञ्चिद्य तत्कपालेन भैरवेण धृतेन च । विष्णोरहङ्कृतेश्शान्ति रक्तभिक्षाछलेन वै ॥ ६
विनोदयिष्यन् भिक्षार्थं प्रेषयामास भैरवम् । विष्णुस्सिरां ललाटाग्राच्छित्वा रक्तं निजं ददौ ॥ ७
रक्तस्य विरहान्मूर्छामवाप पुरुषोत्तमः । पुनश्चभैरवेन्द्रस्य करस्पर्शेन निर्व्यथः ॥ ८
मूर्छां विहाय सहसा लब्धसंज्ञः पुनर्हरिः । अहंकारः कृतोऽस्माभिश्शासितास्तेन वैवयम् ॥ ९
तत्पापविनिवृत्यर्थं शिवपूजां प्रकुर्महे । मध्यार्जुनं समासाद्य समभ्यर्च्य जगद्गुरुम् ॥ १०
मेने कृतार्थमात्मानं पूतं सर्वेश्वरार्चनात् । कृपया देवदेवस्य प्रसन्नस्य पिनाकिनः ॥ ११
विष्णुलोकं यथापूर्वं जगाम गरुडेन सः । पुनश्चाप्येकदा विष्णुरहङ्कारमदोद्धतः ॥ १२
ब्रह्मणा स्पर्धमानोऽसावीश्वरोऽहमिति क्रुधा । महालिङ्गाकृतेर्मूलमदृष्ट्वा पुनरुत्थितः ॥ १३
प्रणवस्यच वेदानामशृण्वन्वचनं हितम् । तत्पापविनिवृत्यर्थमरुणाचलमाश्रितः ॥ १४

நகாக்ரேண விதேஸ்தஸ்ய பஞ்சமம் மூர்தஸௌர்த்வகம் | உர்வாருகபலம் யத்வத்கோமளம் லீலயேச்வர: || 5

ஸஞ்சித்ய தத்கபாலேன பைரவேண த்ருதேன ச |
விஷ்ணோரஹங்க்ருதேச்சாந்திம் ரக்தபிக்ஷாசலேன வை || 6

விநோதயிஷ்யன் பிக்ஷார்தம் ப்ரேஷயாமாஸ பைரவம் |
விஷ்ணுஸ்ஸிராம் லலாடாக்ராச்சித்வா ரக்தம் நிஜம் ததௌ || 7

ரக்தஸ்ய விரஹான்மூர்சாமவாப புருஷோத்தம: |
புனச்ச பைரவேந்த்ரஸ்ய கரஸ்பர்சேன நிர்வ்யத: || 8

மூர்சாம் விஹாய ஸஹஸா லப்தஸம்ஞ: புனர்ஹரி: |
அஹங்கார: க்ருதோஸ்மாபி: சாஸிதாஸ்தேன வை வயம் || 9

தத்பாபவினிவ்ருத்யர்தம் சிவபூஜாம் ப்ரகுர்மஹே |
மத்யார்ஜுனம் ஸமாஸாத்ய ஸமப்யர்ச்ய ஜகத்குரும் || 10

மேனே க்ருதார்த்தமாத்மானம் பூதம் ஸர்வேச்வரார்சனாத் |
க்ருபயா தேவதேவஸ்ய ப்ரஸன்னஸ்ய பினாகின: || 11

விஷ்ணுலோகம் யதாபூர்வம் ஜகாம கருடேன ஸ: | புனச்சாப்யேகதா விஷ்ணுரஹங்காரமதோத்தத: 12

ப்ரம்ஹணா ஸ்பர்தமானோऽஸாவீச்வரோஹமிதி க்ருதா |
மஹாலிங்காக்ருதேர்மூலமத்ருஷ்ட்வா புனருத்தித: || 13

ப்ரணவஸ்யச வேதாநாமச்ருண்வன் வசனம் ஹிதம் | தத்பாபவினிவ்ருத்யர்தமருணாசலமாச்ரித: || 14

அஹங்காரத்தை (நானென்ற கர்வத்தை) அடக்க ஸௌர்ய மண்டலத்தில் விளங்கும் தனது அம்சத்தை பைரவராக உண்டுபண்ணி அவரைக் கொண்டு (4) அந்த பிரம்மனுடைய ஐந்து சிரஸுகளில் உயர நோக்கிய சிரஸை (தலையை) வெள்ளரிப் பழத்தை கிள்ளுவது போல் அந்த ஈச்வரன் ஓர் விளையாட்டாகவே மிக லேசாக (5) கிள்ளி பிறகு பைரவ மூர்த்தியால் தரிக்கப்பட்ட அந்த பிரம்மனின் மண்டையோட்டைக் கொண்டே ரக்த பிக்ஷை வாங்கும் வியாஜத்தினால் விநோதமாய் விஷ்ணுவின் கர்வத்தை அடக்குவதற்காக அந்த பைரவரை பிக்ஷை வாங்க அனுப்பினார். விஷ்ணுவும் நரம்பை அறுத்து நெற்றியின் வழியாக தனது ரத்தத்தைக் கொடுத்தார். (7) அதனால் ரத்தமிழந்த ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் மூர்ச்சையடைந்தார். பிறகு பைரவ மூர்த்தியின் கையினால் தொடப்பட்டவுடன் துன்பம் நீங்கி (8) மூர்ச்சை தெளிந்து எழுந்து, சீக்கிரம் நினைவைப் பெற்றவராகி நாம் அஹங்காரமடைந்ததால் ஸ்ரீ பகவானால் சிக்ஷிக்கப் பட்டோம். (9) மேலும் அந்த பாபம் விலகுவதற்காக சிவ பூஜை செய்வோம் என எண்ணி திருவிடமருதூர் சென்று, ஸ்ரீ ஜகத் குருவை பூஜை செய்து, (10) அந்த ஸர்வேச்வரனை பூஜை செய்ததால் தன்னை கிருதார்த்தராக எண்ணினார். அதனால் ப்ரஸன்னரான தேவாதி தேவருடைய அருளால் (11) கருடனோடு முன்போல் வைகுண்டமடைந்தார். மறுபடியும் அவர் ஓர் சமயத்தில் அஹங்காரத்தினால் மதம் கொண்டவராகி, (12) ப்ரம்மாவோடு தானே ஈசுவரன் என்று கோபத்தோடு சண்டையிட்டுக் கொண்டு பிரணவம், வேதங்கள் இவைகளின் ஹிதமான சொற்களையும் கேளாமல் மஹாலிங்க உருவத்தின் அடியைக் காணாமல் திரும்பி உயரக் கிளம்பினார். அந்த பாவம் நீங்குவதற்காக

तत्रेश्वरं समाराध्य प्रसादेनास्यवै विभोः । अपराधविमुक्तात्मा जगाम भवनं स्वकम् ॥ १५
पुनश्चाप्यकरोद्विष्णुरेकदाऽसुरनिग्रहम् । पराजये तु देवानां देवासुरमहाहवे ॥ १६
तदानीं तुमुले युद्धे विष्णुना सूदिता भृशम् । भृग्वाश्रमं समासाद्य भृगुपत्नीं तपस्विनीम् ॥ १७
ख्यातिं शरणमासेदुरसुरा हरिनिर्जिताः । तदाश्रममपि प्राप विष्णुश्चक्रधरः स्वयम् । १८
संहरन्नसुरांस्तत्र भृगुपत्न्या निवारितः । नैवाश्रमः प्रवेष्टव्यस्त्वयाऽसन्निहिते मुनौ ॥ १९
नहन्तव्या न हन्तव्या दितिजा मदुपासकाः । मया दत्ताभयास्सर्वे मामाहिंसीर्जनार्दन ॥ २०
दुष्टानामभयोऽनिष्टो जगतामिति हि क्रुधा । चक्रेण संहरन् देव्याश्छिच्छेदच शिरस्तदा ॥ २१
तेषामभयदात्र्याश्च भृगुपत्न्या जनार्दनः । निर्गतेच ततस्तस्मिन्नाश्रमान्मधुसूदने ॥ २२
ददर्श भृगुरभ्येत्य दैत्यैस्सहनिजां प्रियाम् । निकृत्तशिरसं ज्ञानदृष्ट्या विज्ञाय माधवम् ॥ २३
चुक्रोध हरयेऽत्यर्थं हन्त्रे दैत्यैः स्त्रिया अपि । अशपद्विष्णुमवनौ जन्मान्यस्त्वस्य कोटिशः ॥ २४

தத்ரேச்வரம் ஸமாராத்ய ப்ரஸாதேனஸ்யவை விபோ: ।
அபராதவிமுக்தாத்மா ஜகாம பவனம் ஸ்வகம் ॥ 15
புனச்சாப்யகரோத்விஷ்ணுரேகதாऽஸுர நிக்ரஹம் । பராஜயே து தேவானாம் தேவாஸுரமஹாஹவே 16
ததானீம் துமுலே யுத்தே விஷ்ணுனாஸூதிதா ப்ருசம் ।
ப்ருக்வாச்ரமம் ஸமாஸாத்ய ப்ருகுபத்னீம் தபஸ்வினீம் ॥ 17
க்யாதிம் சரணமாஸேதுரஸுரா ஹரிநிர்ஜிதா: । ததாச்ரமமபி ப்ராப விஷ்ணுச்சக்ரதர: ஸ்வயம் ॥ 18
ஸம்ஹரன்னஸுராம்ஸ்தத்ர ப்ருகுபத்னியா நிவாரித: ।
நைவாச்ரம: ப்ரவேஷ்டவ்யஸ்த்வயாऽஸன்னிஹிதேமுனௌ ॥ 19
நஹந்தவ்யா ந ஹந்தவ்யா திதிஜா மதுபாஸகா: । மயா தத்தாபயாஸ்ஸர்வே மாமாஹிம்ஸீர்ஜனர்தன 20
துஷ்டானாமபயோऽனிஷ்டோ ஜகதாமிதி ஹி க்ருதா ।
சக்ரேண ஸம்ஹரன்தேவ்யாச்சிச்சேதச சிரஸ்ததா ॥ 21
தேஷாமபயதாத்ர்யாச்ச ப்ருகுபத்ன்யா ஜனார்தன: ।
நிர்கதேச ததஸ்தஸ்மின்னாச்ரமான் மதுஸூதனே ॥ 22
ததர்ச ப்ருகுரப்யேத்ய தைத்யைஸ்ஸஹ நிஜாம் ப்ரியாம் ।
நிக்ருத்தசிரஸம் ஞானத்ருஷ்ட்யா விக்ஞாய மாதவம் ॥ 23
சுக்ரோத ஹரயேத்யர்தம் ஹந்த்ரேதைத்யை: ஸ்த்ரியா அபி ।
அசபத்விஷ்ணுமவனௌ ஜன்மான்யஸ்த்வித்யஸ்ய கோடிச: ॥ 24

திருவண்ணாமலையை அடைந்து, (14) அங்கு ஸ்ரீ ஜகதீசனை நன்றாகப் பூஜித்து, அந்த பிரபுவின் அருளால் தனது குற்றம் நீங்கி, மறுபடியும் தன் இருப்பிடம் சேர்ந்தார். (15) பிறகு ஒரு சமயம் ஸ்ரீ விஷ்ணுவானவர் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த ஓர் பெரிய யுத்தத்தில் தேவர்கள் தோல்வியுற்றதைக்கண்டு அசுரர்களைக் கொல்வதற்காக (16) மிக பயங்கரமாக யுத்தம் செய்கையில் விஷ்ணுவினால் மிகவும் கண்டிக்கப்பட்டு தோல்வி அடைந்த அசுரர்கள் பிருகு முனிவரின் ஆச்ரமத்திற்குச் சென்று, மிக தபஸ்வினியாகிய ப்ருகு முனிவரின் மனைவியாகிய க்யாதி என்பவளைச் சரணமடைந்தார்கள். அப்பொழுது விஷ்ணுவானவர் சக்ரத்தை எடுத்துக் கொண்டு தானும் ஆச்ரமத்திற்கு வந்தார் (18) அங்கும் அசுரர்களைக் கொல்ல யத்தனிக்கையில் ப்ருகு மகரிஷியின் மனைவியால் ஓ விஷ்ணுவே! முனிவரில்லாத சமயத்தில் தாங்கள் ஆசிரமத்திற்குள் வரக்கூடாது. மேலும் என்னை அண்டிய அசுரர்களை தாங்கள் கொல்லவும் கூடாது அவர்கள் யாவருக்கும் நான் அபயம் கொடுத்திருக்கிறேன் எனத் தடுக்கப்பட்டார். (20) அப்பொழுது விஷ்ணுவும் துஷ்டர்களுக்கு அபயம் கொடுத்தால் உங்களுக்கு பீடையல்லவா? என்று கோபத்தினால் அவர்களுக்கு அபயம் கொடுத்த ப்ருகு முனிவருடைய பத்தினியின் தலையை வெட்டி, அந்த அசுரர்களையும் ஸம்ஹாரம் செய்துவிட்டு விஷ்ணுவானவர் அந்த ஆச்ரமத்தை விட்டுப் போய்விட்டார். (22) பிறகு பிருகு முனிவர் அங்குவந்து அசுரர்களோடு தன் மனைவியும் தலை வெட்டப்பட்டு கிடப்பதைக்கண்டு அதை செய்தது விஷ்ணுதான் என்று ஞானதிருஷ்டியால் அறிந்து (23) அசுரர்களையும் தன் மனைவியையும் கொன்றவரான அந்த விஷ்ணுவின்மீது மிகக் கோபமடைந்து அவரை சபித்தார். இந்த விஷ்ணுவுக்கு பூலோகத்தில் கோடிக்கணக்கான ஜன்மங்கள் உண்டாகட்டும். (24)

तत्र तत्र स्त्रियाचापिवियोगोऽस्त्विति दुःखदः । जगत्यस्यैव ये भक्तास्सन्तु पाषण्डिनस्तु ते ॥ २५
शप्त्वैवमात्मनः पत्नीं सन्धायोज्जीव्य विद्यया । मृतसञ्जीविनीत्येव सिद्धया परमेश्वरात् ॥ २६
ततो विष्णुस्समाकर्ण्य भीतभीतोऽसुरार्दनः । तच्छापविनिवृत्यर्थं काञ्चीमभ्येत्य कामदाम् ॥ २७
संपूज्य देवदेवेशं दृष्ट्वा देवं वृषोपरि । प्रणम्याभ्यर्थयच्छापमोक्षं भीतेन चेतसा ॥ २८
मद्भक्तैर्यत्कृतं विष्णोतैः कर्तव्यं तदन्यथा । अहं न पारयाम्येव प्रतिज्ञैषा मया कृता ॥ २९
इति केशवमाभाष्य हरिकेशः स्मयन्निव । भृगुमाह महादेवः स्मृतमात्रागतं मुनिम् ॥ ३०
विमोचय हरिं शापात् भृगो बहुजनिप्रदात् । मदर्चनारतं (गतं) विद्धि भक्तञ्च मुनिसत्तम ॥ ३१
दशास्तु जन्म तद्विष्णोरेकस्मिंस्तत्र जन्मनि । स्त्रिया वियुक्तोऽतिचिरं दुःखी भवतु नान्यतः ॥ ३२
मदाज्ञया कुरुष्वेदं मद्भक्तानां त्वमग्रणीः । तथास्त्विति मुनिः प्राह प्रणम्य परमेश्वरम् ॥ ३३
तदा पुनरुमाकान्तं रमाकान्तः प्रणम्य तम् । प्रार्थयामास भगवन् दशस्वपि च जन्मसु ॥ ३४

தத்ர தத்ர ஸ்த்ரியாசாபி வியோகோऽஸ்த்விதி து:கத: ।
ஜகத்யஸ்யைவ யே பக்தாஸ்ஸந்து பாஷண்டினஸ்து தே ॥ 25
சப்த்வைவமாத்மன: பத்னீம் ஸந்தாயோஜ்ஜீவ்ய வித்யயா ।
ம்ருதஸஞ்ஜீவினீத்யேவ ஸித்தயா பரமேச்வராத் ॥ 26
ததோ விஷ்ணுஸ்ஸமாகர்ண்ய பீதபீதோऽஸுரார்தன: ।
தச்சாபவினிவ்ருத்யர்தம் காஞ்சீமப்யேத்ய காமதாம் ॥ 27
ஸம்பூஜ்ய தேவதேவேசம் த்ருஷ்ட்வாதேவம் வ்ருஷோபரி ।
ப்ரணம்யாப்யர்தயச்சாபமோக்ஷம் பீதேன சேதஸா ॥ 28
மத்பக்தைர்யத்க்ருதம் விஷ்ணோ தை: கர்தவ்யம் ததன்யதா ।
அஹம் ந பாரயாம்யேவ ப்ரதிக்ஞைஷாமயாக்ருதா ॥ 29
இதி கேசவமாபாஷ்ய ஹரிகேச: ஸ்மயன்னிவ । ப்ருகுமாஹ மஹாதேவ: ஸ்ம்ருதமாத்ராகதம் முனிம் ॥ 30
விமோசய ஹரிம் சாபாத் ப்ருகோ பஹுஜனிப்ரதாத் । மதர்சனாரதம் (கஸம்) வித்தி பக்தஞ்ச முனிஸத்தம
தசாஸ்து ஜன்ம தத்விஷ்ணோரேகஸ்மின் தத்ர ஜன்மனி ।
ஸ்த்ரியா வியுக்தோऽதிசிரம் து:கீ பவது நான்யத: ॥ 32
மதாக்ஞயா குருஷ்வேதம் மத்பக்தானும் த்வமக்ரணீ: । ததாஸ்த்விதி முனி: ப்ராஹ ப்ரணம்ய பரமேச்வரம்
ததா புனருமாகாந்தம் ரமாகாந்த: ப்ரணம்யதம் । ப்ரார்த்தயாமாஸ பகவன் தசஸ்வபிச ஜன்மஸு ॥ 34

அந்த அந்த ஒவ்வொரு ஜன்மங்களிலும் மிகுந்த துக்கத்தைக் கொடுக்கும் மனைவியை இழத்தல் ஏற்படக் கடவது. மேலும் உலகில் 'இந்த விஷ்ணுவை மட்டும் ஆராதிப்பவர்களான பக்தர்கள் எல்லாம் பாஷண்டிகளாக ஆகட்டும் (25) இவ்வாறு சபித்துவிட்டு ஸ்ரீ பரமேச்வரனிடமிருந்து தான் ஸித்திபெற்ற ம்ருதஸஞ்சீவினி என்ற வித்தையால் தன் மனைவியை பிழைக்கச் செய்தார். (26) பிறகு அசுரர்களை நாசம் செய்கின்ற விஷ்ணுவானவர் அதைக் கேட்டு நடு நடுங்கி அந்த பாபம் தீருவதற்காக எல்லா அபீஷ்டங்களையும் அளிக்கக்கூடிய காஞ்சீபுரத்திற்குச் சென்று (27) அங்கு தேவாதி தேவரான ஸ்ரீ மஹாதேவரை பூஜித்து அதனால் பிரஸன்னராகி ரிஷபாரூடராக காட்சி அளித்த ஸ்ரீ பகவானைக்கண்டு நமஸ்கரித்து மனதில் மிகுந்த பயத்தோடு சாப மோக்ஷத்தை வேண்டினார். (28) ஓ விஷ்ணுவே, எனது பக்தர்களால் கொடுக்கப்பட்ட சாபத்திற்கு அவர்களாலேயே சாபவிமோசனம் கொடுக்கத்தக்கதேயன்றி நானே அதற்கு விமோசனம் செய்வதில்லை என்று சபதம் செய்திருக்கிறேன். இவ்வாறு பிரும்ம விஷ்ணுகளுக்கு ஈசனான மஹேச்வரன் விஷ்ணுவைப் பார்த்து மந்தஹாஸத்தோடு கூறிவிட்டு, நினைத்த மாத்திரத்தில் அங்கு தோன்றியவரான பிருகு முனிவரைப் பார்த்து அந்த மஹாதேவர் கூறினார். (30) ஓ பிருகு முனிவரே, இந்த விஷ்ணுவை அநேக கோடி ஜன்மங்களை கொடுக்கக் கூடியதான தங்களுடைய சாபத்தில் இருந்து அவரை விடுவிக்க வேண்டும். ஏனெனில் இவரும் நம்மை பூஜை செய்வதில் மிகுந்த சிரத்தை உள்ள ஓர் பக்தர் என்று அறியவும். (31) ஆகையால் இவருக்கு பத்து ஜன்மங்கள் மட்டும் உண்டாகி அவைகளில் ஒரு ஜன்மாவில் மாத்திரம் மனைவியைவிட்டு பிரிந்து வெகுகாலம் துக்கம் அனுபவிக்கட்டும் அதற்குமேல் வேண்டாம். (32) நீர் எனது பக்தர்களுக்கு எல்லாம் முதல்வராகையால் எனது கட்டளையின்படி இவ்வாறே செய்ய வேண்டும் என்றார். பிருகு முனிவரும் ஸ்ரீ மஹாதேவரை நமஸ்கரித்து அப்படியே ஆகட்டும் என்றார். (33) அப்பொழுது லக்ஷ்மீகாந்தரான ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர்

ममाज्ञाननिवृत्यर्थं निग्रहानुग्रहौ कुरु । त्वमेव देवदेवेश दयालो भक्तवत्सल ॥ ३५
तदुपश्रुत्य भगवानस्त्वित्यन्तर्धिमाययौ । नारायणोऽपि भगवान् स्वमेवाश्रममाश्रयत् ॥ ३६
पुनश्चाप्येकदा विष्णुर्वेदोद्धरणकर्मणे । शाफरीं योनिमासाद्य संहरिष्यन् स तस्करम् ॥ ३७
वेदानां सोमकं दैत्यं विनिगृह्य च लीलया । वेदांश्च वेधसे दत्वा यथापूर्वं जनार्दनः ॥ ३८
अहङ्कारेण तेनैव चार्णवानाञ्च भेदनम् । कुर्वन् सर्वान् समाकृष्य भक्षयामास माधवः ॥ ३९
ततो भीता विरिञ्च्याद्याश्शङ्करं लोकशङ्करम् । कैलासवासिनं देवं प्रीणयित्वा व्यजिज्ञपन् ॥ ४०
देवेनापि समादिष्टश्शास्ता योगी तदाज्ञया । कैवर्ततां समासाद्य माधवं मत्स्यरूपिणम् ॥ ४१
विनिगृह्याक्षियुगळं कुरुविन्दमणिप्रभम् । नखाग्रेण समादाय शिवाग्रे विनिवेदयन् ॥ ४२
निधायैनं नमस्कृत्य तस्थौ योगी कृताञ्जलिः । तदा ब्रह्मादयो देवा महादेवं समार्थयन् ॥ ४३
वयं मत्स्येन देवेश पीडिता भृशमीश्वर । सोऽयं विनिगृहीतश्च जगतां हितकाम्यया ॥ ४४

மமாக்ஞான நிவ்ருத்யர்தம் நிக்ரஹானுக்ரஹௌ குரு ।
த்வமேவ தேவதேவேச தயாளோ பக்தவத்ஸல ॥ 35
ததுபச்ருத்ய பகவானஸ்த்வித்யந்தர்திமாயயௌ । நாராயணோऽபி பகவான் ஸ்வமேவாச்ரமமாச்ரயத் 36
புனச்சாப்யேகதா விஷ்ணுர்வேதோத்தரணகர்மணே ।
சாபரீம் யோனிமாஸாத்ய ஸம்ஹரிஷ்யன் ஸ தஸ்கரம் ॥ 37
வேதானாம் ஸோமகம் தைத்யம் விநிக்ருஹ்யச லீலயா ।
வேதாம்ச்ச வேதஸே தத்வா யதாபூர்வம் ஜனார்தன: ॥ 38
அஹங்காரேண தேனைவசார்ணவானாஞ்ச பேதனம் ।
குர்வன் ஸர்வான் ஸமாக்ருஷ்ய பக்ஷயாமாஸ மாதவ: ॥ 39
ததோ பீதா விரிஞ்ச்யாத்யாச்சங்கரம் லோகசங்கரம் ।
கைலாஸவாஸினம் தேவம் ப்ரீணயித்வா வ்யஜிக்ஞபன் ॥ 40
தேவேனாபி ஸமாதிஷ்டச்சாஸ்தா யோகீ ததாக்ஞயா ।
கைவர்ததாம் ஸமாஸாத்ய மாதவம் மத்ஸ்யரூபிணம் ॥ 41
விநிக்ருஹ்யாக்ஷியுகளம் குருவிந்தமணிப்ரபம் । நகாக்ரேண ஸமாதாய சிவாக்ரே விநிவேதயன் ॥ 42
நிதாயைனம் நமஸ்க்ருத்ய தஸ்தௌ யோகீ க்ருதாஞ்ஜலி: ।
ததா ப்ரம்ஹாதயோ தேவா மஹாதேவம் ஸமார்தயன் ॥ 43
வயம் மத்ஸ்யேன தேவேச பீடிதா ப்ருசமீச்வர । ஸோऽயம் விநிக்ருஹீதச்ச ஜகதாம் ஹிதகாம்யயா ॥ 44

ஸ்ரீ பார்வதீநாதரை நமஸ்கரித்து வேண்டிக்கொண்டதாவது ஓ கருணைக் கடலே, பக்தர்களிடத்தில் அன்பு கொண்டவரே, தேவாதி தேவரே, அந்த பத்து ஜன்மங்களிலும் எனக்கு அஞ்ஞானம் நீங்குவதற்காக தாங்கள் நிக்ரஹ அனுக்ரஹங்களை செய்ய வேண்டும் என வேண்டினார். (35) அதைக் கேட்டு மஹேச்வரரும் அப்படியே ஆகட்டும் என்று அருளிவிட்டு மறைந்தார். பகவானான ஸ்ரீ நாராயணரும் தன் இருப்பிடம் சேர்ந்தார். (36) பிறகு ஓர் சமயத்தில் ஸோமகன் என்ற அசுரனிடத்தில் இருந்து வேதங்களை பிடுங்கிவருவதற்காக ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் மத்ஸ்ய யோனியில் பிறந்து வேதங்களை திருடிக்கொண்டுபோன ஸோமகன் என்ற அசுரனை விளையாட்டாக கொன்று வேதங்களை கொண்டுவந்து முன்போல் பிரும்மாவிடம் கொடுத்துவிட்டு பிறகு அந்த விஷ்ணுவானவர் (38) அதனால் கர்வம் அடைந்தவராகி ஸமுத்திரங்களை எல்லாம் அல்லோலகல்லோலமாய் கலக்கி யாவரையும் எடுத்து சாப்பிட்டார். (39) பிறகு பிரும்மா முதலிய தேவர்கள் எல்லாம் பயந்தவர்களாகி உலகங்களுக்கெல்லாம் க்ஷேமங்களை அளிக்கின்றவரும், கைலாஸவாஸியுமான ஸ்ரீ சங்கரரை ஸந்தோஷிக்கச் செய்து இது விஷயத்தை தெரிவித்துக் கொண்டார்கள். (40) அப்பொழுது ஸ்ரீ மஹாதேவரால் உத்திரவிடப்பட்டவரும், யோகீச்வரருமான மஹாசாஸ்தாவானவர் அவருடைய கட்டளையின்படி ஓர் செம்படவனாக ஆகி மத்ஸ்ய உருவம் கொண்ட மாதவரை (41) அடக்கி தன் நகத்தின் நுனியில் பத்மராகமணிக்கு ஒப்பான காந்தியை உடைய இரண்டு கண்களையும் பிடுங்கிவந்து ஸ்ரீ பரமேச்வரனிடத்தில் அறிவித்து அவைகளை அவர் ஸன்னதியில் வைத்து நமஸ்கரித்து அஞ்சலி செய்து கொண்டு நின்றார். அப்பொழுது பிரும்மா முதலிய தேவர்கள் எல்லாம் ஸ்ரீ மஹாதேவரிடம் பிரார்த்தித்து கொண்டதாவது. (43) ஓ தேவேசா மத்ஸ்யரூபியான விஷ்ணுவால் நாங்கள் மிகவும் துன்பம் அடைந்தோம். அப்படிப்பட்ட மத்ஸ்யமானது

तस्यास्याक्षियुगं त्वेतत्तवास्त्वाभरणे मणिः । इति संप्रार्थितो देवैस्तदक्षियुगळं मणिम् ॥ ४५
दधार मुण्डमालायां दयानिधिरुमासखः । गतमोहः पुनर्विष्णुर्ध्यात्वा देवं जनार्दनः ॥ ४६
शिवपूजाप्रभावेन पूर्वं सोमकमर्दयम् । मोहेनैव ततः पश्चाज्जगन्ति तमसावृतः ॥ ४७
शासितोऽस्मि जगद्धात्रा कृतार्थोऽस्मि ततः कृतः । एतदागोनिवृत्त्यर्थं पूजयिष्यामि शङ्करम् ॥ ४८
इति काञ्चीपुरीं प्राप्य पूजयामास तत्र तम् । मत्स्यरूपाय वै तस्मै प्रससाद पिनाकधृक् ॥ ४९
वरेण छन्दयामास मत्स्यरूपं जगत्पतिः । वृतोवरश्च तेनापि निग्रहोऽयमनुग्रहः ॥ ५०
ममास्तु देवकृपया मत्स्यरूपं तु मां जनाः । ये यजन्ति जगत्यस्मिंस्तेषामिष्टप्रदो भव ॥ ५१
कृपया तव देवेश वरदोऽस्मि महेश्वर । मयाचरितमागस्त्वं तितिक्ष जगदीश्वर ॥ ५२
इतीशोऽभिहितः पूर्वं विष्णुना मत्स्यरूपिणा । दत्वाऽन्तर्धानमगमल्लोकानां हितकाम्यया ॥ ५३
विष्णुश्च वैष्णवं लोकमासाद्यापालयत्स्वकम् । पुनश्च विष्णुरन्यस्मिन्युगे कूर्मत्वमेत्य वै ॥ ५४
मन्थानं मन्थरं कृत्वा योक्त्रं कृत्वा च वासुकिम् । देवासुरगणैस्साकं ममन्थ क्षीरसागरम् ॥ ५५

தஸ்யாஸ்யாக்ஷியுகம் த்வேதத்தவாஸ்த்வாபரணே மணி: ।
இதி ஸம்ப்ரார்திதோ தேவைஸ்ததக்ஷியுகளம் மணிம் ॥ 45
ததார முண்டமாலாயாம் தயாநிதிருமாஸக: । கதமோஹ: புனர்விஷ்ணுர்த்யாத்வா தேவம் ஜனார்தன: 46
சிவபூஜாப்ரபாவேன பூர்வம் ஸோமகமர்தயம் । மோஹேனைவ தத: பச்சாஜ்ஜகந்தி தமஸாவ்ருத: ॥ 47
சாஸிதோऽஸ்மி ஜகத்தாத்ரா க்ருதார்தோஸ்மி தத: க்ருத: ।
ஏததாகோனிவ்ருத்யர்தம் பூஜயிஷ்யாமி சங்கரம் ॥ 48
இதி காஞ்சீபுரீம் ப்ராப்ய பூஜயாமாஸ தத்ர தம் । மத்ஸ்யரூபாய வை தஸ்மை ப்ரஸஸாத பிநாகத்ருக் ॥ 49
வரேண ச்சந்தயாமாஸ மத்ஸ்யரூபம் ஜகத்பதி: । வ்ருதோவரச்ச தேனாபி நிக்ரஹோऽயமனுக்ரஹ: ॥ 50
மமாஸ்து தேவக்ருபயா மத்ஸ்யரூபம் து மாம் ஜனா: । யே யஜந்தி ஜகத்யஸ்மின்தேஷாமிஷ்டப்ரதோ பவ
க்ருபயா தவ தேவேச வரதோऽஸ்மி மஹேச்வர । மயா சரிதமாகஸ்த்வம் திதிக்ஷ ஜகதீச்வர ॥ 52
இதீசோऽபிஹித: பூர்வம் விஷ்ணுனாமத்ஸ்யரூபிணா । தத்வாऽந்தர்தானமகமல்லோகானாம் ஹிதகாம்யயா 53
விஷ்ணுச்ச வைஷ்ணவம் லோகமாஸாத்யாபாலயத்ஸ்வகம் ।
புனச்ச விஷ்ணுரன்யஸ்மின்யுகே கூர்மத்வமேத்ய வை ॥ 54
மந்தானம் மந்தரம் க்ருத்வா யோக்த்ரம் க்ருத்வா ச வாஸுகிம் ।
தேவாஸுரகணைஸ்ஸாகம் மமந்த க்ஷீரஸாகரம் ॥ 55

லோக க்ஷேம நிமித்தமாய் தங்களால் சிக்ஷிக்கப்பட்டது. அதனுடைய இந்த இரு விழிகளையும் தாங்கள் ஆபரணத்தில் மணிகளாக தரித்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு தேவர்களால் பிரார்த்திக்கப்பட்ட தயாநிதியான, பார்வதிபதியானவர் அவ்விரு விழிகளையும் தனது முண்ட மாலையில் மணிகளாக தரித்துக் கொண்டார். பிறகு விஷ்ணுவானவர் மோஹம் நீங்கியவராகி ஸ்ரீ மஹாதேவரை த்யானம் செய்து, (46) நான் முன்பு சிவபூஜையின் மஹிமையால் அல்லவா ஸோமகன் என்ற அசுரனை கொன்றேன், பிறகு புத்தி மோஹத்தால் அறிவற்றவனாகி உலகங்களை நாசம் செய்தபடியால் ஜகதீசரான மஹேச்வரரால் தண்டிக்கப் பட்டு அதனால் (47) கிருதார்த்தனாக செய்யப்பட்டேன். ஆயினும் நான் அந்த பாவத்தை போக்கடிப்ப தற்காக ஸ்ரீ சங்கரரை பூஜை செய்யப் போகிறேன் (48) என்று எண்ணி காஞ்சீபுரம் சென்று அங்கு அவரை பூஜித்தார். அப்பொழுது பினாகபாணியானவர் மத்ஸ்யரூபியான அந்த மஹாவிஷ்ணுவுக்கு பிரஸன்னராகி, (49) அவருக்கு வேண்டிய வரனை கேட்கும்படி சொன்னார். பிறகு விஷ்ணுவானவர் வரன் கேட்டதாவது. ஓ தேவேசா தாங்கள் எனக்கு கொடுத்த இந்த தண்டனையானது தங்களுடைய கிருபையால் அனுக்ரஹமாக வேண்டும். இவ்வுலகில் மத்ஸ்ய ரூபியான என்னை பூஜிக்கும் ஜனங்களுக்கு தாங்கள் வேண்டிய பொருளை அளிக்க வேண்டும். (51) ஓ தேவேசா தங்களுடைய அருளால் நானும் மத்ஸ்ய ரூபியான என்னை பூஜிக்கின்றவர்களுக்கு வேண்டிய வரனை கொடுக்க தகுதியுள்ளவனாக வேண்டும். என்னால் செய்யப்பட்ட குற்றத்தை தாங்கள் மன்னிக்க வேண்டும். (52) இவ்வாறு மத்ஸ்ய ரூபியான விஷ்ணுவால் பிரார்த்திக்கப்பட்ட ஸ்ரீ ஜகதீசன் உலகத்தின் க்ஷேமார்த்தமாக அப்படியே ஆகட்டும் என்று சொல்லிவிட்டு மறைந்தார். (53) பிறகு விஷ்ணுவும் தன் உலகமான வைகுண்டத் திற்கு சென்று தனது கடமையை செய்து வந்தார். (உலகங்களை காத்து வந்தார்) பிறகு மற்றொரு யுகத்தில் விஷ்ணுவானவர் ஆமையின் தன்மையை அடைந்து, (54) மந்தரமலையை மத்தாகவும்,

अमृतञ्च समासाद्य तेन गर्वेण मोहितः । सुरान् संक्षोभयामास सागरैस्सह कच्छपः ॥ ५६
ततो देवासुरास्सर्वे देवं गत्वा व्यजिज्ञपन् । तदानीं देवदेवोऽसौ विघ्नराजमरिन्दमम् ॥ ५७
तन्निग्रहार्थमाचष्टे देवानां हितकाम्यया । शुण्डाग्रेण तदा कूर्ममादाय गणनायकः ॥ ५८
सम्यगुत्तानितं कृत्वा संपीड्यास्यैव कर्परम् । देवेष्वपि च पश्यत्सु शिवाग्रे सन्न्यवेशयत् ॥ ५९
तदानीमीश्वरो देवान् समालोक्येदमब्रवीत् । अनेन कच्छपास्थ्ना मे किं भावि वदताधुना ॥ ६०
ततोऽब्रुवन् प्रणम्येशं ब्रह्मादिविबुधेश्वराः । अरक्षस्त्वमनेनास्मान्विक्रमेण यदीश्वर ॥ ६१
तस्यैव ज्ञापकत्वेन तवाङ्गेऽस्तु विभूषणम् । कूर्मास्थि मुण्डमालायां नायकत्वमुपैत्विदम् ॥ ६२
विष्णोरपीदं दृष्ट्वा तु नाहङ्कारो भवेत्पुनः । विज्ञापितस्सुरैरेवं विश्वेशोऽधात्तदस्थि तत् ॥ ६३
विष्णुश्च गतसंमोहो विश्वेशार्चाविधेर्बलात् । अनागास्संबभूवाथ सनाकपतिवन्दितः ॥ ६४
एकदा पीडितो देवा हिरण्याक्षेण वैरिणा । विष्णुं शरणमभ्येत्य समाचख्युस्ततो भयम् ॥ ६५

அம்ருதஞ்ச ஸமாஸாத்ய தேன கர்வேண மோஹித: ।
ஸுரான் ஸம்க்ஷோபயாமாஸ ஸாகரைஸ்ஸஹ கச்சப: ॥ 56

ததோ தேவாஸுராஸ்ஸர்வே தேவம் கத்வா வ்யஜிக்ஞபன் ।
ததானீம் தேவதேவோऽஸௌ விக்னராஜமரிந்தமம் ॥ 57

தன்னிக்ரஹார்தமாசஷ்டே தேவானாம் ஹிதகாம்யயா । சுண்டாக்ரேண ததா கூர்மமாதாய கணநாயக: 58

ஸம்யகுத்தாநிதம் க்ருத்வா ஸம்பீட்யாஸ்யைவ கர்பரம் ।
தேவேஷ்வபி ச பச்யத்ஸு சிவாக்ரே ஸந்ந்யவேசயத் ॥ 59

ததானீமீச்வரோ தேவான் ஸமாலோக்யேதமப்ரவீத் । அனேன கச்சபாஸ்த்னா மே கிம் பாவி வததாதுனா 60

ததோऽப்ருவன் ப்ரணம்யேசம் ப்ரம்ஹாதிவிபுதேச்வரா: ।
அரக்ஷஸ்த்வமனேனாஸ்மான் விக்ரமேண யதீச்வர ॥ 61

தஸ்யைவ ஞாபகத்வேன தவாங்கேऽஸ்து விபூஷணம் ।
கூர்மாஸ்தி முண்டமாலாயாம் நாயகத்வமுபைத்விதம் ॥ 62

விஷ்ணோரபீதம் த்ருஷ்ட்வா து நாஹங்காரோ பவேத்புன: ।
விக்ஞாபிதைஸ்ஸுரைரேவம் விச்வேசோऽதாத்ததஸ்திதத் ॥ 63

விஷ்ணுச்ச கதஸம்மோஹோ விச்வேசார்சாவிதேர்பலாத் । அனாகாஸ்ஸம்பபூவாத ஸனாகபதிவந்தித: 64

ஏகதா பீடிதோ தேவா ஹிரண்யாக்ஷேண வைரிணா ।
விஷ்ணும் சரணமப்யேத்ய ஸமாசக்யுஸ்ததோ பயம் ॥ 65

வாஸுகியை கயிறாகவும் செய்து கொண்டு தேவ அசுர கணங்களோடுகூட பார்க்கடலை கடைந்தார். (55) அமிர்தம் கிடைத்த உடன் அந்த கர்வத்தினால் அவர் புத்தி மோஹமடைந்து, ஸமுத்திரங்களை கலக்கி, தேவர்களையும் நடுங்கச் செய்தார். (56) பிறகு தேவாசுரர்கள் யாவரும் ஸ்ரீ மஹாதேவரிடம் சென்று தெரிவித்துக் கொண்டனர். அப்பொழுது தேவாதி தேவரான ஸ்ரீ மஹேச்வரன் அந்த ஆமையை சிக்ஷித்து தேவர்களுக்கு நன்மையை செய்வதற்காக சத்ருக்களை அடக்கவல்ல ஸ்ரீ விக்நேச்வரரை அனுப்பினார். அப்பொழுது கணாதிபரும் தன் துதிக்கையினால் அந்த ஆமையை பிடித்து, (58) நன்றாக மல்லாத்தி போட்டு துவைத்து அதன் முதுகின் ஓட்டை எடுத்துக் கொண்டு தேவர்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது அதை ஸ்ரீ பரமசிவனின் முன்னிலையில் கொண்டுவைத்தார் (59) அப்பொழுது ஈசுவரன் தேவர்களை பார்த்து ஓ தேவர்களே, நான் இந்த ஆமையின் ஓட்டை என்ன செய்யட்டும் என்பதை சொல்லுங்கள். (60) பிறகு பிரும்மா முதலிய தேவர்கள் எல்லாம் ஈசுவரனை நமஸ்கரித்து ஓ ஜகதீசா தாங்கள் தங்களுடைய பராக்ரமத்தினால் எங்களை ரக்ஷித்தபடியால் (61) அந்த ஞாபகம் இருக்கும்படி தங்களுடைய சரீரத்திற்கு அலங்காரமாக இந்த ஆமை ஓட்டை முண்ட மாலையின் நடுநாயகமாக தரித்துக்கொள்ள வேண்டும். (62) இதை பார்ப்பதினால் விஷ்ணுவுக்குகூட இனி அஹங்காரம் உண்டாகாது. இவ்வாறு தேவர்களால் வேண்டப்பட்ட தேவேசன் அந்த ஓட்டை அப்படியே தரித்துக் கொண்டார். (63) அப்பொழுது தேவேந்திரனால் நமஸ்கரிக்கப்படுகின்ற விஷ்ணுவும் மோஹம் தெளிந்தவராகி ஸ்ரீ விச்வேசரை பூஜித்து அவர் அருளால் பாபமற்றவராக ஆனார். (64) பிறகு ஒரு சமயத்தில் தேவர்கள் ஹிரண்யாக்ஷன் என்ற சத்ருவால் பீடிக்கப்பட்டு விஷ்ணுவை சரணமடைந்து அவர்களுக்கு

दत्वातु तेषामभयमसुरारिस्सुराग्रणीः । वाराहं रूपमासाद्य ब्रह्मनासापुटाग्रतः ॥ ६६
हिरण्याक्षमसौ हत्वा मग्नामप्युज्जहार गाम् । तेन गर्वेण स हरिरर्णवानाञ्च मेदनम् ॥ ६७
सतानां भूधराणाञ्च चकार सुमहद्वपुः । दृष्ट्वा तं तादृशं विष्णुं देवास्सब्रह्मकास्तदा ॥ ६८
व्यजिज्ञपन्महेशाय वराहाद्भयमागतम् । ततो देवादिदेवोऽपि वराहस्यास्य निग्रहे ॥ ६९
सुब्रह्मण्यं शिशुं पुत्रं सन्दिदेशात्मनः प्रभुः । तदाज्ञया कुमारोऽपि वराहं पर्वताकृतिम् ॥ ७०
जग्राह शृङ्गे हस्ताभ्यां परिभ्राम्य च लीलया । संहृत्य शृङ्गमस्यैकं निदधे सन्निधौ विभोः ॥ ७१
कपर्दगतचन्द्रांशं द्वितीयमिव शङ्करः । दधावाभरणत्वेन देवानामपि पश्यताम् ॥ ७२
अङ्कमारोप्य तं पुत्रं लाळयामास हृष्टधीः । ब्रह्मादयोऽथ विबुधा नमस्कृत्य यथायथम् ॥ ७३
जग्मुर्देवं तदा विष्णुर्वीतमोहस्समुत्थितः । पुनश्च पूर्ववद्देवं समाराध्याप निर्वृतिम् ॥ ७४
एकदाच पुनर्विष्णुर्हिरण्यं दानवेश्वरम् । संहरिष्यन् समभ्यर्च्य शिवं लब्धवरोबली ॥ ७५

தத்வாது தேஷாமபயமஸுராரிஸ்ஸுராக்ரணீ: । வாராஹம் ரூபமாஸாத்ய ப்ரம்ஹநாஸாபுடாக்ரத: ॥ 66
ஹிரண்யாக்ஷமஸௌ ஹத்வா மக்னாமப்யுஜ்ஜஹார காம் ।
தேன கர்வேண ஸ ஹரிரர்ணவானாஞ்ச பேதனம் ॥ 67
ஸப்தானாம் பூதராணாஞ்ச சகார ஸுமஹத்வபு: ।
த்ருஷ்ட்வா தம் தாத்ருசம் விஷ்ணும் தேவாஸ்ஸப்ரஹ்மகாஸ்ததா 68
வ்யஜிக்ஞபன்மஹேசாய வராஹாத்பயமாகதம் । ததா தேவாதிதேவோऽபி வராஹஸ்யாஸ்ய நிக்ரஹே 69
ஸுப்ரம்ஹண்யம் சிசும் புத்ரம் ஸந்திதேசாத்மன: ப்ரபு: ।
ததாக்ஞயா குமாரோऽபி வராஹம் பர்வதாக்ருதிம் ॥ 70
ஜக்ராஹ ச்ருங்கே ஹஸ்தாப்யாம் பரிப்ராம்ய ச லீலயா ।
ஸம்ஹ்ருத்ய ச்ருங்கமஸ்யைகம் நிததே ஸன்னிதௌ விபோ: ॥ 71
கபர்தக்ருதசந்த்ராம்சம் த்விதீயமிவ சங்கர: । ததாவாபரணத்வேன தேவானாமபி பச்யதாம் ॥ 72
அங்கமாரோப்ய தம் புத்ரம் லாளயாமாஸ ஹ்ருஷ்டதீ: ।
ப்ரம்ஹாதயோऽத விபுதா நமஸ்க்ருத்ய யதாயதம் ॥ 73
ஜக்முர்தேவம் ததா விஷ்ணுர்வீதமோகஸ்ஸமுத்தித: । புனச்ச பூர்வத்தேவம் ஸமாராத்யாப நிர்வ்ருதிம் 74
ஏகதாச புனர்விஷ்ணுர்ஹிரண்யம் தானவேச்வரம் ।
ஸம்ஹரிஷ்யன் ஸமப்யர்ச்ய சிவம் லப்தவரோ பலீ ॥ 75

ஏற்பட்ட பயத்தை சொன்னார்கள். (65) அப்பொழுது தேவர்களுக்கு தலைவரும், அசுரர்களை சிக்ஷிப்பவருமான ஸ்ரீ விஷ்ணுவானவர் அவர்களுக்கு அபயம் அளித்து பன்றி உருவம் எடுத்துக் கொண்டு பிரும்மாவின் மூக்கின் நுனியில் இருந்து ஏவிவிடப்பட்டு, (66) ஹிரண்யாக்ஷனை கொன்று ஜலத்திற்குள் முழுகி இருந்த பூமியை மேலே கொண்டுவந்தார். பிறகு விஷ்ணுவானவர் அந்த கர்வத்தினால் பெரிய சரீரத்தை (பன்றியின் உருவத்தை) கொண்டவராகி ஏழு கடல்களையும் கலக்கி மலைகளையும் உடைத்தார். விஷ்ணு அவ்வாறு செய்வதைகண்ட பிரும்மா முதலிய தேவர்கள் எல்லாம் (68) ஸ்ரீ மஹேச்வரனிடத்தில் பன்றியால் ஏற்பட்ட பயத்தை அறிவித்தார்கள். பிறகு தேவாதி தேவரும் தனக்குத்தானே ஈசுவரனுமான ஸ்ரீ மஹாதேவர் அப்பன்றியை சிக்ஷிப்பதற்காக (69) தனது செல்வ குழந்தையான ஸ்ரீ முருகனை கட்டளையிட்டார். அவர் உத்திரவின்பேரில் ஸ்ரீ முருகனும் மலைபோன்ற உருவத்தை கொண்ட அப்பன்றியை (70) தனது கைகளால் அதனுடைய தித்தி பற்களை பிடித்து விளையாட்டாக கரகரவென்று சுற்றி அடித்து அதனுடைய ஓர் தித்தி பல்லை பிடுங்கி கொண்டு போய் ஸ்ரீ பிரபுவின் ஸன்னதியில் கொண்டு வைத்தார். (71) ஸ்ரீ சங்கரர் தேவர்கள் எல்லாம் பார்த்துக்கொண்டு இருக்கும்பொழுது தனது ஜடாமுடியில் விளங்கும் சந்திரகலைக்கு ஒப்பான அந்த தித்தி பல்லை இரண்டாவது சந்திர கலையை போல் ஆபரணமாக தரித்துக் கொண்டார். (72) பிறகு அப்படிப்பட்ட தன் புத்திரனை முருகனை மடியில் வைத்துக் கொண்டு சந்தோஷமாக கொஞ்சி விளையாடினார். பிரும்மா முதலிய தேவர்களும் ஸ்ரீ மஹாதேவரை முறைப்படி நமஸ்கரித்துவிட்டு சென்றார்கள் அப்பொழுது விஷ்ணுவும் மூர்ச்சை தெளிந்து எழுந்து முன்போலவே ஸ்ரீ மஹாதேவரை பூஜித்து சுகமடைந்தார். (74) பிறகு ஓர் சமயம் விஷ்ணுவானவர் ஹிரண்யகசிபு என்ற ஓர் அசுரராஜனை கொல்வதற்காக ஸ்ரீ பரமேச்வரரை பூஜித்துவரனை

नृसिंहवपुरास्थाय वक्षो भित्वा नखैः पुनः । पपौ क्रोधेन तद्रक्तं संहृत्यासुरसैनिकान् ॥ ७६
अहङ्कारेण तेनैव सर्वान् संहर्तुमुद्यतः । ततो देवा भयाविष्टाश्शरणं प्रापुरीश्वरम् ॥ ७७
वीरभद्रं तदा देवस्सन्दिदेशास्य निग्रहे । शरभं रूपमास्थाय वीरभद्रः प्रतापवान् ॥ ७८
गृहीत्वा नारसिंहं तं द्विधाकृत्वात्मलीलया । भित्वा त्वचमतिस्वच्छामुपायनमुपाहरत् ॥ ७९
तदाप्रभृति देवोऽपि नारसिंहाम्बरोऽभवत् । सोऽपिदेवं समाराध्य विगतैना बभूवह ॥ ८०
एकदा पुनरेवैष बलिनिग्रहमाचरन् । बभूव काश्यपसुतो वामनो मधुसूदनः ॥ ८१
ईश्वराप्तवरोऽभ्येत्य यागशालामयाचत । पदत्रयमितां भूमिमात्मनः स्थितये पुनः ॥ ८२
प्रतिगृह्य ततो भूमिमेकेनैव पदा दिवम् । विक्रम्यान्यपदालाभाद्बलिं कारागृहान्तरे ॥ ८३
निवेश्य राज्यं भूयोऽपि देवेन्द्राय त्रिविक्रमः । दत्वाऽण्डमेतद्भग्नं स्याद्यथा संवर्धयत्पुनः ॥ ८४
ततो देवैर्महादेवो ज्ञात्वा वृत्तान्तमस्य तु । भैरवं संदिदेशास्य निग्रहे भैरवाकृतिम् ॥ ८५

ந்ருஸிம்ஹவபுராஸ்தாய வக்ஷோ பித்வா நகை: புன: ।
பபௌ க்ரோதேன தத்ரக்தம் ஸம்ஹ்ருத்யாஸுரஸைனிகான் ॥ 76

அஹங்காரேண தேனைவ ஸர்வான் ஸம்ஹர்துமுத்யத: ।
ததோ தேவா பயாவிஷ்டாச்சரணம் ப்ராபுரீச்வரம் ॥ 77

வீரபத்ரம் ததா தேவஸ்ஸந்திதேசாஸ்ய நிக்ரஹே । சரபம் ரூபமாஸ்தாய வீரபத்ர: ப்ரதாபவான் ॥ 78

க்ருஹீத்வா நாரஸிம்ஹம் தம் த்விதாக்ருத்வாத்மலீலயா ।
பித்வா த்வசமதிஸ்வச்சாமுபாயனமுபாஹரத் ॥ 79

ததாப்ரப்ருதிதேவோऽபி நாரஸிம்ஹாம்பரோऽபவத் । ஸோऽபி தேவம் ஸமாராத்ய விகதைனா பபூவஹ 80

ஏகதா புனரேவைஷ பலிநிக்ரஹமாசரன் । பபூவ காச்யபஸுதோ வாமனோ மதுஸூதன: ॥ 81

ஈச்வராப்தவரோऽப்யேத்ய யாகசாலாமயாசத । பதத்ரயமிதாம் பூமிமாத்மன: ஸ்திதயே புன: ॥ 82

ப்ரதிக்ருஹ்ய ததோ பூமிமேகேனைவ பதா திவம் ।
விக்ரம்யான்யபதாலாபாத்பலிம் காராக்ருஹாந்தரே ॥ 83

நிவேச்ய ராஜ்யம் பூயோऽபி தேவேந்த்ராய த்ரிவிக்ரம: ।
தத்வாண்டமேதத்பக்னம் ஸ்யாத்யதா ஸம்வர்தயத்புன: ॥ 84

ததோ தேவைர்மஹாதேவோ க்ஞாத்வா வ்ருத்தாந்தமஸ்ய து ।
பைரவம் ஸந்திதேசாஸ்ய நிக்ரஹே பைரவாக்ருதிம் ॥ 85

பெற்று மிகுந்த பலமடைந்தவராகி, (75) நரசிம்ம உருவமெடுத்து அவனுடைய மார்பை பிளந்து ரத்தத்தை குடித்து மிகுந்த கோபத்தோடு மற்றுமுள்ள அசுர சைன்யங்களையும் நாசம் செய்து, (76) அப்படிப்பட்ட மதத்தினால் எல்லா உலகங்களையும் நாசம் செய்ய முயன்றார். பிறகு தேவர்கள் பயமடைந்தவர்களாகி ஸ்ரீ ஜகதீசனை சரணமடைந்தார்கள். (77) அப்பொழுது பகவான் அந்த நரசிம்மத்தை அடக்குவதற்காக வீரபத்திரரை அனுப்பினார். மிக பலசாலியான அந்த வீரபத்திரர் சரப உருவம் எடுத்துக் கொண்டு, (78) அந்த நரசிம்மத்தை விளையாட்டாக பிடித்து இரண்டாக கிழித்து மிக அழகிய அதன் தோலை உரித்தெடுத்துக் கொண்டு ஸ்ரீ பிரபுவின் சன்னிதானத்தில் காணிக்கையாக கொண்டு வைத்தார். (79) அது முதற்கொண்டு ஸ்ரீ மஹாதேவர் நரசிம்மத்தின் தோலை ஆடையாக அணிந்து வந்தார். பிறகு அந்த விஷ்ணுவும் மஹாதேவரை பூஜித்து பாபமற்றவராக ஆனார். (80) மற்றும் ஒரு சமயம் மஹாவிஷ்ணுவானவர் மஹாபலியை நிக்ரஹம் செய்வதற்காக காச்யப முனிவரிடத்தில் வாமனர் என்ற பிள்ளையாக பிறந்து, (81) ஸ்ரீ சங்கரரிடத்தில் வரனை பெற்று மஹாபலியின் யாசகசாலைக்கு சென்று தான் வசிப்பதற்காக மூன்று அடி அளவு பூமியை யாசித்தார். (82) அவரிடமிருந்து பூமியை பெற்று ஓர் அடியால் பூமியையும் மற்றொரு அடியால் ஆகாயத்தையும் திரிவிக்ரம உருவம் கொண்டு அளந்து மற்றோர் அடிக்கு இடமில்லாததால் அந்த பலிசக்ரவர்த்தியை சிறையில் அடைத்து ராஜ்யத்தை மறுபடியும் இந்திரனிடத்தில் ஒப்புவித்து பிறகு அண்டம் வெடிக்கும்படி உருவத்தை பெரிதாக்கி வளர்ந்தார். (84) பிறகு மஹாதேவர் அந்த விஷயத்தை தேவர்கள்மூலம் அறிந்து அவரை நிக்ரஹம் செய்வதற்காக பயங்கரமான உருவத்தை கொண்ட ஸ்ரீ பைரவ மூர்த்தியை அனுப்பினார். (85) பிறகு

सोऽपि तं त्वरयाऽभ्येत्य वृद्धमण्डान्तमच्युतम् । प्रह्लत्योरसि हस्तेन निपात्योत्कृत्य च त्वचम् ॥ ८६
आत्मनः कञ्चुकत्वेन दधावानीलकोमलम् । तस्यास्थ्यपि महद्दीर्घं कङ्कालाख्यं दधौ करे ॥ ८७
ततो जग्मुर्निरातङ्कास्तदा सर्वे सुरादिवम् । उपेन्द्रोऽपि महादेवं समाराध्य यथापुरम् ॥ ८८
शान्तापराधस्समभूज्जगाम च यथागतम् । एवं दशावतारेषु निगृहीतः पिनाकिना ॥
पञ्चास्त्वनुगृहीतश्च वक्ष्ये श्रृण्वन्तु तत्कथाम् ॥ ८९

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे चतुष्षष्टितमोऽध्यायः ॥

॥ अथ पञ्चषष्टितमोऽध्यायः ॥

भृगुशापानुसारेण विष्णोः दशावतारप्राप्तिः ॥

सूतः — जामदग्न्योऽथ रामोऽभूद्भगवान् पुरुषोत्तमः । भृगुशापेन तेनैव रेणुकायाञ्च तत्स्त्रियाम् ॥ १

ஸோऽபி தம் த்வரயாப்யேத்ய வ்ருத்தமண்டாந்தமச்யுதம் ।
ப்ரஹ்ருத்யோரஸி ஹஸ்தேன நிபாத்யோத்க்ருத்ய ச த்வசம் ॥ 86
ஆத்மன: கஞ்சுகத்வேன ததாவாநீலகோமளம் ।
தஸ்யாஸ்த்யபி மஹத்தீர்கம் கங்காளாக்யம் ததௌ கரே ॥ 87
ததோ ஜக்முர்னிராதங்காஸ்ததா ஸர்வே ஸுராதிவம் ।
உபேந்த்ரோऽபி மஹாதேவம் ஸமாராத்ய யதாபுரம் ॥ 88
சாந்தாபராதஸ்ஸமபூஜ்ஜகாம ச யதாகதம் ।
ஏவம் தசாவதாரேஷு நிக்ருஹீத: பிநாகிநா ॥
பஞ்சஸ்வனுக்ரஹீதச்ச வக்ஷ்யே ச்ருண்வந்து தத்கதாம் ॥ 89

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேசகாண்டே சதுஷ்ஷஷ்டிதமோऽத்யாய:

॥ அத பஞ்சஷஷ்டிதமோऽத்யாய: ॥

பிருகு முனிவரின் சாபத்தை அனுசரித்து ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்கு பத்து அவதாரங்கள் ஏற்படுதல்.

ஸூத: — ஜாமதக்னியோऽதராமோऽபூத்பகவான் புருஷோத்தம: ।
ப்ருகுசாபேன தேனைவ ரேணுகாயாஞ்ச தத்ஸ்த்ரியாம் ॥ 1

அவரும் அண்டம் முழுவதும் வளர்ந்து இருந்த அந்த மஹாவிஷ்ணுவிடம் வேகமாய் சென்று கையினால் அவர் மார்பில் அறைந்து கீழேதள்ளி மிக கருப்பானதும் மிருதுவானதுமான அவரது தோலை உரித்து தனக்கு கவசமாக அணிந்து கொண்டார். வெகு நீளமான கங்காளமென்ற அவருடைய எலும்பையும் தனது கையில் தரித்துக் கொண்டார். (87) பிறகு தேவர்கள் எல்லாம் பயமற்றவர்களாகி சுவர்க்க மடைந்தார்கள். ஸ்ரீ மஹாவிஷ்ணுவும், மஹாதேவரை முன்போல் பூஜித்து, (88) பாபம் நீங்கியவராகி வந்ததுபோல் திரும்பி சென்றார் ஓ பிராம்மணோத்தமர்களே இவ்விதமாக ஸ்ரீ நாராயணன் பத்து அவதாரங்கள் செய்ததில், ஐந்து அவதாரங்களில் ஸ்ரீ பரமேச்வரரால் நிக்ரஹிக்கப்பட்ட கதை கூறப் பட்டது. பின்னும் ஐந்து அவதாரங்களில் அனுக்ரஹிப்பதான கதையை கூறுகிறேன் கேளுங்கள். (89)

அறுபத்திநான்காவது அத்தியாயம் முற்றிற்று.

அறுபத்தைந்தாவது அத்தியாயம்.

ஸூதமுனிவர் கூறுகிறார் :— ஓ முனிவர்களே, பிறகு பகவானாகிய ஸ்ரீ விஷ்ணுவானவர் ப்ருகு முனிவரின் அந்த சாபத்தினால் ஜமதக்னி முனிவரின் மனைவியான ரேணுகையிடத்தில் பரசுராமராக

तच्चकार पिता रामं नाम्ना रूपादरिन्दमम् । उपनीतश्च कालेन रामः पित्रा महर्षिणा ॥ २
शुश्रूषणपरो नित्यं श्रद्धयाऽनन्यमानसः । केनापिकारणेनैव कदाचित्पितृचोदितः ॥ ३
रामोमातुश्शिरश्छेदं रेणुकायाश्चकार ह । ततः प्रीतेन मनसा रामः प्रोक्तो महर्षिणा ॥ ४
पुत्र शुश्रूषया प्रीतं मां विद्धि वरयाधुना । वरान्यो यो वरोऽभीष्टस्तं तं सर्वं ददामि ते ॥ ५
इति रामोवचः श्रुत्वा पितुर्वव्रे वरानिमान् । मातुः पूर्ववदुत्थानं वरं वव्रे स आदितः ॥ ६
पितुः कोपपरित्यागं कोपनस्याधिकं मुनेः । स्वस्यापि शिवपूजायां श्रद्धावत्त्वमनारतम् ॥ ७
वरत्रयं तदा रामो लब्ध्वात्मपितुरन्तिकात् । वनमाप तपश्चर्तुं शिवपूजापरायणः ॥ ८
तस्मिन् गतेऽर्जुनो यावत्त्यक्तकोपं मुनीश्वरम् । कृतवीर्यसुतो धेनुं कामोपपदभूषिताम् ॥ ९
प्रत्याख्यातो यदा राजा मुनिना कृतवीर्यजः । कोपेनास्य शिरश्छेदं कृत्वा माहिष्मतीमगात् ॥ १०
जमदग्निप्रिया साऽपि रेणुकाग्निं विवेश ह । महत्यैव तदा वृष्ट्या शशामाग्निश्चितागतः ॥ ११

தம் சகார பிதா ராமம் நாம்நா ரூபாதரிந்தமம் | உபனீதச்ச காலேன ராம: பித்ரா மஹர்ஷிணா || 2
சுச்ரூஷணபரோ நித்யம் ச்ரத்தயாऽனன்யமானஸ: | கேனாபி காரணேனைவ கதாசித்பித்ருசோதித: || 3
ராமோ மாதுச்சிரச்சேதம் ரேணுகாயாச்சகார ஹ | தத: ப்ரீதேன மனஸா ராம: ப்ரோக்தோ மஹர்ஷிணா 4

புத்ர சுச்ரூஷயா ப்ரீதிம் மாம் வித்தி வரயாதுனா |
வரான்யோ யோ வரோபீஷ்டஸ்தம் தம் ஸர்வம் ததாமிதே || 5
இதி ராமோ வச: ச்ருத்வா பிதுர்வவ்ரே வரானிமான் |
மாது: பூர்வவதுத்தானம் வரம் வவ்ரே ஸ ஆதித: || 6

பிது: கோபபரித்யாகம் கோபனஸ்யாதிகம் முனே: | ஸ்வஸ்யாபி சிவபூஜாயாம் ச்ரத்தாவத்வமனாரதம் || 7
வரத்ரயம் ததா ராமோ லப்த்வாத்மபிதுரந்திகாத் | வனமாப தபச்சர்தும் சிவபூஜாபரயண: || 8

தஸ்மின் கதேऽர்ஜுனோ யாவத் த்யக்தகோபம் முனீச்வரம் |
க்ருதவீர்யஸுதோ தேனும் காமோபபதபூஷிதாம் || 9
ப்ரத்யாக்யாதோ யதா ராஜா முனினாக்ருதவீர்யஜ: |
கோபேனாஸ்ய சிரச்சேதம் க்ருத்வா மாஹிஷ்மதீமகாத் || 10
ஜமதக்னிப்ரியா ஸாऽபி ரேணுகாக்னிம் விவேசஹ |
மஹாத்யைவ ததா வ்ருஷ்ட்யா சசாமாக்னிச்சிதாகத: || 11

பிறந்தார். (1) பிறகு தந்தையான ஜமதக்னியும் சத்ருக்களை நாசம் செய்யவல்ல பிள்ளைக்கு உருவத்திற்கு ஏற்றவாறு ராமன் என பெயரிட்டார். பிறகு அந்த பரசுராமருக்குத் தந்தையான ஜமதக்னி முனிவர் காலத்தில் உபநயனம் செய்தார். தினந்தோறும் ச்ரத்தையோடும், கவனத்தோடும், தந்தைக்கு பணிவிடை செய்து வந்தார். ஒருநாள் ஏதோ ஒரு காரணத்திற்காக தந்தையால் கட்டளையிடப்பட்டவராகி (3) அந்த பரசுராமன் தன் தாயாகிய ரேணுகாதேவியின் தலையை வெட்டினார். பிறகு ஜமதக்னியானவர் மிக சந்தோஷமடைந்தவராகி பரசுராமரை பார்த்துச் சொன்னார். (4) ஓ மைந்தனே நான் உனது பணிவிடையால் மிகவும் சந்தோஷமடைந்தேன் என்று அறிவாய். நான் இப்பொழுது உனக்கு வேண்டிய வரன்களை எல்லாம் அளிக்கிறேன். நீ வேண்டியதை கேள் என்றார் (5) இவ்வாறு தந்தையின் வார்த்தையைக்கேட்டு பரசுராமன் கேட்டுக்கொண்ட வரன்கள் என்னவென்றால் முதலில் தன் தாய் முன்போல் உயிர்பெற்று எழுந்திருக்க வேண்டும் என்ற வரனை கேட்டுக் கொண்டார். (6) பிறகு தன் தந்தையாகிய மிக கோபிஷ்டரான அந்த முனிவரின் கோபத்தை விட்டுவிடும்படியும் தனக்கு எப்பொழுதும் சிவபூஜையில் மிகுந்த சிரத்தை இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (7) அப்படியே அந்த பரசுராமன் அம்மூன்று வரன்களையும் தன் தந்தையிடமிருந்து பெற்றுக் கொண்டு சிவ பூஜையில் மிக ஈடுபட்டவராகி தவம் செய்வதற்காக காடு சென்றார். (8) அவர் காட்டுக்கு சென்ற பிறகு கிருதவீர்யராஜனின் குமாரரான கார்த்தவீர்யார்ஜுனன் கோபத்தை விட்டவரான ஜமதக்னி முனிவரிடம் வந்து அவரிடமிருந்த காமதேனுவை கேட்டார். (9) ஜமதக்னி முனிவரால் மறுக்கப்பட்ட கார்த்தவீர்யார்ஜுனன் கோபம் அடைந்து அவருடைய தலையை வெட்டிவிட்டு மாஹிஷ்மதி பட்டிணத்திற்குச் சென்று விட்டான். (10) உடன் ஜமதக்னி முனிவரின் மனைவியான ரேணுகாதேவியானவள் அக்னி ப்ரவேசம் செய்துவிட்டாள். அப்பொழுது மிகுந்த மழையால் அந்த சிதையில் இருந்த அக்னியானது

सा पुनर्दग्धवसना रेणुका ऋषिमानिनी । दुःखेन महताक्रान्ता लज्जयाच वराङ्गना ॥ १२
निंबपत्रैस्समाच्छाद्य नग्नावूरुनितंबकौ । चण्डाळश्रेणिमासाद्य कञ्चित्कालमुवासह ॥ १३
तत्र पोत्ताभिधः कश्चिन्मातङ्गाख्याच कामिनी । ररक्षतुस्तां पिष्टाद्यैरग्नितप्तां भृशातुराम् ॥ १४
एतत्सर्वमशेषेण श्रुत्वा रामो वनंगतः । ईशादाराधनात्तुष्टात्संप्राप्य च परश्वधम् ॥ १५
क्षत्रियांबोधिवडवाज्वलनस्तु बभूवह । कार्तवीर्यार्जुनं हत्वा क्षत्रियानपरानपि ॥ १६
असृजैव ततस्तेषां निवापाञ्जलिमातनोत् । नीतेन विन्दुसरसि श्रद्धया पितुरात्मनः ॥ १७
मातरंच समासाद्य पक्कणस्थां प्रणम्य ताम् । ग्रामाद्बहिस्तया सार्धं कञ्चित्कालं निनायसः ॥ १८
शुश्रूषयाच सन्तोष्य मातरं तादृशीं पुनः । वीरहत्या निवृत्यर्थं क्षयद्वीरमुपास्य सः ॥ १९
काश्यपाय महीं दत्वा सर्वां वीर्यार्जितामिमाम् । वैकुण्ठभवनं प्राप्यकेरळान्पुनर (पुनःकेरळम्) द्भुतम् २०
पुरा दशरथो राजा पुत्रकामो महेश्वरम् । अयजत्पुत्रकामेष्ट्या वसिष्ठाद्यैश्च तापसैः ॥ २१

ஸா புனர்தக்தவஸநா ரேணுகா ருஷிமானினீ। துஃகேன மஹதா க்ராந்தா லஜ்ஜயாச வராங்கநா ॥ 12
நிம்பபத்ரைச்சமாச்சாத்ய நக்நாவூருனிதம்பகௌ ।
சண்டாளாச்ரேணிமாஸாத்ய கஞ்சித்காலமுவாஸஹ ॥ 13
தத்ரபோத்தாபித: கச்சின்மாதங்காக்யாச காமினீ ।
ரரக்ஷதுஸ்தாம் பிஷ்டாத்யைரக்னிதப்தாம் ப்ருசாதுராம் ॥ 14
ஏதத்ஸர்வமசேஷேண ச்ருத்வா ராமோ வனம் கத:। ஈசாதாராதனாத்துஷ்டாத்ஸம்ப்ராய ச பரச்வதம் 15
க்ஷத்ரியாம்போதிபடபாஜ்வலனஸ்து பபூவ ஹ। கார்தவீர்யார்ஜுனம் ஹத்வா க்ஷத்ரியானபரானபி ॥ 16
அஸ்ருஜைவ ததஸ்தேஷாம் நிபாவாஞ்ஜலிமாதனோத் ।
நீதேன பிந்துஸரஸி ச்ரத்தயா பிதுராத்மன: ॥ 17
மாதரஞ்ச ஸமாஸாத்ய பக்கணஸ்தாம் ப்ரணம்ய தாம் ।
க்ராமாத்பஹிஸ்தயா ஸார்தம் கஞ்சித்காலம் நிநயஸ: ॥ 18
சுச்ருஷயாச ஸந்தோஷ்ய மாதரம் தாத்ருசீம் புந:। வீரஹத்யாநிவ்ருத்யர்தம் க்ஷயத்வீரமுபாஸ்ய ஸ: 19
காச்யபாய மஹீம் தத்வா ஸர்வாம் வீர்யார்ஜிதாமிமாம் ।
வைகுண்டபவனம் ப்ராப்யகேரளான்புனர (புந: கேரளம)த்புதம்॥ 20
புரா தசரதோ ராஜா புத்ரகாமோ மஹேச்வரம் ।
அயஜத்புத்ரகாமேஷ்ட்யா வஸிஷ்டாத்யைச்சதாபஸை: ॥ 21

தனித்துவிட்டது. (11) பிறகு ரிஷி பத்தினியான ரேணுகையானவள் தனது ஆடை எரிந்துவிட்டபடியால் மிகுந்த துக்கமும் லஜ்ஜையும் அடைந்தவளாகி, (12) ஆடையற்றிருந்த அந்த ரேணுகையானவள் தன் துடைகளையும் முன்பின் பக்கங்களையும் வேப்பிலைகளால் மறைத்துக் கொண்டு ஓர் பரச்சேரிக்குச் சென்று சிறிது காலம் வசித்துவந்தாள். (13) அங்கு போத்தன் என்பவனும், மாதங்கி என்பவளும் நெருப்பு சுட்டதினால் மிகவும் துன்பமடைந்திருந்த அவளுக்கு மாவு முதலியவைகளை கொடுத்து ரக்ஷித்து வந்தார்கள். (14) இப்படியிருக்கையில் காட்டுக்கு போயிருந்த பரசுராமர் இந்த சங்கதிகளை எல்லாம் விபரமாய் கேள்விபட்டு தனது பூஜையினால் சந்தோஷமடைந்த ஸ்ரீ பரமேச்வரரிடமிருந்து ஓர் கண்டரகோடலியை பெற்று, (15) க்ஷத்ரியர்களாகிய கடலுக்கு படவாக்னிபோல் ஜ்வலிக்கின்றவராகி கார்த்தவீர்யார்ஜுனனையும் மற்றுமுள்ள க்ஷத்ரியர்களையும் கொன்று, (16) பிந்துஸரஸ் என்ற குளத்தில் நிரப்பப்பட்ட அவர்களுடைய ரத்தத்தினால் தன் தந்தைக்கு மிகுந்த சிரத்தையோடு தர்பணம் செய்தார். (17) பிறகு அவர் பரச்சேரியில் இருந்த தன் தாயிடம் சென்று அவளை நமஸ்கரித்து அவளோடுகூட ஊருக்கு வெளியில் சிறிது காலம் இருந்து கொண்டு, (11) அப்படிப்பட்ட தன் தாயை பணிவிடைகளால் ஸந்தோஷிக்கச் செய்து பிறகு தனக்கு ஏற்பட்ட வீரஹத்தி தோஷம் நீங்குவதற்காக (தனது பக்தர்களின் விரோதிகளை நாசம் செய்கின்றவரான) ஸ்ரீ மஹேச்வரனை ஆராதித்து, (19) பிறகு தன் பராக்ரமத்தினால் ஸம்பாதிக்கப்பட்ட இந்த பூமி யாவையும் காச்யப முனிவருக்கு கொடுத்துவிட்டு பிறகு கேரள தேசம் சென்று அங்கிருந்து மிக அற்புதமான வைகுண்டமடைந்தார். (20) பூர்வத்தில் தசரதராஜன் புத்திரனை வேண்டி வஸிஷ்டர் முதலிய தபஸ்விகளோடு

ततो महेश्वरस्याज्ञावशेन मधुसूदनः । रामो दाशरथिर्जज्ञे कौशल्यायां नृपस्त्रियाम् ॥ २२
सीतया पितृवाक्येन लक्ष्मणेन वनंगतः । तत्र सीतां राक्षसेन्द्रो रावणो जनकात्मजाम् ॥ २३
जहार वञ्चयित्वा तं रामं तत्र सलक्ष्मणम् । तद्वियोगाग्निसंतप्तो रामो लक्ष्मणसंयुतः ॥ २४
अगस्त्यमुनिमासाद्य रुरोद भृशदुःखितः । अगस्त्येनोपदिष्टोऽसौ रक्षसां निधनं प्रति ॥ २५
शिवमभ्यर्च्य लब्धास्त्रो बध्वा सेतुं बलीमुखैः । रावणं सगणं संख्ये विजित्यहरियूथपैः ॥ २६
सीतां वैश्वानरे शुद्धामयोध्यामनयत्प्रियाम् । तत्र पट्टाभिषिक्तोऽसौ चक्रे राज्यमकण्टकम् ॥ २७
लोकापवादभीत्यैव पुनस्सीतां वनेऽत्यजत् । तस्यां भूमौ विलीनायां शुशोच भृशमातुरः ॥ २८
अश्वमेधेन देवेशं रामोऽभ्यर्च्य महेश्वरम् । सरय्वां तनुमुत्सृज्य भ्रातृभिस्सह राघवः ॥ २९
क्षीराब्धिमाससाद स्वं स्थानं पूर्ववदच्युतः । अवतारस्सतु पुरा स्त्रीदुःखसह ईरितः ॥ ३०
तमसाच वृतो यस्मान्नवेदात्मानमात्मना । द्वापरेच युगेऽन्यस्मिन् स एवपुरुषोत्तमः ॥ ३१

ததோ மஹேச்வரஸ்யாஞ்ஞாவசேன மதுஸூதன: |
ராமோ தாசரதிர்ஜஜ்ஞே கௌசல்யாயாம் ந்ருபஸ்த்ரியாம் || 22
ஸீதயா பித்ருவாக்யேந லக்ஷ்மணேந வனம்கத: | தத்ர ஸீதாம் ராக்ஷஸேந்த்ரோ ராவணோ ஜனகாத்மஜாம்
ஜஹார வஞ்சயித்வா தம் ராமம் தத்ர ஸலக்ஷ்மணம் |
தத்வியோகாக்நிஸந்தப்தோ ராமோ லக்ஷ்மணஸம்யுத: || 24
அகஸ்த்யமுனிமாஸாத்ய ருரோத ப்ருசது:கித: |
அகஸ்த்யேநோபதிஷ்டோऽஸௌ ரக்ஷஸாம் நிதனம்ப்ரதி || 25
சிவமப்யர்ச்ய லப்தாஸ்த்ரோ பத்வாசேதும்வலீமுகை: |
ராவணம் ஸகணம் ஸங்க்யே விஜித்ய ஹரியூதபை: || 26
ஸீதாம் வைச்வானரே சுத்தாமயோத்யாமனயத்ப்ரியாம் |
தத்ர பட்டாபிஷிக்தோऽஸௌசக்ரே ராஜ்யமகண்டகம் || 27
லோகாபவாதபீத்யைவ புனஸ்ஸீதாம் வனேऽத்யஜத் |
தஸ்யாம் பூமௌ விலீனாயாம்சுசோச ப்ருசமாதுர: || 28
அச்வமேதேநதேவேசம் ராமோऽப்யர்ச்ய மஹேச்வரம் |
ஸரய்வாம் தநுமுத்ஸ்ருஜ்ய ப்ராத்ருபிஸ்ஸஹ ராகவ: || 29
க்ஷீராப்திமாஸஸாதஸ்வம் ஸ்தானம் பூர்வவதச்யுத: | அவதாரஸ்ஸது புரா ஸ்த்ரீது:கஸஹ ஈரித: || 30
தமஸாச வ்ருதோ யஸ்மான்ன வேதாத்மானமாத்மனா | த்வாபரேச யுகேऽந்யஸ்மின் ஸ ஏவபுருஷோத்தம:

அட புத்ர காமேஷ்டி என்ற யாகத்தால் ஸ்ரீ மஹேச்வரனை பூஜித்தார். (21) பிறகு ஸ்ரீ மஹேச்வரனின் உத்திரவால் ஸ்ரீ விஷ்ணுவானவர் அந்த அரசனின் மனைவியான கௌஸல்யையிடத்தில் ஸ்ரீ ராமனாக பிறந்தார். (22) தந்தையின் உத்திரவின்படி சீதையுடனும், லக்ஷ்மணனுடனும் ஸ்ரீ ராமர் காட்டிற்குச் சென்றார். அங்கு ஜனகரின் பெண்ணான சீதையை ராவணன் என்ற ராக்ஷஸ ராஜன் ராமனையும், லக்ஷ்மணனையும் வஞ்சித்துவிட்டு அபகரித்துச் சென்றான். ஸ்ரீ ராமன் சீதையின் பிரிவாகிய அக்னியால் தகிக்கப்பட்டவராக லக்ஷ்மணனுடன் கூடியவராய். (24) அகஸ்திய முனிவரை அடைந்து அவர் முன்னிலையில் மிகவும் துக்கித்து அழுதார். அசுரர்களை நாசம் செய்வதற்காக அகஸ்திய முனிவரிடம் உபதேசம் பெற்றுக்கொண்டு. (25) ஸ்ரீ பரமேச்வரனை பூஜித்து பாசுபதாஸ்திரத்தைப் பெற்று வானரர்களின் உதவியால் சேதுபந்தனம் செய்து. வானர படைத் தலைவர்களுடன் ராவணனை அவனது சகல சைன்யங்களோடும் யுத்தத்தில் ஜயித்து. (26) பிறகு அக்னிப் பிரவேசத்தினால் [illegible] மனைவியான சீதையை அயோத்திக்கு அழைத்துச் சென்றார். அங்கு பட்டாபிஷேகம் செய்யப்பட்டவராக எதிரிகளின்றி ராஜ்யம் செய்தார் (27) அப்பொழுது லோகாபவாதத்தால் சீதையை மறுபடியும் காட்டிற்கு அனுப்பினார். பிறகு அவள் பூமிக்குள் மறைந்துவிட்டதால் ஸ்ரீ ராமன் மிகவும் [illegible] துக்கித்தார் (28) பிறகு ஸ்ரீ ராமன் அச்வமேத யாகத்தினால் தேவதேவனான ஸ்ரீ மஹேச்வரனை பூஜித்து தன் ஸகோதரர்களுடன் ஸரயு நதியில் சரீரத்தை விட்டார். (29) பிறகு ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் முன்போல் தனது இருப்பிடமாகிய பாற்கடலை அடைந்தார். [illegible] இந்த அவதாரத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் மனைவியை இழந்து துக்கத்தை அனுபவிக்க நேர்ந்தது. (30) [illegible] அப்பொழுது அவர் [illegible] தன்னை தான் அறியவில்லை. பிறகு [illegible]

वसुदेवसुतो जज्ञे रोहिण्यां रामनामकः । तत्र रक्षोगणं हत्वा कृत्वा कृत्यं महत्पुनः ॥ ३२
आराध्य च महादेवमंबिकासहितं प्रभुम् । योगमार्गरतो रामो वैकुण्ठं प्राप्तवान् बली ॥ ३३
पुनश्च वसुदेवस्य देवक्यां कृष्णरूपधृत् । जज्ञे विष्णुरमेयात्मा भृगुशापनियन्त्रितः ॥ ३४
तत्राभ्यर्च्य सुराधीशं शिवं शत्रून् जयन्पुनः । उपमन्युं समासाद्य विधिना तेन दीक्षितः ॥ ३५
शैवमुख्यतमोऽत्यर्थं भक्त्याऽऽराध्य च शङ्करम् । भूभारमपनीयाथ विष्णुलोकं जगाम ह ॥ ३६
पुनश्चापि कलेरन्ते कलिजा दुष्प्रजाः स्वयम् । संहरिष्यन् हयग्रीवो जातो विष्णुरधोक्षजः ॥ ३७
तत्र संपूज्य देवेशं लिङ्गमूर्तौ सदाशिवम् । कृपया तस्य निर्जित्य तिष्यजातानसज्जनान् ॥ ३८
विष्णुरूपं यथापूर्वं लब्ध्वाऽऽत्मपदमाप सः । एवं दशावतारेषु निगृहीतश्च पञ्चसु ॥ ३९
शिवेनानुगृहीतश्च शापान्मुक्तो भृगोरिति । एतेऽवतारा: कल्पेषु बहुधा वर्णिता द्विजैः ॥ ४०
वैष्णवेषु पुराणेषु निग्रहो नैव वर्णितः । देहत्यागेन तस्यैव सूचितोऽनुग्रहो (निग्रहो) द्विजाः ॥

வஸுதேவஸுதோ ஜஜ்ஞே ரோஹிண்யாம் ராமநாமக: ।
தத்ர ரக்ஷோகணம் ஹத்வா க்ருத்வா க்ருத்யம் மஹத்புந: ॥ 32
ஆராத்யச மஹாதேவமம்பிகாஸஹிதம் ப்ரபும் ।
யோகமார்கரதோ ராமோ வைகுண்டம் ப்ராப்தவான்பலீ ॥ 33
புனச்ச வஸுதேவஸ்ய தேவக்யாம் க்ருஷ்ணரூபத்ருத் ।
ஜஜ்ஞேவிஷ்ணுரமேயாத்மா ப்ருகுசாபநியந்த்ரித: ॥ 34
தத்ராப்யர்ச்ய ஸுராதீசம்சிவம் சத்ரூன் ஜயந்புந: । உபமன்யும் ஸமாஸாத்ய விதிநா தேந தீக்ஷித: ॥ 35
சைவமுக்யதமோऽத்யர்தம் பக்த்யாऽऽராத்யச சங்கரம் । பூபாரமபநீயாத விஷ்ணுலோகம் ஜகாமஹ ॥ 36
புநச்சாபி கலேரந்தே கலிஜா துஷ்ப்ரஜா:ஸ்வயம் ।
ஸம்ஹரிஷ்யன் ஹயக்ரீவோ ஜாதோ விஷ்ணுரதோக்ஷஜ: ॥ 37
தத்ர ஸம்பூஜ்யதேவேசம் லிங்கமூர்தௌ ஸதாசிவம் ।
க்ருபயா தஸ்யநிர்ஜித்ய திஷ்யஜாதாநஸஜ்ஜனன் ॥ 38
விஷ்ணுரூபம் யதாபூர்வம்லப்த்வாத்மபதமாப ஸ: । ஏவம் தசாவதாரேஷு நிக்ருஹீதச்ச பஞ்சஸு ॥ 39
சிவேநாநுக்ருஹீதச்ச சாபாந்முக்தோ ப்ருகோரிதி ।
ஏதேऽவதாரா: கல்பேஷு பஹுதா வர்ணிதா த்விஜை: ॥ 40
வைஷ்ணவேஷு புராணேஷு நிக்ரஹோ நைவ வர்ணித: ।
தேஹத்யாகேந தஸ்யைவ ஸூசிதோऽனுக்ரஹோ (நிக்ரஹோ) த்விஜா: ॥ 41

த்வாபரயுகத்தில் அந்த விஷ்ணுவானவர் (31) ரோஹிணிதேவியினிடத்தில் வசுதேவருக்குப் பிள்ளையாக பிறந்து பலராமன் என்ற பெயரை அடைந்தவராகி அந்த அவதாரத்தில் அநேக ராக்ஷஸக் கூட்டங்களைக் கொன்று இன்னும் பல பெரிய கார்யங்களைச் செய்து, (32) முடிவில் ஸ்ரீ பலராமன் பார்வதி தேவியுடன் கூடிய மஹாபிரபுவான ஸ்ரீ பரமேச்வரனை பூஜை செய்து யோக மார்க்கத்தைக் கைக்கொண்டு வைகுண்டமடைந்தார். (33) பிறகு அளவிடமுடியாத மஹிமைவாய்ந்த ஸ்ரீ விஷ்ணுவானவர் பிருகு முனிவரின் சாபத்திற்குக் கட்டுப்பட்டவராகி தேவகியிடத்தில் வசுதேவருக்குப் பிள்ளையாக ஸ்ரீ கிருஷ்ணன் என்ற பெயருடன் பிறந்தார். (34) அந்த அவதாரத்தில் தேவேசரான ஸ்ரீ மஹேச்வரனை பூஜித்து அநேகம் சத்துருக்களை ஜயித்து பிறகு உபமன்யு முனிவரை அடைந்து அவரிடம் விதிப்படி தீக்ஷை பெற்று, (35) மிகச் சிறந்த ஓர் சிவபக்தராகி மிகுந்த பக்தியோடு ஸ்ரீ சங்கரரை பூஜித்து பூ பாரத்தைக் குறைத்துவிட்டு முடிவில் விஷ்ணுலோகம் அடைந்தார். (36) பிறகு அந்த விஷ்ணுவானவர் கலியுகத்தின் முடிவில் கலியில் உண்டான துஷ்ட பிரஜைகளை ஸம்ஹரிப்பதற்காக ஹயக்ரீவராக அவதரித்தார். (37) அந்த அவதாரத்தில் தேவேசரான ஸ்ரீ ஸதாசிவனை லிங்கமூர்த்தியில் பூஜை செய்து அவருடைய அருளால் கலியுகத்தில் உண்டான துஷ்டர்களை எல்லாம் கொன்று (38) பிறகு முன்போல் விஷ்ணுவின் உருவத்தை அடைந்து தனது இருப்பிடம் சென்றார். இவ்விதமாய் விஷ்ணுவானவர் பத்து அவதாரங்களை எடுத்து அவைகளில் ஐந்து அவதாரங்களில் (39) பரமேச்வரரால் தண்டிக்கப்பட்டும், ஐந்து அவதாரங்களில் அனுக்ரஹிக்கப்பட்டவருமாகி பிருகு முனிவரின் சாபத்திலிருந்து விடுபட்டார். இந்த அவதாரங்கள் எல்லாம் பெரியோர்களால் ஒவ்வொரு கல்பங்களிலும் பலவாறாக வர்ணிக்கப்படுகின்றன. (40) ஓ முனிவர்களே, ஸ்ரீ மஹேச்வரரால் விஷ்ணு தண்டிக்கப்பட்டதானது விஷ்ணு புராணங்களில் சொல்லப்படவில்லை

निगृहीतः कुमारेण वीरभद्रादिभिर्गणैः । सूचितस्स तु मत्स्याक्षिकूर्मास्थिक्रोडश्रृङ्गकैः ॥ ४२
सिंहचर्मशिरोमुण्डत्रिविक्रममहास्थिभिः । शिवांगाकल्पमध्यस्थैः पुराणश्रुतिचोदितैः ॥ ४३
ततो देवा हरिब्रह्मप्रमुखाः परमेश्वरम् । दृष्ट्वा भीतेन मनसा त्यक्त्वाऽहंकारमात्मनः ॥ ४४
कर्मसु स्वेषु वर्तन्त इति वेदविदो विदुः । एकदा विष्णुभवनं पुरोपेन्द्रस्समाययौ ॥ ४५
स्वमेवमूर्तिभेदस्थं प्रद्युम्नादिवदच्युतः । मिथः संभाषणं कृत्वा कञ्चित्कालमवस्थितः ॥ ४६
एतस्मिन् समये कण्वः काश्यपस्य सुतो महान् । वैकुण्ठभवनं प्राप विष्णुसंभाषणोत्सुकः ॥ ४७
तं दृष्ट्वा तौ समायान्तं शिवभक्तं दृढव्रतम् । न व्यलोकयतामक्ष्णा नासनं ददतुश्च तौ ॥ ४८
नवाचञ्चाप्यवदतामासातां मौनमुद्रया । तौ तदा तादृशौदृष्ट्वा चुकोप मुनिसत्तमः ॥ ४९
शशापास्मान् शिवस्येष्टान्मत्वा तूर्ष्णीं बभूविथ । विष्णोऽतस्त्वमनेकानि जन्मानि भजमद्गिरा ॥ ५०

நிக்ருஹீத: குமாரேண வீரபத்ராதிபிர் கணை: ।
ஸூசிதஸ்ஸது மத்ஸ்யாக்ஷிகூர்மாஸ்திக்ரோடச்ருங்ககை: ॥ 42
ஸிம்ஹசர்மசிரோமுண்டத்ரிவிக்ரமமஹாஸ்திபி: ।
சிவாங்காகல்பமத்யஸ்தை: புராணச்ருதிசோதிதை: ॥ 43
ததோ தேவா ஹரிப்ரம்ஹப்ரமுகா: பரமேச்வரம் ।
த்ருஷ்ட்வா பீதேன மனஸா த்யக்த்வாऽஹங்காரமாத்மன: ॥ 44
கர்மஸு ஸ்வேஷு வர்தந்த இதிவேதவிதோ விது: ।
ஏகதா விஷ்ணுபவனம் புரோபேந்த்ரஸ்ஸமாயயௌ ॥ 45
ஸ்வமேவ மூர்திபேதஸ்தம் ப்ரத்யும்னாதிவதச்யுத: ।
மித: ஸம்பாஷணம் க்ருத்வா கஞ்சித்காலமவஸ்தித: ॥ 46
ஏதஸ்மின்ஸமயே கண்வ: காச்யபஸ்ய ஸுதோமஹான் ।
வைகுண்டபவனம் ப்ராப விஷ்ணுஸம்பாஷணோத்ஸுக: ॥ 47
தம் த்ருஷ்ட்வா தௌ ஸமாயாந்தம் சிவபக்தம் த்ருடவ்ரதம் ।
ந வ்யலோகயதாமக்ஷ்ணா நாஸனம் தததுச்ச தௌ ॥ 48
ந வாசஞ்சாப்யவததாமாஸாதாம் மௌனமுத்ரயா ।
தௌ ததா தாத்ருசௌ த்ருஷ்ட்வா சுகோபமுனிஸத்தம: ॥ 49
சசாபாஸ்மான் சிவஸ்யேஷ்டான் மத்வா தூஷ்ணீம் பபூவித ।
விஷ்ணோऽதஸ்த்வமனேகானி ஜன்மானி பஜமத்கிரா ॥ 50

என்றாலும், அந்த தண்டனையானது அவர் தேஹத்தைவிட்ட மாதிரியைக் கொண்டு ஊகிக்கத்தக்கதாய் இருக்கின்றது (41) இப்படி என்றால் ஸ்ரீ முருகனாலும், வீரபத்ரர் முதலிய கணாதிபர்களாலும் தண்டிக்கப் பட்டதானது வேதங்கள், புராணங்கள் இவைகளால் தெரிவிக்கப்படுகின்றவைகளும், ஸ்ரீ பரமேச்வரரின் திருமேனியில் விளங்கும் ஆபரணங்களின் நடுவில் இருக்கும் மத்ஸ்யத்தின் விழிகள், ஆமையின் ஓடு, பன்றியின் தித்திப்பல், சிங்கத்தின் தோல், முண்டத்தலை, த்ரிவிக்ரம மூர்த்தியின் பெரிய எலும்பு இவை களால் தெளிவாக ஊஹிக்கப்படுகிறது. (43) பிறகு விஷ்ணு, பிரும்மா முதலிய தேவர்கள் எல்லாம் ஸ்ரீ பரமேச்வரனைப் பார்த்து மனதில் இருந்த பயத்தோடு தங்களுடைய கர்வத்தை விட்டவர்களாகி (44) அவரவர் தொழிலை சரிவர செய்து வருகிறார்கள் என்று வேதமறிந்தவர்கள் சொல்லுகின்றனர். ஒரு சமயம் உபேந்திரர் ஸ்ரீ விஷ்ணுவின் இருப்பிடமாகிய வைகுண்டத்திற்கு வந்தார். (45) அப்பொழுது விஷ்ணு வானவர் பிரத்யும்னர் முதலிய மூர்த்திகளைப்போல் தனது ஓர் மூர்த்தியான அந்த உபேந்திரருடன் ஒருவருக்கொருவர் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தார். (46) இந்த சமயத்தில் காச்யப முனிவரின் புதல்வரும் மஹிமைவாய்ந்தவருமான கண்வ முனிவர் விஷ்ணுவோடுபேச விரும்பியவராகி வைகுண்டத் திற்கு வந்தார். (47) அப்பொழுது அவ்விருவர்களும் மிகுந்த சிவபக்தரும், உறுதியாய் விரதங்களை அனுஷ்டிப்பவருமான கண்வ முனிவர் வருவதைக்கண்டு அவரை கண்ணால் பார்க்கவும் இல்லை, அவருக்கு ஆஸனம் கொடுக்கவுமில்லை, (48) அவரோடு பேசவுமில்லாமல் மௌனமாய் இருந்தார்கள். அப்பொழுது அச்சிறந்த முனிவர் அவர்கள் அவ்வாறு இருந்ததைப்பார்த்து கோபமடைந்தவராகி அவர்களை சபித்த தாவது (49) நான் ஸ்ரீ பரமசிவனுக்கு பிரியமுள்ளவன் என்பதை நீங்கள் அறிந்தும் பேசாமல் இருந்து விட்டீர்கள் அல்லவா? ஆகையால் ஓ விஷ்ணுவே, நீ எனது வார்த்தையின்படி அநேக ஜன்மங்களை

मूकश्च तत्र सर्वत्र दत्तश्शापो मयाऽत्रवै । इयञ्च लक्ष्मीस्त्वत्पार्श्वेस्थिता मृगवदत्रवै ॥ ५१
मच्छापाच्च मृगी भूयादुपेन्द्रोऽप्ययमीदृशः । कैरातीं योनिमासाद्य काननेवसतां चिरम् ॥ ५२
तव भक्ताश्च लोकेऽस्मिन् सन्तु ते शिवनिन्दकाः । भस्मरुद्राक्षनिन्दाञ्च कुर्वन्तु मतिमोहिताः ॥ ५३
इति शप्त्वा गते तस्मिन् कण्वे निजमथाश्रमम् । विष्णुश्शापभयात्तस्य कमलालयमेत्य च ॥ ५४
तत्राराध्य महादेवमप्रीणयदनन्यधीः । ततः प्रीतो महादेवः कण्वमाहूय तापसम् ॥ ५५
एकजन्मानुभोक्तारं चक्रे शापस्य माधवम् । महालक्ष्मीं मृगाकारामेकजन्मैव शङ्करः ॥ ५६
उपेन्द्रस्यापि जन्मैकं कैरातमकरोच्छिवः । तेन विष्णुश्शिवमुनिस्सञ्जातः कण्वशापतः ॥ ५७
लक्ष्मीश्चापि मृगी जाताकानने मुनिशापतः । उपेन्द्राद्याश्च कैरातीं योनिमापेदिरे तदा ॥ ५८
मृगी तं सा मुनिं मूकं दृष्ट्वा गर्भवती ह्यभूत् । सूत्वा सा कनकां हृद्यां मृगीत्यक्त्वा पलायत ॥ ५९
किरातोऽसौ वने कन्यामादायायाच्च पक्कणम् । कुमाराय ददौ कन्यां शबरोवल्लिनामकाम् ॥ ६०

மூகச்ச தத்ர ஸர்வத்ர தத்தச்சாபோ மயாऽத்ரவை |
இயஞ்ச லக்ஷ்மீஸ்த்வத்பார்ச்வேஸ்திதா ம்ருகவதத்ரவை || 51
மச்சாபாச்ச ம்ருகீ பூயாதுபேந்த்ரோऽப்யயமீத்ருச: | கைராதீம்யோநிமாஸாத்ய காநநேவஸதாம்சிரம் 52
தவ பக்தாச்ச லோகேऽஸ்மின் ஸந்து தே சிவநிந்தகா: |
பஸ்மருத்ராக்ஷநிந்தாஞ்ச குர்வந்து மதிமோஹிதா: || 53
இதிசப்த்வா கதேதஸ்மின் கண்வே நிஜமதாச்ரமம் | விஷ்ணுச்சாப பயாத்தஸ்ய கமலாலய மேத்ய ச || 54
தத்ராராத்ய மஹாதேவமப்ரீணயதனன்யதீ: | தத: ப்ரீதோ மஹாதேவ: கண்வமாஹூய தாபஸம் || 55
ஏகஜன்மாநுபோக்தாரம் சக்ரேசாபஸ்யமாதவம் | மஹாலக்ஷ்மீம் ம்ருகாகாராமேகஜன்மைவ சங்கர: || 56
உபேந்த்ரஸ்யாபி ஜன்மைகம் கைராதமகரோச்சிவ: |
தேந விஷ்ணுச்சிவமுனிஸ்ஸஞ்ஜாத: கண்வசாபத: || 57
லக்ஷ்மீச்சாபிம்ருகீஜாதா காநநேமுனிசாபத: | உபேந்த்ராத்யாச்ச கைராதீம்யோநிமாபேதிரே ததா || 58
ம்ருகீதம்ஸா முனிம் மூகம்த்ருஷ்ட்வாகர்பவதீஹ்யபூத் |
ஸூத்வாஸா கனகாம் ஹ்ருத்யாம் ம்ருகீத்யக்த்வா பலாயத || 59
கிராதோऽஸௌ வனே கன்யாமாதாயாயாச்ச பக்கணம் |
குமாராய ததௌ கன்யாம் சபரோ வல்லிநாமகாம் || 60

எனக்கு ஆசை உண்டாக வேண்டாம். மேலும் தான் திலோத்தமையைப் பின்தொடர்ந்து ஓடியதால் உண்டான பாவமும் நீங்கவேண்டும்" என வேண்டினார். (23) இவ்வாறு பிரும்மாவின் வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ மஹேச்வரன் அப்படியே ஆகட்டுமென்று சொல்லிவிட்டு, அம்பிகையோடு கூட அங்கேயே மறைந்தார். (24) பிறகு பிரும்மதேவன் இவ்வாறு ஸ்ரீசம்புவிடமிருந்து வரத்தைப் பெற்று தன்னிருப்பிடம் சென்றார். அங்கு பிற ஸ்த்ரீகளிடம் ஆசையற்றவராகி தனது மூன்று மனைவிகளுடனும் வேண்டிய சுகங்களை அனுபவித்துக்கொண்டு ஸ்ரீ மஹேச்வரனை எப்பொழுதும் மனதில் தியானம் செய்துகொண்டு உலகங்களைப்படைத்து வந்தார். இவ்வாறு ஸ்ரீ பரமசிவனை தியானம் செய்துவந்த மஹிமையால் எல்லா பாபங்களும் விலகப்பெற்றவரானார் (25-26) பிறகு ஒரு சமயம் பிரும்மதேவன் வெகு காலம் ஸரஸ்வதியோடு கிரீடித்து விட்டு, மஹா பாபிகளும், உலகங்களுக்குக் கெடுதி செய்வதில் முயன்றவர்களுமான அனேக கொடிய அசுரர்களை ஸ்ருஷ்டிசெய்து (27) பிறகு கோபத்தினால் அவர்கள் தன்னிடத்திலிருந்து உண்டானவர்களாக இருந்த போதிலும் அவர்களைத்தானே கொன்றுவிட்டு, பிறகு அந்த தோஷம் நீங்குவதற்காக எல்லா பாபங்களையும் போக்கவல்ல ஸ்ரீகாளஹஸ்தி க்ஷேத்திரத்தில் ஸ்ரீ மஹேச்வரரைப் பூஜை செய்து அதனால் தனது தோஷத்தை போக்கிக்கொண்டு மிகப்பரிசுத்தராகி மிகுந்த ஸந்தோஷத்தோடு ஸரஸ்வதி தேவியுடன் புராதனமான பிரும்மலோகமடைந்தார். (28-30) பிறகு ஓர் சமயத்தில் பிரும்மதேவன் கைலாஸ மலையில் ஸ்ரீ சம்புவை நமஸ்கரித்து அஞ்சலி செய்து திரும்பிச் செல்லுகையில் தாமரை மாலையை தரித்த ஸ்ரீ ஸ்கந்தன் எதிரில் விளையாடிக்கொண்டிருந்ததை அறிந்தும் (31) கர்வத்தினால் அறியாதவர்போல் அசட்டையாகச் சென்றார். அப்பொழுது அந்த முருகன் அவ்வாறு செல்லுகின்ற அந்த ப்ரும்மதேவனைப் பார்த்து கூப்பிட்டு, (32) விளையாட்டாக அவரை, ப்ரணவத்தின் அர்த்தம் என்னவென்று கேட்டார். அதற்கு அவர் அதன் அர்த்தத்தை வேறுபாடாக சொன்னார். அப்பொழுது

वदन्तमर्थं तं कोपादन्यथा स विधिं तदा । मुष्ट्या सन्ताड्य शिरसि कारावेश्मन्यपातयत् ॥ ३४
स्वयं ससर्ज निखिलं जगत्पूर्ववदेव सः । विधातुस्त्वथ वृत्तान्तं श्रुत्वा शंभुः स्मयन्निव ॥ ३५
मोचयामास तं स्कन्दं प्रीणयित्वा महेश्वरः । ततः प्रणम्य स पुनः स्कन्दं साक्षाच्छिवप्रियम् ॥ ३६
विमुक्तस्तेन परया प्रीत्या काञ्चीपुरीं शुभाम् । संप्राप्य तत्र चैकाम्रनाथं साक्षात्कृपार्णवम् ॥ ३७
संपूज्य तत्र लिङ्गञ्च स्वनाम्ना स्थाप्य भक्तिमान् । मुक्तवान् स्वकृतं दोषं तत्प्रभावात्तदाऽऽत्मभूः ॥ ३८
चकार स्वाधिकारञ्च यथापूर्वं पदे स्थितः । पुनर्विचिन्तयन् किञ्चित्पूजयामास शङ्करम् ॥ ३९
नीलाद्रिं समनुप्राप्य भक्त्या परमया विधिः । तत्राविरासीद्भगवांस्तस्मै प्रीततरश्शिवः ॥ ४०
वरं वरय भद्रं ते यत्ते मनसि वर्तते । इति शम्भोर्वचः श्रुत्वा धाता बद्धाञ्जलिः पुरः ॥ ४१
भवन्नृत्तावलोकाय विष्णुनाऽऽराधितः पुरा । प्रसन्नो प्रददौ तस्मै पटहित्वं निजान्तिके ॥ ४२
भवांस्तदद्य भगवन्मां तु नृत्ताभिकांक्षिणम् । रक्ष नृत्तावलोकाय तालित्वं परिकल्पय ॥ ४३

வதந்தமர்தம் தம் கோபாதன்யதா ஸ விதிம் ததா ।
முஷ்ட்யா ஸந்தாட்ய சிரஸி காராவேச்மன்யபாதயத் ॥ 34
ஸ்வயம் ஸஸர்ஜ நிகிலம் ஜகத்பூர்வவதேவ ஸ: ।
விதாதுஸ்த்வத வ்ருத்தாந்தம் ச்ருத்வா சம்பு: ஸ்மயன்னிவ ॥ 35
மோசயாமாஸ தம் ஸ்கந்தம் ப்ரீணயித்வா மஹேச்வர: ।
தத: ப்ரணம்ய ஸ புன: ஸ்கந்தம் ஸாக்ஷாச்சிவப்ரியம் ॥ 36
விமுக்தஸ்தேன பரயா ப்ரீத்யா காஞ்சீபுரீம் சுபாம் ।
ஸம்ப்ராப்ய தத்ர சைகாம்ரநாதம் ஸாக்ஷாத்க்ருபார்ணவம் ॥ 37
ஸம்பூஜ்ய தத்ர லிங்கஞ்ச ஸ்வநாம்னு ஸ்தாப்ய பக்திமான் ।
முக்தவான் ஸ்வக்ருதம் தோஷம் தத்ப்ரபாவாத் ததாத்மபூ: ॥ 38
சகார ஸ்வாதிகாரஞ்ச யதாபூர்வம் பதே ஸ்தித: । புனர்விசிந்தயன் கிஞ்சித்பூஜயாமாஸ சங்கரம் ॥ 39
நீலாத்ரிம் ஸமனுப்ராப்ய பக்த்யா பரமயா விதி: । தத்ராவிராஸீத்பகவாம்ஸ்தஸ்மை ப்ரீததரச்சிவ: ॥ 40
வரம் வரய பத்ரம் தே யத்தே மனஸி வர்ததே । இதி சம்போர்வச: ச்ருத்வா தாதா பத்தாஞ்ஜலி: புர: 41
பவன்ந்ருத்தாவலோகாய விஷ்ணுனாSSராதித: புரா ।
ப்ரஸன்னோ ப்ரததௌ தஸ்மை படஹித்வம் நிஜாந்திகே ॥ 42
பவாம்ஸ்ததத்ய பகவன்மாம் து ந்ருத்தாபிகாம்க்ஷிணம் ।
ரக்ஷ ந்ருத்தாவலோகாய தாளித்வம் பரிகல்பய ॥ 43

ஸ்ரீ முருகன் மிகுந்த கோபத்தோடு அந்த பிரும்மனை (33) தலைமீது முஷ்டியால் குட்டி சிறையில் அடைத்துப் பிறகு எல்லா உலகங்களையும் முன்போல் தானே ஸ்ருஷ்டி செய்து வந்தார். 34) பிறகு ஸ்ரீ சம்புவானவர் பிரும்மதேவனின் அவ்வரலாற்றைக் கேட்டு, புன்னகைசெய்து, பின்பு ஸ்ரீ முருகனை ஸந்தோஷிக்கச்செய்து, பிரும்மனை விடுவித்தார் (35) பிறகு பிரும்மதேவன் ஸ்ரீ மஹேச்வரரின் அன்புக்குரியவரான ஸாக்ஷாத் ஸ்ரீ முருகனை நமஸ்கரித்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு மிகுந்த ஸந்தோஷத்தோடு மங்களமான காஞ்சீ க்ஷேத்திரத்திற்குச் சென்று (36) அங்கு கருணைக்கடலான ஸாக்ஷாத் ஸ்ரீ ஏகாம்பரேச்வரரைப் பூஜித்து பக்தியுடன் அங்கு தன் பெயரால் ஓர் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து (37) பிறகு அதன் மஹிமையால் பிரும்மதேவன் தான் செய்த பாபத்தைப் போக்கி விட்டு தனதிருப்பிடத்தில் முன்போலிருந்துகொண்டு அதிகாரத்தை நடத்தி வந்தார். (38) மறுபடியும் பிரும்மதேவன் மனதில் சிலவற்றை நினைத்துக்கொண்டு நீலகிரிக்குச் சென்று அங்கு மிகுந்த பக்தியோடு ஸ்ரீ சங்கரரைப் பூஜை செய்தார். (39) அப்பொழுது பகவான் அவரிடம் மிக சந்தோஷமடைந்தவராகி, அங்கு தோன்றி, "ஓ ப்ரும்மனே! உமக்கு மங்களம் உண்டாகட்டும். உமது மனதில் தோன்றிய வரத்தைக் கேட்கலாமென்றார். (40) இவ்வாறு ஸ்ரீ சம்புவின் வார்த்தையைக் கேட்டு பிரும்மதேவன் அவர் முன் நின்று அஞ்சலி செய்துகொண்டு "ஓ பிரபுவே! தங்களது திருநடனத்தைப் பார்ப்பதற்காக முன்பு ஸ்ரீ மஹாவிஷ்ணுவால் தாங்கள் ஆராதிக்கப்பட்டபோது (41) அவருக்கு பிரஸன்னராகி, தன் அருகிலிருந்துகொண்டு படஹ வாத்யம் வாசித்தலை அருளினீரல்லவா? அகையால் ஓ பகவானே! தங்களது திருநடனத்தைப் பார்க்க மிக ஆசைகொண்ட எனக்கும் அந்த நடனத்தை தர்சிக்கவும், அதற்குத் தாளம்போடும் பணியைக் கொடுத்தும் என்னை ரக்ஷிக்கவேண்டும் இல்லாவிடில் தங்களது திருநடனத்தைப்

अन्यथा तावकं नृत्तं न शक्तोऽहं निरीक्षितुम् । गणेभ्यो वेत्रहस्तेभ्यो भयं भवति मे महत् ॥ ४४
इति धातृवचश्श्रुत्वा तथेति जगदीश्वरः । दत्वाऽस्य तालं सुमहत्तत्रैवान्तर्दधे स्वयम् ॥ ४५
तदाप्रभृति वेधाश्च वादयंस्तालवाद्यकम् । दृष्ट्वा नृत्तं नटेशस्य तस्थे प्रीत्या समन्वितः ॥ ४६
तथा ब्रह्मा ब्रह्मलोके पूजयामास शङ्करम् । तस्मै प्रसन्नो भगवान् गिरमूचे स्मिताननः ॥ ४७
तवेप्सितं प्रदास्यामि वद ब्रह्मन्निहाधुना । रथाधिरूढं देवेशं भगवन्तमुमासखम् ॥ ४८
सेवितुं मम भो शंभो वाञ्छाद्य हृदि वर्तते । नशक्यते च संबाधे सेवितुं त्वां महेश्वर ॥ ४९
ताडयन्ति च नन्दीशप्रमुखा वेत्रपाणयः । सारथ्यं तव देवेश रथस्य परिकल्पय ॥ ५०
इति ब्रह्मवचः श्रुत्वा वरं दत्वा महेश्वरः । अन्तर्दधे क्षणादेव तत्रैव परमेश्वरः ॥ ५१
तदाप्रभृति धाताऽपि रथसारथ्यमाप्तवान् । चोदयामास वेदाश्वान् प्रस्थानसमये प्रभोः ॥ ५२
पुरा कैलासशिखरे पूजयित्वा महेश्वरम् । प्रसन्ने च महादेवे प्रार्थयामास वै विधिः ॥ ५३

அன்யதா தாவகம் ந்ருத்தம் ந சக்தோऽஹம் நிரீக்ஷிதும் |
கணேப்யோ வேத்ரஹஸ்தேப்யோ பயம் பவதி மே மஹத் || 44
இதி தாத்ருவச: ச்ருத்வா ததேதி ஜகதீச்வர: | தத்வாऽஸ்ய தாளம் ஸுமஹத்தத்ரைவாந்தர்ததே ஸ்வயம்
ததாப்ரப்ருதி வேதாச்ச வாதயம்ஸ்தாளவாத்யகம் |
த்ருஷ்ட்வா ந்ருத்தம் நடேசஸ்ய தஸ்தே ப்ரீத்யா ஸமன்வித: || 46
ததா ப்ரம்ஹா ப்ரம்ஹலோகே பூஜயாமாஸ சங்கரம் |
தஸ்மை ப்ரஸன்னோ பகவான் கிரமூசே ஸ்மிதானன: || 47
தவேப்ஸிதம் ப்ரதாஸ்யாமி வத ப்ரம்ஹன்னிஹாதுனா | ரதாதிரூடம் தேவேசம் பகவந்தமுமாஸகம் || 48
ஸேவிதும் மம போ சம்போ வாஞ்சாத்ய ஹ்ருதி வர்ததே |
நசக்யதே ச ஸம்பாதே ஸேவிதும் த்வாம் மஹேச்வர || 49
தாடயந்திச நந்தீசப்ரமுகா வேத்ரபாணய: | ஸாரத்யம் தவ தேவேச ரதஸ்ய பரிகல்பய || 50
இதி ப்ரம்ஹவச: ச்ருத்வா வரம் தத்வா மஹேச்வர: | அந்தர்ததே க்ஷணாதேவ தத்ரைவ பரமேச்வர: 51
ததாப்ரப்ருதி தாதாऽபி ரதஸாரத்யமாப்தவான் |
சோதயாமாஸ வேதாச்வான் ப்ரஸ்தானஸமயே ப்ரபோ: || 52
புரா கைலாஸசிகரே பூஜயித்வா மஹேச்வரம் | ப்ரஸன்னே ச மஹாதேவே ப்ரார்த்தயாமாஸ வை விதி: 53

பார்க்க நான் சக்தியற்றவனாகின்றேன். (43) ஏனெனில் கையில் பிரம்பைக்கொண்ட தங்களுடைய கணங்களிடத்திலிருந்து எனக்கு பயமுண்டாகின்றது" என்றார். இவ்வாறு பிரம்மாவின் வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ ஜகதீச்வரன் அப்படியே ஆகட்டுமென்று (44) அவருக்கு ஓர் தாளத்தைக் கொடுத்துவிட்டு மறைந்தார். அதுமுதற்கொண்டு பிரம்மனும் தாளம் போட்டுக்கொண்டே (45) ஸ்ரீ நடராஜருடைய திருநடனத்தைப் பார்த்துக்கொண்டு ஆனந்தித்து வந்தார். பிறகு அதே விதமாய் பிரம்மதேவன் பிரம்மலோகத்தில் ஸ்ரீ சங்கரரைப் பூஜை செய்தார். (46) ஸ்ரீ பகவான் அவருக்கு பிரஸன்னராகி மந்தஹாஸத்துடன் கூறியதாவது :- "ஓ பிரம்மாவே, உமக்கு வேண்டியதைக் கேளும். இப்பொழுது கொடுக்கின்றேன். அதைக் சொல்லும்" என்றார். (47) அதைக்கேட்டு பிரம்மதேவன், "ஓ ஸ்வாமி, தேவேசராகிய தாங்கள் உமாதேவியோடு ரதத்தின்மீது வீற்றிருப்பதை ஸேவிக்க எனக்கு மிகுந்த ஆசை இருக்கின்றது. (48) ஓ மஹேச்வர! கூட்டத்தில் தங்களை ஸேவிப்பதற்கு என்னால் முடியவில்லை. மேலும் நந்திகேச்வரர் முதலியவர்கள் கையில் பிரம்பை வைத்துக்கொண்டு அடிக்கின்றார்கள். (49) ஆகையால் ஓ தேவேச! தங்களுடைய ரதத்திற்கு என்னை ஸாரதியாக வைத்துக்கொள்ளவேண்டும்" என்றார். இவ்வாறு பிரும்மதேவன் வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ மஹேச்வரர் அவ்வாறே வரம் கொடுத்துவிட்டு (50) ஓர் க்ஷணநேரத்திற்குள் அங்கேயே மறைந்தார். அதுமுதற்கொண்டு பிரும்மதேவனும் ஸ்ரீ மஹேச்வரனுடைய ரதத்திற்கு ஸாரதியாக இருந்துகொண்டு (51) ஸ்ரீ பிரபுவானவர் புறப்படும் சமயங்களில் வேதங்களாகிய குதிரைகளை ஓட்டி வந்தார். பின்பு ஓர் சமயத்தில் பிரும்மதேவன் கைலாஸமலையின் சிகரத்தில் ஸ்ரீ மஹேச்வரனைப் பூஜை செய்து (52) அந்த மஹாதேவன் பிரஸன்னரானபொழுது அவரை வேண்டிக்கொண்டதாவது :- "ஓ மஹேச்வர! உங்களுடைய அருளால் விஷ்ணுவையும், எல்லா

विष्णुं लोकांश्च सकलांस्त्वत्प्रसादान्महेश्वर । विलेढुमस्य मे शक्तिर्बिभर्तुमुदरेऽपि च ॥ ५४
पुनश्चापानमार्गेण तथा निस्सारणाय च । इति प्रार्थ्य महादेवं प्राप्य तद्वरमुत्तमम् ॥ ५५
विरोध्य विष्णुं लोकैस्तं विलेहाशुपुरा विधिः । ततस्संप्रार्थितो लोकैर्मुमोचापानमार्गतः ॥ ५६
विष्णुं लोकान्यथापूर्वं ससर्जेश्वरशासनात् । ऊर्ध्वभागं महेशस्य महालिङ्गस्वरूपिणः ॥ ५७
दृष्टवानहमस्मीति यत्प्रोक्तं विष्णवे पुरा । तद्दोषपरिहाराय विधिर्विश्वेश्वरं शिवम् ॥ ५८
पुण्येऽरुणाचले पूर्वं पूजयामास भक्तितः । पूतात्मा पूजया शंभोस्तस्मात्पापाद्भयानकात् ॥ ५९
जगत्ससर्जनिखिलं यथापूर्वमतन्द्रितः । श्रीपर्वते पुरा धाता शिवपूजाञ्चकार हि ॥ ६०
तदा प्रसन्नं देवेशं शिवं परमकारणम् । प्रार्थयामास स विधिः प्रणम्य भुवि दण्डवत् ॥ ६१
स्वामिन्महासनं पद्मं वाहनं हंसमेवच । दक्षयागे पुरा दग्ध्वा वह्नौ महति तावकाः ॥ ६२
गणास्तार्क्ष्येण बुभुजुर्दग्धेनाग्नौ महेश्वर । तन्मह्यमासनं पद्मं हंसं वाहनमीश्वर ॥ ६३

விஷ்ணும் லோகாம்ச்ச ஸகலாம்ஸ்த்வத்ப்ரஸாதான்மஹேச்வர |
விலேடுமஸ்ய மே சக்திர்பிபர்துமுதரேSபிச || 54
புனச்சாபானமார்கேண ததா நிஸ்ஸாரணாய ச | இதி ப்ரார்த்ய மஹாதேவம் ப்ராப்ய தத்வரமுத்தமம் 55
விரோத்ய விஷ்ணும் லோகைஸ்தம் விலேஹாசுபுரா விதி: |
ததஸ்ஸம்ப்ரார்திதோ லோகைர்முமோசாபானமார்கத: || 56
விஷ்ணும் லோகான் யதாபூர்வம் ஸஸர்ஜேச்வரசாஸனாத் |
ஊர்த்வபாகம் மஹேசஸ்ய மஹாலிங்கஸ்வரூபிண: || 57
த்ருஷ்டவானஹமஸ்மீதி யத்ப்ரோக்தம் விஷ்ணவே புரா |
தத்தோஷபரிஹாராய விதிர்விச்வேச்வரம் சிவம் || 58
புண்யேSருணாசலே பூர்வம் பூஜயாமாஸ பக்தித: |
பூதாத்மா பூஜயா சம்போஸ்தஸ்மாத்பாபாத்பயானகாத் || 59
ஜகத்ஸஸர்ஜ நிகிலம்யதாபூர்வமதந்த்ரித: | ஸ்ரீபர்வதே புரா தாதா சிவபூஜாஞ்சகார ஹி || 60
ததா ப்ரஸன்னம் தேவேசம் சிவம் பரம காரணம் | ப்ரார்தயாமாஸ ஸ விதி: ப்ரணம்ய புவிதண்டவத் || 61
ஸ்வாமின்மஹாஸனம் பத்மம் வாஹனம் ஹம்ஸமேவச |
தக்ஷயாகே புரா தக்த்வா வன்ஹௌ மஹதி தாவகா: || 62
கணாஸ்தார்க்ஷ்யேண புபுஜுர்தக்தேனக்னௌ மஹேச்வர |
தன்மஹ்யமாஸனம் பத்மம் ஹம்ஸம் வாஹனமீச்வர || 63

உலகங்களையும் (53) நான் வாயினில் பெரட்டிக்கொண்டு விழுங்கவும், அவைகளை வயிற்றில் தரிக்கவும் பின்பு அபான த்வாரத்தின் வழியாய் வெளிப்படுத்தவும் எனக்குத் திறமை உண்டாகவேண்டும்'' *, 54) என்று ஸ்ரீ மஹாதேவரை வேண்டி, அவ்வாறே சிறந்த வரத்தைப் பெற்று பிரும்மன் முன்னொரு சமயம் விஷ்ணுவையும், எல்லா உலகங்களையும் சேர்த்து சீக்கிரம் விழுங்கி விட்டார். (55) பிறகு எல்லா உலகங்களாலும் வேண்டப்பட்டவராய் தனது அபானமார்க்கத்தின் வழியாக வெளிப்படுத்தி ஸ்ரீ மஹேச்வரரின் கட்டளைப்படி விஷ்ணுவையும், உலகங்களையும் மறுபடியும் ஸ்ருஷ்டித்தார். (56) மேலும் பிரும்மதேவன் மஹாலிங்கத்தின் உருவம் கொண்ட ஸ்ரீ மஹேச்வரருடைய திருமுடியைக் கண்டேனென்று விஷ்ணுவினிடத்தில் பொய் சொல்லிய தோஷம் நீங்குவதற்காக திருவண்ணாமலையில் ஸ்ரீ மஹேச்வரரை பக்தியுடன் பூஜை செய்து, (58) அந்தப் பூஜையினால் மஹா பயங்கரமான, அப்படிப்பட்ட பாவத்திலிருந்து பரிசுத்தராகி, எல்லா உலகங்களையும் முன்போல் சோம்பலின்றி படைத்து வந்தார். (59) பின்னும் ஓர் சமயத்தில் பிரும்மதேவன் ஸ்ரீ சைலத்தில் சிவ பூஜை செய்து அதனால் பிரஸன்னரான, பரமகாரணராகிய ஸ்ரீ தேவேசனை (60) பூமியில் தண்டம்போல்நமஸ்கரித்து வேண்டிக்கொண்டதாவது :- '' ஓ ஸ்வாமி! பூர்வத்தில் தக்ஷ பிரஜாபதியின் யாகத்தில் தங்களுடைய கணங்களெல்லாம் விஷ்ணுவின் கருடனையும், எனது பத்மாஸனத்தையும் ஹம்ஸ வாஹனத்தையும் பெரும் தீயில்போட்டு சுட்டுத்தின்றுவிட்டார்கள் (62) ஆகையால், ஓ விச்வேச்வர! எனக்கு பத்மாஸனத்தையும், ஹம்ஸ வாஹனத்தையும் கொடுத்தருள

குறிப்பு :— * முன்பு பிரும்மாவிற்கும், விஷ்ணுவிற்கும் வாக்குவாதம் ஏற்பட்டபொழுது விஷ்ணுவானவர் பிரும்மாவை தனது நாபியிலிருந்து பிறந்தவரென்று சிக்ஷித்தபடியால் அதற்காக இப்படிப்பட்ட வரத்தை கேட்டார் என்பது கருத்து.

परिकल्प्य विश्वेश प्रणतोऽस्मि तवाधुना । तथेति तद्वरं शंभुस्तस्मै दत्वा स्वयम्भुवे ॥ ६४
अन्तर्हितोऽभवत् क्षिप्रं विधिरप्यवसत्सुखी । ब्रह्मलोकमनुप्राप्य देवैस्सह पितामहः ॥ ६५
पुनश्च विधिराराध्य देवमध्यापकेश्वरम् । श्रुतिपुर्यां ततो लब्ध्वा वेदान् साङ्गान्महेश्वरात् ॥ ६६
तदुक्तं कर्म संभाव्य ससर्जच चराचरम् । पुरा कदाचित्सपुनर्ब्रह्मलोकपितामहः ॥ ६७
हेमकूटमनुप्राप्य तत्र लिङ्गे महेश्वरम् । अर्चयामास विधिवदंबिकापतिमव्ययम् ॥ ६८
ब्रह्मा प्रसन्नमालोक्य पितरं ब्रह्मणस्पतिम् । वव्रे वरमिमं ब्रह्मा जन्ममृत्युभयार्दितः ॥ ६९
परान्तकाले भगवन् जगदेतच्चराचरम् । संहृत्य विष्णुना सार्धं विष्णौ दृष्ट्वा दयाधिका ॥ ७०
तद्देहजास्थिभस्मानि कपालानि कचानपि । धृत्वा विभूषणत्वेन करोषि किल ताण्डवम् ॥ ७१
तद्वदस्मिन्ममापीश परान्ते समुपस्थिते । देहं चरममेनं त्वं संहृत्य पुरुलीलया ॥ ७२
मद्देहजास्थिभस्मानि कपालानि कचानपि । धृत्वैवाभरणं शंभो नृत्तं कुरु दयानिधे ॥ ७३
तेनैव च कृतार्थोऽस्मि न पुनर्जन्म मे ततः । महाश्मशानमभ्येत्य भवल्लोचनवह्निजम् ॥ ७४

பரிகல்பய விச்வேச ப்ரணதோऽஸ்மி தவாதுனா । ததேதி தத்வரம் சம்புஸ்தஸ்மை தத்வா ஸ்வயம்புவே 64
அந்தர்ஹிதோபவத் க்ஷிப்ரம் விதிரப்யவஸத்ஸுகீ । ப்ரம்ஹலோகமனுப்ராப்ய தேவைஸ்ஸஹ பிதாமஹ: 65
புனச்ச விதிராராத்ய தேவமத்யாபகேச்வரம்
ச்ருதிபுர்யாம் ததோ லப்த்வா வேதான் ஸாங்கான்மஹேச்வராத் 66
ததுக்தம் கர்ம ஸம்பாவ்ய ஸஸர்ஜச சராசரம் । புரா கதாசித்ஸபுனர்ப்ரம்ஹலோகபிதாமஹ: ॥ 67
ஹேமகூடமனுப்ராப்ய தத்ர லிங்கே மஹேச்வரம் । அர்சயாமாஸ விதிவதம்பிகாபதிமவ்யயம் ॥ 68
ப்ரம்ஹா ப்ரஸன்னமாலோக்ய பிதரம் ப்ரம்ஹணஸ்பதிம் ।
வவ்ரே வரமிமம் ப்ரம்ஹா ஜன்மம்ருத்யுபயார்தித: ॥ 69
பராந்தகாலே பகவன் ஜகதேதச்சராசரம் ।
ஸம்ஹ்ருத்ய விஷ்ணுனா ஸார்தம் விஷ்ணௌ த்ருஷ்ட்வா தயாதிகா
தத்தேஹஜாஸ்திபஸ்மானி கபாலானி கசானபி । த்ருத்வா விபூஷணத்வேன கரோஷி கில தாண்டவம் 71
தத்வதஸ்மின்மமாபீச பராந்தே ஸமுபஸ்திதே । தேஹம் சரமமேனம் த்வம் ஸம்ஹ்ருத்ய புருலீலயா ॥ 72
மத்தேஹஜாஸ்திபஸ்மானி கபாலானி கசானபி । த்ருத்வைவாபரணம் சம்போ ந்ருத்தம் குரு தயாநிதே 73
தேனைவ ச க்ருதார்தோऽஸ்மி ந புனர்ஜன்ம மே தத: ।
மஹாச்மாசானமப்யேத்ய பவல்லோசனவன்ஹிஜம் ॥ 74

வேண்டும். ஓ ஜகதீச! தங்களுக்கு இப்பொழுது வந்தனம் செய்கின்றேன்'', என்றார். (63) ஸ்ரீ சம்புவும் அவ்வாறே பிரும்மதேவனுக்கு அந்த வரத்தை கொடுத்துவிட்டு சீக்கிரம் மறைந்தார். பிரும்மதேவரும் தனது உலகத்தையடைந்து தேவர்களோடுகூட சுகமாய் வசித்து வந்தார். பின்பு ஓர் சமயம் பிரும்ம தேவன் வேதபுரியில் ஸ்ரீ அத்யாபகேச்வர ஸ்வாமியைப் பூஜைசெய்து பிறகு அந்த மஹேச்வரரிடமிருந்து எல்லா வேதங்களையும், வேதாந்தங்களையும் அடைந்து அவைகளில் சொல்லப்பட்ட கர்மாக்களை அனுஷ்டித்து ஸகல ஸ்தாவர ஜங்கமங்களையும் ஸ்ருஷ்டி செய்து வந்தார் (66) பின்பு ஓர் சமயத்தில் உலகங்களுக்கெல்லாம் பாட்டனான பிரும்மதேவன் ஹேமகூட மலைக்குச் சென்று அங்குள்ள மஹாலிங்கத்தில் அழிவற்றவரும், பார்வதி காந்தருமான ஸ்ரீ மஹேச்வரனைப் பூஜைசெய்து, அதனால் பிரஸன்னரான பிராம்மணாதிபதியான லோகபிதாவைப் பார்த்து (68) பிறப்பு, இறப்பு இவைகளால் உண்டான பயத்தினால் பீடிக்கப்பட்டவராகி வரம் கேட்டதாவது :– ஓ பகவானே! மஹா பிரளயகாலத்தில் இந்த சராசர பிரபஞ்சங்களையெல்லாம் (69) விஷ்ணுவோடுகூட ஸம்ஹரித்து, அவரிடத்திலுள்ள மிகுந்த கருணையால் அவரது உடலெலும்பு, சாம்பல், மண்டையோடு, மயிர் இவைகளை ஆபரணமாய் அணிந்துகொண்டு திருத்தாண்டவம் செய்கிறீர்களன்றோ? அதுபோலவே ஓ ஜகதீச! பிரளயகாலம் வந்தபொழுது கடைசியாக எனது உடலையும் தாங்கள் விளையாட்டாக ஸம்ஹரித்துவிட்டு பிறகு எனது உடலெலும்பு, சாம்பல், மண்டையோடு இவைகளையும் (72) ஆபரணங்களாக தரித்து, கருணைக்கடலாகிய ஓ சம்புவே! தாங்கள் நடனம் செய்து அருளவேண்டும். அதனால் நான் கிருதார்த்தனாகி மறுபிறப்பற்றவனாகி விடுவேன். (73) ஓ பரமேச்வரா! தங்களது நேத்ராக்னியிலிருந்து உண்டாகும் மஹா ச்மசானத்தை அடைந்து எவனுடைய

कस्य भूयोऽस्ति जन्मेश त्वदङ्गाकल्पभस्मनः । त्वज्जटास्पर्शलब्धायां गङ्गायामस्थि भस्मवा ॥ ७५
यस्य कस्यापि वा मुक्तिः किम्वस्ति तव देहगम् । विज्ञप्तिमयमस्यैवं तथास्त्विति तिरोदधे ॥ ७६
सन्तुष्टमानसो ब्रह्मा स्थितः कालं समीक्ष्य च । तथैव तस्य वै शंभुः परान्ते समुपस्थिते ॥ ७७
विधिं संहृत्य हरिणा तदस्थिस्रग्विभूषणः । ननर्त परमं भावं स्वातन्त्र्यञ्चात्मनः स्मरन् ॥ ७८
अनुगृह्यैवमीशानो ब्रह्माणं तं त्वमोचयत् । एवं ब्रह्मा समाराध्य यान्यानाप वरान् शिवात् ॥
सङ्ख्यामेषाञ्च को वेत्ति मया यत्किञ्चिदीरितम् ॥ ७९

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे अष्टषष्टितमोऽध्यायः ॥

கஸ்ய பூயோऽஸ்தி ஜன்மேச த்வதங்காகல்பபஸ்மன: |
த்வஜ்ஜடாஸ்பர்சலப்தாயாம் கங்காயாமஸ்தி பஸ்மவா || 75
யஸ்ய கஸ்யாபி வா முக்தி: கிம்வஸ்தி தவ தேஹகம் |
விக்ஞப்திமயமஸ்யைவம் ததாஸ்த்விதி திரோததே || 76
ஸந்துஷ்டமானஸோ ப்ரம்ஹா ஸ்தித: காலம் ஸமீக்ஷ்ய ச |
ததைவ தஸ்ய வை சம்பு: பராந்தே ஸமுபஸ்திதே || 77
விதிம் ஸம்ஹ்ருத்ய ஹரிணா ததஸ்திஸ்ரக்விபூஷண: |
நனர்த பரமம் பாவம் ஸ்வாதந்த்ரியம் சாத்மன: ஸ்மரன் || 78
அனுக்ருஹ்யைவமீசானோ ப்ரம்ஹாணம் தம் த்வமோசயத் |
ஏவம் ப்ரம்ஹா ஸமாராத்ய யான்யாநாப வரான் சிவாத் ||
ஸங்க்யாமேஷாஞ்ச கோ வேத்தி மயா யத்கிஞ்சிதீரிதம் || 79

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேசகாண்டே அஷ்டஷஷ்டிதமோऽத்யாய:

சாம்பல் தங்கள் உடலுக்கு அலங்காரமாய் தரிக்கப்படுகின்றதோ அப்படிப்பட்டவனுக்கு மறுபிறப்பு இல்லை. (74) ஏனெனில் தங்களுடைய ஜடையில் விழுந்து வந்து கங்கா நதியில் எப்படிப்பட்டவனுடைய எலும்பும், சாம்பலும், போடப்பட்ட மாத்திரத்தில் அவனுக்கு மோக்ஷ ஸாம்ராஜ்யம் கிடைக்கின்றது அப்படியிருக்க அந்த எலும்பும், சாம்பலும் தங்களுடைய சரீரத்திலேயே பட்டால் அவனைப்பற்றி என்ன சொல்லவேண்டும்'' என்றார். (75) இவ்வாறு கேட்டுக்கொண்டபடியே ஆகட்டுமென்று சொல்லிவிட்டு ஸ்ரீ மஹேச்வரன் மறைந்தார். பிறகு பிரும்மதேவனும் மிகுந்த சந்தோஷமடைந்தவராகி அக்காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில், (76) மஹா பிரளயகாலம் வந்தவுடன் ஸ்ரீ சம்புவானவர் விஷ்ணுவோடு கூட பிரும்மாவையும் ஸம்ஹரித்து அவரது எலும்புகளையும் மாலையாக அலங்கரித்துக்கொண்டு (77) தனது சிறந்த தன்மையையும் ஸ்வாதீனத்தையும் மனதில் நினைத்துக்கொண்டே தாண்டவமாடினார். ஸ்ரீ மஹேச்வரன் இவ்வாறு பிரும்மாவுக்கு அனுக்ரஹம் செய்து அவரை ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவித்து மோக்ஷமடையச் செய்தார். (78) ஓ பிராம்மணோத்தமர்களே! பிரும்மதேவன் இவ்வாறு ஸ்ரீ மஹேச்வரனைப் பூஜை செய்து அவரிடமிருந்து அடைந்த வரன்களை யாரால்தான் கணக்கிட முடியும். நான் சொன்னதெல்லாம் அவைகளில் சிறியதேயாகும். (79)

அறுபத்தெட்டாவது அத்யாயம் முற்றிற்று.

॥ अथ एकोनसप्ततितमोऽध्यायः ॥

इन्द्रसूर्यचन्द्राणां श्रीमहेश्वराराधनेन पापनिवृत्तिद्वारा बहुविध अनुग्रह प्राप्तिः ॥

सूतः — अतः परं महेन्द्रेण शिवपूजा यदा यदा । कृता स्वाभीष्टमुद्दिश्य वर्ण्यन्ते तासु काश्चन ॥ १
वलं निहन्तुकामस्तु पुरा शक्रः प्रतापवान् । काळहस्तीशमाराध्य संप्राप्य वरमुत्तमम् ॥ २
संहत्यच वलं दैत्यं युद्धे तद्दोषशान्तये । तमाराध्य पुनस्तत्र कृतार्थोऽभूच्छचीपतिः ॥ ३
पुनः कदाचिच्छापेन दुर्वाससस्यैव वज्रिणः । ऐरावते हयश्रेष्ठे चिन्तितार्थप्रदे मणौ ॥ ४
कल्पवृक्षेषु सर्वेषु सुरभ्यांश्च च्युतेषु च । स्वर्गादंभोधिमध्येतु भीतभीतश्शचीपतिः ॥ ५
दारिद्र्यदुःखसन्तप्तः श्रीमद्वृद्धाचलेश्वरम् । समाराध्य ततः प्राप्य कृपया तस्य पूर्ववत् ॥ ६
पुनश्चैरावतञ्चाश्वमुच्चैःश्रवसमंबुधेः । कल्पकानपि वृक्षांश्च कामधेनुञ्च सर्वदा ॥ ७
चिन्तामणिं तथा देवश्रियं पूर्ववदाप सः । पुनः कदाचिदिन्द्रस्य गौतमस्यैव शापतः ॥ ८
सहस्रयोन्याञ्जातायां सर्वाङ्गेष्वपि लज्जया । काश्यां विश्वेशमाराध्य सहस्राक्षो बभूव सः ॥ ९

॥ அத ஏகோனஸப்ததிதமோऽத்யாய: ॥

இந்திரன், ஸூர்யன், சந்திரன் இவர்கள் ஸ்ரீ மஹேச்வரனை ஆராதித்து பாபங்கள் விலகி பலவித அநுக்கிரஹத்தைப் பெறுதல்.

ஸூத: — அத: பரம் மஹேந்த்ரேண சிவபூஜா யதா யதா ।
க்ருதாஸ்வாபீஷ்டமுத்திச்ய வர்ண்யந்தே தாஸு காச்சன ॥ 1
வலம் நிஹந்து காமஸ்து புரா சக்ர: ப்ரதாபவான் । காளஹஸ்தீசமாராத்ய ஸம்ப்ராப்ய வரமுத்தமம் ॥ 2
ஸம்ஹ்ருத்யச வலம் தைத்யம் யுத்தே தத்தோஷசாந்தயே ।
தமாராத்ய புனஸ்தத்ர க்ருதார்த்தோऽபூச்சசீபதி: ॥ 3
புன: கதாசிச்சாபேன துர்வாஸஸ்யைவ வஜ்ரிண: । ஐராவதே ஹயச்ரேஷ்டே சிந்திதார்தப்ரதே மணௌ 4
கல்பவ்ருக்ஷேஷு ஸர்வேஷு ஸுரப்யாஞ்ச ச்யுதேஷு ச । ஸ்வர்காதம்போதிமத்யேது பீதபீதச்சசீபதி: 5
தாரித்ரியது:கஸந்தப்த: ஸ்ரீமத்வ்ருத்தாசலேச்வரம் । ஸமாராத்ய தத: ப்ராப்ய க்ருபயா தஸ்ய பூர்வவத் ॥ 6
புனச்சைராவதஞ்சாச்வமுச்சை:ச்ரவஸமம்புதே: । கல்பகானபி வ்ருக்ஷாம்ச்ச காமதேனுஞ்ச ஸர்வதா ॥ 7
சிந்தாமணிம் ததா தேவச்ரியம் பூர்வவதாப ஸ: । புந: கதாசிதிந்த்ரஸ்ய கௌதமஸ்யைவ சாபத: ॥ 8
ஸஹஸ்ரயோன்யாம் ஜாதாயாம் ஸர்வாங்கேஷ்வபி லஜ்ஜயா ।
காச்யாம் விச்வேசமாராத்ய ஸஹஸ்ராக்ஷோ பபூவ ஸ: ॥ 9

அறுபத்தொன்பதாவது அத்தியாயம்.

ஸூத முனிவர் கூறுகின்றார் :— ஓ பிராம்மணோத்தமர்களே! இதன் பிறகு தேவேந்திரனால் தனது அபீஷ்டத்தைக் குறித்து எப்பொழுதெல்லாம் சிவபூஜை செய்யப்பட்டதோ அவைகளில் சிலவற்றை எடுத்துச் சொல்லுகிறேன். (1) பூர்வத்தில் பலசாலியான இந்திரன் பலாசுரனைக் கொல்லுவதற்காக ஸ்ரீ காளஹஸ்தீச்வரரைப் பூஜித்து சிறந்த வரத்தை அடைந்து (2) பலாசுரனை யுத்தத்தில் கொன்று பிறகு இந்திராணியின் கணவனான அந்த இந்திரன் அந்த தோஷம் நீங்குவதற்காக ஸ்ரீ பகவானை மறுபடியும் காளஹஸ்தீச்வர க்ஷேத்திரத்தில் பூஜை செய்து கிருதார்த்தனானான். (3) பிறகு மற்றொரு சமயத்தில் துர்வாஸ முனிவரின் சாபத்தால் அந்த இந்திரனுடைய ஐராவதம், உச்சைச்ரவஸ் என்ற சிறந்த குதிரை, நினைத்த பொருளைத் தரக்கூடிய சிந்தாமணி, கற்பக விருக்ஷம், காமதேனு இவைகள் யாவும் ஸ்வர்கத்திலிருந்து நடுக் கடலில் விழுந்துவிட்டபொழுது இந்திரன் மிகவும் பயந்து நடுநடுங்கியவனாகி (5) வறுமையின் துக்கத்தால் தவிக்கின்றவனாகி ஸ்ரீ விருத்தாசலேச்வரரை நன்கு பூஜித்து அவரது அருளால் முன்போல் மறுபடியும் (6) கடலிலிருந்து ஐராவதம், உச்சைசிரவஸ், கற்பக விருக்ஷம், காமதேனு, சிந்தாமணி இவைகளையும் மற்றுமுள்ள ஸகல தேவ ஸம்பத்துக்களையும் முன்போலவே அவன் அடைந்தான். பிறகு ஓர் சமயத்தில் கௌதம முனிவரின் சாபத்தினால் இந்திரன் தனது உடல் முழுவதும் ஆயிரம் யோனிகள் உண்டாகி, அதனால் மிக வெட்கமடைந்து, காசிக்குச் சென்று ஸ்ரீ விச்வேச்வரரைப் பூஜித்து,

एकदातु महेन्द्रस्य पादस्पर्शे मुनीश्वराः । अशपन् केचनामुं ते देहोऽस्यान्यो भवेदिति ॥ १०
तेन शापेन सोऽप्यन्यदेही भूत्वाऽतिदुःखितः । नीत्वाऽनेकं ततः कालं केदारे परमेश्वरम् ॥ ११
समाराध्य ततः प्राप्य पौर्विकं देहमात्मनः । स्वर्गाधिपत्यमपि तच्च्युतं शंभोरनुग्रहात् ॥ १२
पुत्रार्थञ्च पुरा शम्भुं काञ्च्यामाराध्य वृत्रहा । जयन्तं प्राप्य तनयं पुत्री हृष्टमनाह्यभूत् ॥ १३
कमलालयमभ्येत्य कदाचिन्मघवान् पुनः । समाराध्याप देवेशं मेघं वाहनमात्मनः ॥ १४
उच्चैः श्रवसमश्वञ्च कृपया परमेशितुः । पुण्डरीकपुरे पुण्ये पूजयित्वा महेश्वरम् ॥ १५
पुरा शतक्रतुः प्राप गाणापत्यमनुत्तमम् । श्रीमत्कैलासमन्तेऽपि प्राप्तवाञ्छङ्करप्रियः ॥ १६
तथा मरुत्वानपरः पूजयित्वा पुरद्रुहम् । पुण्येऽरुणाचलक्षेत्रे शचीमाप प्रियाम् पराम् ॥ १७
रंभादिदेवगणिकाक्रीडामाप मनोरमाम् । एवं संपूज्य देवेशं फलं बहु शतक्रतुः ॥ १८
प्राप्तवांस्तत्र कतिचिदीरिता न मयाऽखिलम् । एवं सुरैः कृतां पूजां वक्ष्येऽन्यैरपि शूलिनः ॥ १९

ஏகதாது மஹேந்த்ரஸ்ய பாதஸ்பர்சே முனீச்வரா: ।
அசபன் கேசனாமும் தே தேஹோऽஸ்யான்யோ பவேதிதி ॥ 10

தேன சாபேன ஸோऽப்யன்யதேஹீ பூத்வாऽதிது:கித: ।
நீத்வாऽநேகம் தத: காலம் கேதாரே பரமேச்வரம் ॥ 11

ஸமாராத்ய தத: ப்ராப்ய பௌர்விகம் தேஹமாத்மன: ।
ஸ்வர்காதிபத்யமபி தச்ச்யுதம் சம்போரனுக்ரஹாத் ॥ 12

புத்ரார்தஞ்ச புரா சம்பும் காஞ்ச்யாமாராத்ய வ்ருத்ரஹா ।
ஜயந்தம் ப்ராப்ய தனயம் புத்ரீ ஹ்ருஷ்டமனாஹ்யபூத் ॥ 13

கமலாலயமப்யேத்ய கதாசின்மகவான் புன: । ஸமாராத்யாப தேவேசம் மேகம் வாஹனமாத்மன: ॥ 14

உச்சை:ச்ரவஸமச்வஞ்ச க்ருபயா பரமேசிது: । புண்டரீகபுரே புண்யே பூஜயித்வா மஹேச்வரம் ॥ 15

புரா சதக்ரது: ப்ராப காணபத்யமனுத்தமம் । ஸ்ரீமத்கைலாஸமந்தேऽபி ப்ராப்தவான் சங்கரப்ரிய: ॥ 16

ததா மருத்வானபர: பூஜயித்வா புரத்ருஹம் ।
புண்யேऽருணாசலக்ஷேத்ரே சசீமாப ப்ரியாம் பராம் ॥ 17

ரம்பாதிதேவகணிகாக்ரீடாமாப மனோரமாம் । ஏவம் ஸம்பூஜ்ய தேவேசம் பலம் பஹு சதக்ரது: ॥ 18

ப்ராப்தவாம்ஸ்தத்ர கதிசிதீரிதா ந மயாऽகிலம் ।
ஏவம் ஸுரை: க்ருதாம் பூஜாம் வக்ஷ்யேऽன்யைரபி சூலின: ॥ 19

அவர் அருளால் ஆயிரம் கண்களை உடையவனாக ஆனான். (9) ஒரு சமயத்தில் இந்திரனுடைய காலானது சில முனிவர்களின்பேரில் பட்டபொழுது அவர்கள் அவனை வேறு சரீரம் உண்டாகவேண்டுமென்று சபித்தார்கள். (10) அந்த சாபத்தினால் அவன் உடனே வேறு தேகத்தை அடைந்து, மிகுந்த துக்கத்தோடு வெகு காலத்தைக் கழித்து பிறகு கேதார க்ஷேத்திரத்தில் ஸ்ரீ பரமேச்வரனைப் பூஜை செய்து (11) அவருடைய அருளால் முன்பு தானிழந்த சரீரத்தையும், ஸ்வர்க்கத்தின் ஆதிபத்யத்தையும் அடைந்தான் (12) பின்பு ஒரு சமயம் விருத்திராசுரனுக்குச் சத்ருவான இந்திரன் புத்திரனை அடைவதற்காக காஞ்சிபுரத்தில் ஸ்ரீ சம்புவை பூஜித்து ஜயந்தனைப் பிள்ளையாக அடைந்து, புத்ரவானாக ஆகி, மிகுந்த ஸந்தோஷத்துடனிருந்து வந்தான். (13) பிறகு ஒரு சமயம் இந்திரன் திருவாரூருக்குச் சென்று ஸ்ரீ மஹேச்வரனைப் பூஜித்து மேகத்தை வாஹனமாக அடைந்தான். (14) மேலும் ஸ்ரீ பரமசிவனுடைய கிருபையால் உச்சைச்ரவஸமென்ற குதிரையையும் அடைந்தான். மேலும் இந்திரன் முன்பு மஹா புண்யமான சிதம்பரத்தில் ஸ்ரீ மஹேச்வரனைப் பூஜை செய்து முடிவில் கைலாஸமடைந்து ஸ்ரீ சங்கரருக்குப் பிரியமுள்ளவனாகி உத்தமமான கணாதிபதித் தன்மையை அடைந்தான். (16) அதே விதமாக மற்றொரு சமயம் இந்திரனும் மிகப் புண்யமான திருவண்ணாமலை க்ஷேத்திரத்தில் ஸ்ரீ மஹேச்வரனைப் பூஜை செய்து சிறந்த இந்திராணியை மனைவியாக அடைந்தான். (17) பின்னும் தேவதாஸிகளான ரம்பை முதலியவர்களோடு நேர்த்தியான க்ரீடைகளை அனுபவித்தான். இவ்விதமாக இந்திரன் ஸ்ரீ மஹேச்வரனைப் பூஜை செய்து பலவிதப் பயன்களை அடைந்தான். (18) அவைகளில் சிலவற்றை மட்டிலும் சொன்னேன். எல்லாவற்றையும் உரைக்க என்னால் முடியாது. பின்னும் இதே விதமாக மற்ற தேவர்களாலும் சிவபூஜை

पुराऽर्कः कश्चिदीशानं शिवक्षेत्रेषु पूजयन् । झर्झरं स्वशरीरस्य वक्त्रं कुत्सितमप्यलम् ॥ २०
त्यक्त्वा प्राप परं रूपं दिव्यमीश्वरवल्लभः । प्रापान्यो भानुमान्नेत्रे भद्रेणोत्पाटिते पुरा ॥ २१
दक्षाध्वरे महादेवं पूजयित्वा पुरुष्टुतम् । तथाऽत्र यागे भग्नांश्च दन्तान् प्राप परो रविः ॥ २२
तत्याज दोषमपरस्सविता पूजयञ्छिवम् । रतिजन्त्वृषिपत्न्याश्च जारभावेन वै पुरा ॥ २३
छायासंभोगजाद्दोषान्मोक्षमापापरो रविः । आदित्या एवमपरे स्वस्वदोषान्व्यपोह्य च ॥ २४
प्रापिरे च निजं कामं रूपञ्च वपुषस्तथा । चन्द्रोऽपि सांबमीशानं समाराध्य पुरातनम् ॥ २५
दक्षस्य शापान्मोक्षञ्च संप्राप्य तदनन्तरम् । वीरभद्रपदाघातशरीरस्य रुजं जहौ ॥ २६
एवं बहूनि चन्द्रोऽपि दुरितानि जहौ मुदा । संप्राप ससुखं सर्वं पूजया शङ्करस्य वै ॥ २७
दिशामधीशास्सर्वेऽपि पूजया परमेशितुः । संप्राप्य पुत्रानैश्वर्यं वाञ्छितं सकलं तथा ॥ २८
संप्रापुस्त्यक्तदुरितास्सर्वेश्वरकृपाबलात् । तथाष्टौ वसवः पूजां देवदेवस्य शूलिनः ॥ २९

புரார்க: கச்சிதீசானம் சிவக்ஷேத்ரேஷு பூஜயன் | ஜர்ஜரம் ஸ்வசரீரஸ்ய வக்த்ரம் குத்ஸிதமப்யலம் || 20
த்யக்த்வா ப்ராப பரம் ரூபம் திவ்யமீச்வரவல்லப: |
ப்ராபான்யோ பானுமான்னேத்ரே பத்ரேணோத்பாடிதே புரா || 21
தக்ஷாத்வரே மஹாதேவம் பூஜயித்வா புருஷ்டுதம் |
ததாऽத்ர யாகே பக்னாம்ச்ச தந்தான் ப்ராப பரோ ரவி: || 22
தத்யாஜ தோஷமபரஸ்ஸவிதா பூஜயஞ்சிவம் | ரதிஜந்த்வ்ருஷிபத்ன்யாச்ச ஜாரபாவேன வை புரா || 23
சாயாஸம்போகஜாத்தோஷான்மோக்ஷமாபாபரோ ரவி: |
ஆதித்யா ஏவமபரே ஸ்வஸ்வதோஷான்வ்யபோஹ்யச || 24
ப்ராபிரேச நிஜம் காமம் ரூபஞ்ச வபுஷஸ்ததா | சந்த்ரோऽபி ஸாம்பமீசானம் ஸமாராத்ய புராதனம் || 25
தக்ஷஸ்ய சாபான்மோக்ஷஞ்ச ஸம்ப்ராப்ய ததனந்தரம் |
வீரபத்ரபதாகாதசரீரஸ்ய ருஜம் ஜஹௌ || 26
ஏவம் பஹூனி சந்த்ரோऽபி துரிதானி ஜஹௌ முதா |
ஸம்ப்ராப ஸஸுகம் ஸர்வம் பூஜயா சங்கரஸ்ய வை || 27
திசாமதீசாஸ்ஸர்வேऽபி பூஜயா பரமேசிது: | ஸம்ப்ராப்ய புத்ரானைச்வர்யம் வாஞ்சிதம் ஸகலம் ததா || 28
ஸம்ப்ராபுஸ்த்யக்ததுரிதாஸ்ஸர்வேச்வரக்ருபாபலாத் |
ததாऽஷ்டௌ வஸவ: பூஜாம் தேவதேவஸ்ய சூலின: || 29

செய்யப்பட்டிருப்பதைப்பற்றிக் கூறுகின்றேன் (19) முன்பு ஓர் சூரியன் அநேகம் சிவக்ஷேத்திரங்களில் ஸ்ரீ ஈசானனைப் பூஜை செய்து, தனது உடலின் மெலிந்த தன்மையையும், தனது முகத்திலிருந்த விகாரத் தன்மையையும் (20) விட்டு ஸ்ரீ பரமேச்வரனுக்கு அன்புள்ளவனாகி, மிக அழகிய உருவத்தை அடைந்தான். மற்றொரு சூரியனும் முன்பு தக்ஷனுடைய யாகத்தில் வீரபத்ரரால் பிடுங்கப்பட்ட இரு கண்களையும் யாவராலும் பலவிதமாய் துதி செய்யப்படுகின்ற ஸ்ரீ மஹாதேவரை பூஜித்து மறுபடி அடைந்தான். மற்றொரு ஆதித்யனும் இந்த யாகத்தில் உடைக்கப்பட்டுப் போன பற்களைத் திரும்ப அடைந்தான். (22) மற்றொரு சூரியன் ஸ்ரீ மஹாதேவரைப் பூஜித்து முன்பு ஓர் ரிஷிபத்னியோடு வியபிசாரத்தனமாய் புணர்ந்த தோஷத்தைப் போக்கிக் கொண்டான். (23) பின்னும் ஓர் ஆதித்யனும் சிவபூஜையால் சாயாதேவியோடு புணர்ந்த தோஷத்திலிருந்து நீங்கினான். மேலும் இதே விதமாக மற்றுமுள்ள ஆதித்யர்களும் அவரவர்களின் பாவங்களை சிவபூஜையால் போக்கடித்துக்கொண்டு (24) நல்ல உருவம், நல்ல சரீரம் இவைகளையும், தாங்கள் வேண்டிய இஷ்டங்களையும் பெற்றார்கள். சந்திரனும் புராதனமான ஸ்ரீ ஜகதீசனை பூஜை செய்து அதனால் (25) தக்ஷ பிரஜாபதியின் சாபத்திலிருந்து விடுபட்டு வீரபத்ரருடைய கால் உதையால் ஏற்பட்ட உடல் வலியிலிருந்து நீங்கப் பெற்றான். (26) இவ்விதம் சந்திரன் சிவபூஜையின் மஹிமையால் அநேகம் பாவங்களைப் போக்கிக்கொண்டு மிகுந்த சந்தோஷத்துடன் எல்லா சுகங்களையும் அடைந்திருந்து வருகிறான். (27) மேலும் எல்லா திக்பாலர்களும் ஸ்ரீமஹாதேவரை பூஜை செய்து அவரது கிருபா பலத்தால் தங்களது எல்லா பாவங்களையும் போக்கடித்துக்கொண்டு ஸந்தானம், ஸம்பத் முதலிய எல்லா அபீஷ்டங்களையும் அடைந்தார்கள். அவ்விதமே அஷ்டவஸுக்களும் தேவாதி தேவரான

कृत्वा स्वं स्वमवापुस्ते वाञ्छितं त्यक्तकिल्बिषाः । तथैव चाश्विनौ देवौ पूजयन्तौ महेश्वरम् ॥ ३०
विशुद्धौ सर्वपापेभ्यः प्रापतुर्निजमीप्सितम् । रुद्राश्चैकादश तथा महात्मानो महेश्वरम् ॥ ३१
पूजयन्तोऽखिलं प्रापुर्वाञ्छितं ध्वस्तकिल्बिषाः । ऋषयस्सप्तसङ्ख्याकास्समभ्यर्च्य महेश्वरम् ॥
संप्रापुस्सकलं कामं विशुद्धा वीतकिल्बिषाः ॥ ३२

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे एकोनसप्ततितमोऽध्यायः ॥

॥ अथ सप्ततितमोऽध्यायः ॥

त्रिपुरासुरतपश्चरणं विष्णुनारदाभ्यां बुद्धवेषग्रहणञ्च ॥

सूतः — उत्तानपादसंभूतो ध्रुवो नाम नृपात्मजः । ग्रहाश्च नव सूर्याद्यास्सप्तविंशतितारकाः ॥ १
मेषाद्या राशयो योगा विष्कम्भाद्याश्च भूसुराः । करणानि च सप्तापि शकुनादिस्थिराण्यपि ॥ २

க்ருத்வா ஸ்வம் ஸ்வமவாபுஸ்தே வாஞ்சிதம் த்யக்தகில்பிஷா: ।
ததைவ சாச்விநௌ தேவௌ பூஜயந்தௌ மஹேச்வரம் ॥ 30
விசுத்தௌ ஸர்வ பாபேப்ய: ப்ராபதுர் நிஜமீப்ஸிதம் । ருத்ராச்சைகாதச ததா மஹாத்மானோ மஹேச்வரம் 31
பூஜயந்தோऽகிலம் ப்ராபுர்வாஞ்சிதம் த்வஸ்தகில்பிஷா: ।
ருஷயஸ்ஸப்த ஸங்க்யாதாஸ்ஸமப்யர்ச்ய மஹேச்வரம் ॥
ஸம்ப்ராபுஸ்ஸகலம் காமம் விசுத்தா வீதகில்பிஷா: ॥ 32

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேசகாண்டே ஏகோனஸப்ததிதமோऽத்யாய:

॥ அத ஸப்ததிதமோऽத்யாய: ॥

த்ருபுராஸுரர்கள் தவம் செய்ததும், விஷ்ணு நாரதர்கள் புத்த வேஷத்தை தரித்ததும்.

ஸூத: — உத்தானபாத ஸம்பூதோ த்ருவோ நாம ந்ருபாத்மஜ: ।
க்ரஹாச்ச நவ ஸூர்யாத்யாஸ்ஸப்தவிம்சதிதாரகா: ॥ 1
மேஷாத்யா ராசயோ யோகா விஷ்கம்பாத்யாச்ச பூஸுரா: ।
கரணானி ச ஸப்தாபி சகுனாதிஸ்திராண்யபி ॥ 2

ஸ்ரீ மஹாதேவரைப் பூஜித்து (29) தங்களது பாவங்களைப் போக்கி தங்கள் அபீஷ்டங்களை அடைந்திருக்கின்றார்கள். அவ்விதமே அச்வனீ தேவர்களும் ஸ்ரீ மஹேச்வரரை பூஜித்து (30) எல்லா பாவங்களிலிருந்தும் விடுபட்டு எல்லா அபீஷ்டங்களையும் அடைந்திருக்கிறார்கள். மேலும் மஹாத்மாக்களான ஏகாதச ருத்ரர்களும் ஸ்ரீ பரமேச்வரனைப் (31) பூஜை செய்து எல்லா பாவங்களும் விலகி வேண்டிய பலனை அடைந்திருக்கின்றார்கள். ஸப்த ரிஷிகளும் ஸ்ரீ பரமேச்வரனைப் பூஜை செய்து பாவங்களைப் போக்கிக்கொண்டு எல்லா அபீஷ்டங்களையும் அடைந்திருக்கிறார்கள். (32)

அறுபத்தொன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

எழுபதாவது அத்தியாயம்

ஸூத முனிவர் கூறுகின்றார் :— ஓ முனிவர்களே! உத்தானபாதரின் புத்திரரான துருவனென்னும் ராஜகுமாரனும் சூரியன் முதலிய ஒன்பது கிரஹங்களும் இருபத்தேழு நக்ஷத்திரங்களும் (1) மேஷம் முதலிய ராசிகளும் விஷ்கம்பம் முதலிய யோகங்களும் கரணங்களும் சகுனம் முதலிய ஏழு ஸ்திரங்களும் (2)

विद्याधराश्च गन्धर्वा गरुडोरगराक्षसाः । यक्षास्सिद्धा गुह्यकाश्च तथा किंपुरुषादयः ॥ ३
किन्नराश्च पिशाचाश्च दैत्याः प्रह्लादपूर्वकाः । मनुष्याः पशवश्चैव पक्षिणो वृक्षपूर्वकाः ॥ ४
स्थावरा जङ्गमाश्चान्ये येचान्ये जीवजन्तवः । पर्वताश्च समुद्राश्च गङ्गाद्यास्सरितस्तथा ॥ ५
ब्रह्मर्षयो वसिष्ठाद्या नारदाद्यास्सुरर्षयः । ब्रह्माण्डानि च सर्वाणि सर्वैरावरणैस्सह ॥ ६
अभ्यर्च्य देवदेवेशं लिङ्गमूर्तिं सनातनम् । स्वं स्वं पदञ्च संप्राप्य स्वस्वाभीष्टमवाप्यच ॥ ७
दुरितानि च निर्धूय परां निर्वृतिमापिरे । प्रत्येकं देवमाराध्य प्राप्ताभीष्टा मयेरिताः ॥ ८
अतः परं प्रवक्ष्यामि संभूयाभ्यर्च्य शङ्करम् । येऽनिष्टानि च निर्धूय स्वाभीष्टानि च लेभिरे ॥ ९
तानहं संप्रवक्ष्यामि श्रूयतामवधानतः । पुरा पुराणि त्रीण्यासन्नयोरजतकाञ्चनैः ॥ १०
तानि भूमौ नभोमध्ये निवसन्ति त्रिविष्टपे । तेषु तारकसंभूतास्त्रयश्श्रेष्ठा महासुराः ॥ ११
विद्युन्माली तारकाक्षः कमलाक्षश्च वीर्यवान् । षट्षष्टिकोटिसङ्ख्याकैस्सुरैर्निवसन्ति ते ॥ १२
बाधयन्तश्च लोकांस्त्रीन् सुरान्निर्जित्य लीलया । तपश्चकुश्च ते पूर्वमुद्दिश्य चतुराननम् ॥ १३

வித்யாதராச்ச கந்தர்வா கருடோரகராக்ஷஸா: | யக்ஷாஸ்ஸித்தா குஹ்யகாச்ச ததா கிம்புருஷாதய: || 3
கின்னராச்ச பிசாசாச்ச தைத்யா: ப்ரஹ்லாதபூர்வகா: |
மனுஷ்யா: பசவச்சைவ பக்ஷிணோ வ்ருக்ஷபூர்வகா: || 4
ஸ்தாவரா ஜங்கமாச்சான்யே யேசான்யே ஜீவஜந்தவ: |
பர்வதாச்ச ஸமுத்ராச்ச கங்காத்யாஸ்ஸரிதஸ்ததா || 5
ப்ரம்ஹர்ஷயோ வஸிஷ்டாத்யா நாரதாத்யாஸ்ஸுரர்ஷய: |
ப்ரம்ஹாண்டானி ச ஸர்வாணி ஸர்வைராவரணைஸ்ஸஹ || 6.
அப்யர்ச்ய தேவதேவசம் லிங்கமூர்த்திம் ஸனாதனம் |
ஸ்வம் ஸ்வம் பதஞ்ச ஸம்ப்ராப்ய ஸ்வஸ்வாபீஷ்டமவாப்யச || 7
துரிதானி சனிர்தூய பராம் நிர்வ்ருதிமாபிரே | ப்ரத்யேகம் தேவமாராத்ய ப்ராப்தாபீஷ்டா மயேரிதா: || 8
அத: பரம் ப்ரவக்ஷ்யாமி ஸம்பூயாப்யர்ச்ய சங்கரம் | யேSனிஷ்டானிச நிர்தூய ஸ்வாபீஷ்டானிச லேபிரே 9
தானஹம் ஸம்ப்ரவக்ஷ்யாமி ச்ரூயதாம வதானத: | புரா புராணி த்ரீண்யாஸன்னயோரஜதகாஞ்சனை: || 10
தானி பூமௌ நபோமத்யே நிவஸந்தி த்ரிவிஷ்டபே |
தேஷு தாரகஸம்பூதாஸ்த்ரயச்ச்ரேஷ்டா மஹாஸுரா: || 11
வித்யுன்மாலீ தாரகாக்ஷ: கமலாக்ஷச்ச வீர்யவான் |
ஷட்ஷஷ்டிகோடிஸங்க்யாகைரஸுரைர்நிவஸந்தி தே || 12
பாதயந்தச்ச லோகாம்ஸ்த்ரீன் ஸுரான்னிர்ஜித்ய லீலயா |
தபச்சக்ருச்ச தே பூர்வமுத்திச்ய சதுரானனம் || 13

வித்யாதரர், கந்தர்வர், கருடர், உரகர், ராக்ஷஸர்கள், யக்ஷர்கள், ஸித்தர்கள், குஹ்யகர்கள், கிம்புருஷர்கள் (3) கின்னரர்கள், பிசாசர்கள் முதலியவர்களும் பிரஹ்லாதன் முதலிய அசுரர்களும், மனுஷ்யர்களும், பசுக்களும், பறவைகளும், மரம் முதலியவைகளும் (4) மற்றும் ஸ்தாவர ஜங்கம ரூபமான எல்லா ஜீவராசிகளும், மலைகள், ஸமுத்ரங்கள், கங்கை முதலிய நதிகளும் (5) வஸிஷ்டர் முதலிய பிரும்ம ரிஷிகளும், நாரதர் முதலிய தேவ ரிஷிகளும் எல்லா ஆவரணங்களோடு கூடிய எல்லா பிரும்மாண்டங்களும் (6) என்றும் அழிவற்றவரும் லிங்கமூர்த்தியுமான ஸ்ரீ தேவாதிதேவரை பூஜை செய்து தம் தம் பதவிகளையும் மற்றுமுள்ள அபீஷ்டங்களையும் அடைந்து (7) எல்லா பாபங்களிலிருந்தும் விடுபட்டு, பரம சுகத்தை அடைந்திருக்கிறார்கள். ஓ முனிவர்களே! அவரவர் தனித்தனியாய் பூஜை செய்து வேண்டிய அபீஷ்டங்களை அடைந்திருப்பவர்களைப்பற்றிச் சொன்னேன். (8) இதற்குப் பிறகு பலர் சேர்ந்து ஸ்ரீசங்கரரை பூஜை செய்ததால் ஸகல பாபங்களும் விலகி தங்கள் தங்கள் அபீஷ்டங்களை அடைந்திருப்பவைகளைப்பற்றி இப்பொழுது நான் சொல்லுகிறேன். அதை கவனமாய்க் கேளுங்கள். பூர்வத்தில் இரும்பு, வெள்ளி, தங்கம் இவைகளாலான மூன்று பட்டணங்களிருந்தன. (9, 10) அவைகளில் பூமியில் ஒன்றும், நடுவானத்தில் ஒன்றும், ஸ்வர்கத்திலொன்றுமாயிருந்தன. அவைகளில் தாரகாசுரனின் பிள்ளைகளான வித்யுன்மாலி, தாரகாக்ஷன், பராக்கிரமசாலியான கமலாக்ஷனென்றவர்களாகிய பெருமை வாய்ந்த மூன்று பெரிய அசுரர்களும், அறுபத்தாறு கோடி அசுரர்களோடுகூட விளையாட்டாகவே தேவர்களையெல்

आस्थाय घोरन्नियममात्मनित्यत्वकाङ्क्षया । तपसैषाञ्च निर्दग्धं त्रैलोक्यं सचराचरम् ॥ १४
ततः प्रादुरभूद् ब्रह्मा तेषामग्रे सनातनः । हंसारूढोऽमरेन्द्राद्यैः परिवारितसन्निधिः ॥ १५
अर्चयित्वातु तं देवमसुरा वव्रिरे वरम् । अस्माकममराधीश देहि नित्यत्वमञ्जसा ॥ १६
कृपया देवदेव त्वं चतुर्मुख नमस्तव । तानुवाच ततो ब्रह्मा यदि नित्यत्वमस्ति नः ॥ १७
ततो दातुं वयं शक्ता असुरेन्द्रसुतोत्तमाः । नाविद्यमानं शक्तोऽस्मि दातुं दातापि दानवाः ॥ १८
अहञ्च नैव नित्योऽस्मि विष्णुश्चान्येऽपि सत्तमाः । अनित्या एव ये के च विबुधाश्च विना शिवम् ॥ १९
नित्य एको जगत्यस्मिन्मृत्युञ्जय उदाहृतः । तस्मादन्यं वरं यूयं वृणुध्वं मत्सुरेतराः ॥ २०
इति वाक्यं विधेः श्रुत्वा संमन्त्र्य च परस्परम् । वव्रिरे प्रणिपत्यैनं नित्यत्वसदृशं वरम् ॥ २१
अस्माकं त्रीणि देवेश भ्रातॄणां नगराणि च । भूम्यन्तरिक्षस्वर्गेषु स्वर्णदुर्वर्णलोहकैः ॥ २२

ஆஸ்தாய கோரன்னியமமாத்மனித்யத்வகாங்க்ஷயா |
தபஸைஷாஞ்ச நிர்தக்தம் த்ரைலோக்யம் ஸசராசரம் || 14

தத: ப்ராதுராபூத்ப்ரம்ஹா தேஷாமாக்ரே ஸனாதன: |
ஹம்ஸாரூடோऽமரேந்த்ராத்யை: பரிவாரிதஸன்னிதி: || 15

அர்சயித்வாது தம் தேவமஸுரா வவ்ரிரே வரம் | அஸ்மாகமமராதீச தேஹி நித்யத்வமஞ்ஜஸா || 16
க்ருபயா தேவதேவ த்வம் சதுர்முக நமஸ்தவ | தானுவாச ததோ ப்ரம்ஹா யதி நித்யத்வமஸ்தி ந: || 17

ததோ தாதும் வயம் சக்தா அஸுரேந்த்ரஸுதோத்தமா: |
நாவித்யமானம் சக்தோऽஸ்மி தாதும் தாதாபி தானவா: || 18

அஹஞ்ச நைவ நித்யோऽஸ்மி விஷ்ணுச்சான்யோऽபி ஸத்தமா:
அனித்யா ஏவ யே கே ச விபுதாச்ச வினா சிவம் || 19

நித்ய ஏகோ ஜகத்யஸ்மின்ம்ருத்யுஞ்ஜய உதாஹ்ருத: |
தஸ்மாதன்யம் வரம் யூயம் வ்ருணுத்வம் மத்ஸுரேதரா: || 20

இதி வாக்யம் விதே: ச்ருத்வா ஸம்மந்த்ரியச பரஸ்பரம் |
வவ்ரிரே ப்ரணிபத்யேனம் நித்யத்வஸத்ருசம் வரம் || 21

அஸ்மாகம் த்ரீணி தேவேச ப்ராத்ருணாம் நகராணி ச |
பூம்யந்தரிக்ஷஸ்வர்கேஷு ஸ்வர்ண துர்வண லோஹகை: || 22

லாம் வென்று மூன்று உலகங்களுக்கும் கஷ்டத்தைக் கொடுத்துக்கொண்டு வசித்துவந்தார்கள். பூர்வத்தில் அவர்கள் தங்களுக்கு நித்யத் தன்மை வேண்டுமென்ற விருப்பத்தோடு பிரும்மதேவரைக் குறித்துக் கொடிய நியமத்துடன் தவம் செய்தார்கள். அவர்களுடைய தவத்தினால் சராசரங்களோடு கூடிய மூன்று உலகங்களும் கொளுத்தப்பட்டன. (11-14) பிறகு புராதனரான பிரும்மதேவன் தேவேந்திரன் முதலியவர்களால் சூழப்பட்டு ஹம்ஸ வாஹனத்தில் ஏறிக்கொண்டு அவர்களுக்கு முன்னிலையில் தோன்றினார். (15) அசுரர்கள் அந்தப் பிரும்மதேவனை பூஜித்து வரம் கேட்டதாவது: "ஓ தேவேசரான நான்முகக் கடவுளே! தங்களை நமஸ்கரிக்கின்றோம். கருணையுடன் எங்களுக்கு நித்யத் தன்மையைக் கொடுத்தருளவேண்டும்" என்று கேட்டனர். பிறகு அதைக் கேட்டு பிரும்மதேவன் அவர்களைப் பார்த்துக் கூறியதாவது: "ஓ அசுரராஜனின் புத்ரர்களான அசுரோத்தமர்களே! நித்யத் தன்மையானது எனக்கிருந்தாலல்லவோ அதை நான் உங்களுக்குக் கொடுக்க முடியும். ஓ அசுரர்களே! நான் உங்களுக்கு வேண்டியதைக் கொடுக்கத் தயாராக இருந்தும் என்னிடம் இல்லாததைக் கொடுக்க நான் சக்தனாயில்லை. (16-18) ஓ சிறந்த அசுரர்களே! நானும் நித்யனில்லை; விஷ்ணுவும் நித்யரில்லை; மற்றொருவரும் நித்யரில்லை. மேலும் சிவபிரானைத் தவிர மற்ற எல்லா தேவர்களும் அனித்யர்களே. (19) இவ்வுலகில் ம்ருத்யுவை வென்றவரான அவர் ஒருவர்தான் நித்யரென்று சொல்லப்படுகிறார். ஆகையால் நமது பிரியமுள்ள அசுரர்களே! நீங்கள் மற்றொரு வரனைக் கேளுங்கள்" என்றார். (20) இவ்வாறு பிரும்மதேவனுடைய வார்த்தையைக் கேட்டு அவர்கள் ஒருவருக்கொருவர் ஆலோசித்துக்கொண்டு அவரை நமஸ்கரித்து நித்யத் தன்மைக்கு நிகரான மற்றோர் வரனைக் கேட்டார்கள். (21) "ஓ தேவேச! மூன்று சகோதரர்களாகிய எங்களுக்கு முறையே பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் இவைகளில் தங்கம், வெள்ளி, இரும்பு

तान्येवाब्दसहस्रान्ते संयोगं प्राप्नुवन्तु च । क्षणमात्रं तदानीं यो न द्वितीयः श्रुतौ श्रुतः ॥ २३
तेनैकेन शरेणैव संहृतञ्चेत्पुरत्रयम् । ततो मृत्युरजास्माकं वरमस्त्वद्य देहि नः ॥ २४
ऐश्वर्यञ्चातिसुमहद्वीर्यञ्चासदृशं पुनः । असुराणाञ्च सर्वेषामावासास्सन्तु नः पुरीः ॥ २५
स्वेच्छानुरूपसञ्चाराः पुराणां सन्तु नः प्रभो । इति दत्वातु तत्सर्वं ब्रह्मलोकं गते विधौ ॥ २६
यत्र यत्रासुरा लीना देवभीत्या ततः क्षणात् । सर्वे ते श्रुतवृत्तान्तास्तारकेयान् समीडिरे ॥ २७
ददुस्तेभ्यश्च कन्याः स्वा नानोपायनपाणयः । स्वदुःखञ्च निवेद्यैभ्यस्सुखमापुस्सुरेतराः ॥ २८
ततस्तु मायानिपुणो मयस्तैस्तु स्मृतः क्षणात् । संभूय तैश्च संमन्त्र्य सन्तोषेण महीयसा ॥ २९
निर्ममे नगरीस्तेषामयोरजतकाञ्चनैः । गृहांस्तु नवरत्नाढ्यान् गोपुराणि महान्तिच ॥ ३०
वीथीश्च विविधास्तत्र मणितोरणमण्डिताः । ते समालोक्य नगरीस्तिस्रो देवेतरैस्सह ॥ ३१
शशंसुश्च मयं भूयस्सन्तोषमतुलं गताः । पप्रच्छुरात्मनश्चापि तमेवैते हिताहितम् ॥ ३२

தான்யேவாப்த ஸஹஸ்ராந்தே ஸம்யோகம் ப்ராப்னுவந்து ச ।
க்ஷணமாத்ரம் ததானீம் யோ ந த்விதீய: ச்ருதௌ ச்ருத: ॥ 23
தேனைகேன சரேணைவ ஸம்ஹ்ருதஞ்சேத்புரத்ரயம் ।
ததோ ம்ருத்யுரஜாஸ்மாகம் வரமஸ்த்வத்ய தேஹின: ॥ 24
ஐச்வர்யஞ்சாதிஸுமஹத்வீர்யஞ்சாஸத்ருசம் புன: ।
அஸுராணாஞ்ச ஸர்வேஷாமாவாஸாஸ்ஸந்து ந: புரீ: ॥ 25
ஸ்வேச்சானுரூபசஞ்சாரா: புராணாம் ஸந்து ந: ப்ரபோ ।
இதி தத்வாது தத்ஸர்வம் ப்ரம்ஹலோகம் கதே விதௌ ॥ 26
யத்ர யத்ராஸுரா லீனா தேவபீத்யா தத: க்ஷணாத் ।
ஸர்வே தே ச்ருதவ்ருத்தாந்தாஸ்தாரகேயான் ஸமீடிரே ॥ 27
ததுஸ்தேப்யச்ச கன்யா: ஸ்வா நானோபாயனபாணய: ।
ஸ்வதுக்கஞ்ச நிவேத்யைப்யஸ்ஸுகமாபுஸ்ஸுரேதரா: ॥ 28
ததஸ்து மாயாநிபுணோ மயஸ்தைஸ்து ஸ்ம்ருத: க்ஷணாத் ।
ஸம்பூய தைச்ச ஸம்மந்த்ர்ய ஸந்தோஷேண மஹீயஸா ॥ 29
நிர்மமே நகரீஸ்தேஷாமயோரஜதகாஞ்சனை: । க்ருஹாம்ஸ்து நவரத்னாட்யான் கோபுராணி மஹாந்திச 30
வீதீச்ச விவிதாஸ்தத்ர மணிதோரணமண்டிதா: । தே ஸமாலோக்ய நகரீஸ்திஸ்ரோ தேவேதரைஸ்ஸஹ 31
சசம்ஸுச்ச மயம் பூயஸ்ஸந்தோஷமதுலம் கதா: । பப்ரச்சுராத்மனச்சாபி தமேவைதே ஹிதாஹிதம் ॥ 32

இவைகளாலான மூன்று பட்டணங்கள் உண்டாகி (22) அவைகள் ஆயிரம் வருஷங்களுக்குப் பின்பு ஒன்றோடொன்று சேரவேண்டும். அப்பொழுது எவர் தன்னைத் தவிர வேறொன்றில்லாத அரும்பொருள் என்று வேதங்களில் கூறப்படுகின்றாரோ அப்படிப்பட்டவரால் ஒரே க்ஷணத்தில் ஒரே பாணத்தினால் இந்த முப்புரங்களும் ஸம்ஹரிக்கப்பட்டால் ஓ பிரும்மதேவ! அப்பொழுதுதான் எங்களுக்கு மரணமுண்டாக வேண்டும் என்று தாங்கள் எங்களுக்கு வரன் கொடுக்கவேண்டும். (23-24) மேலும் எங்களுக்கு அளவற்ற ஐச்வர்யமும், நிகரற்ற பராக்கிரமமும், அப்பட்டணங்களில் எல்லா அசுரர்களுக்குமிருக்க வசதிகளும் உண்டாக வேண்டும். (25) ஓ பிரபுவே! மேலும் எங்களுடைய மூன்று பட்டணங்களுக்கும் இஷ்டப்படி ஸஞ்சரிக்கும்படியான தன்மை உண்டாக வேண்டும்" என்று அவர்கள் கேட்டுக்கொண்டபடியே அவற்றையெல்லாம் கொடுத்துவிட்டு பிரும்மதேவன் தனது உலகம் சென்றவுடன் (26) தேவர்களிடமிருந்து பயத்தினால் எந்த எந்த இடங்களிலெல்லாமோ பதுங்கிக்கொண்டிருந்த அசுரர்களெல்லாம் இந்த விஷயத்தைக் கேட்டு ஓர் க்ஷணத்திற்குள் வந்து தாரகாசுரனின் புத்ரர்களான அம் மூன்று பேர்களையும் புகழ்ந்து கொண்டாடி (27) அனேகம் காணிக்கைகளோடு தங்கள் பெண்களையும் அவர்களுக்குக் கொடுத்து தங்கள் துக்கங்களையும் அவர்களுக்கு அறிவித்து பிறகு அந்த அசுரர்கள் சுகமாய் இருந்து வந்தார்கள். (28) பிறகு அவர்கள் மாயையில் தேர்ச்சி பெற்றவனான மயனை நினைக்க, அவன் உடனே மிகுந்த சந்தோஷத்துடன் அங்கு வந்து அவர்களோடு சேர்ந்து ஆலோசித்து (29) பிறகு அவர்களுக்காக இரும்பு, வெள்ளி, தங்கம் இவைகளால் மூன்று நகரங்களையும், அவைகளில் நவரத்னங்களால் நிரம்பப்பெற்ற அனேகம் வீடுகள் பெரிய கோபுரங்கள் (30) ரத்னத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட பற்பல வீதிகள் இவைகளையும் உண்டாக்கினான். அப்பொழுது அந்த மூன்று பேர்களும் மற்ற அசுரர்களோடு கூட அப்பட்டணங்களைப் பார்த்து (31) மயனை பலமுறை மெச்சிக் கொண்டாடி மிகுந்த

स तानुवाच हृष्टात्मा विद्युन्मालिमुखानयम् । युष्माभिश्च वरो लब्धो नित्यत्वसदृशोऽसुराः ॥ ३३
एक एव सुरश्रेष्ठो बाणेनैकेन मृत्युदः । सहस्रवत्सरस्यान्ते इतीदं बुद्धिकौशलम् ॥ ३४
अस्मिन्नर्थेऽत्र शृण्वन्तु मयोक्तन्तु सुरेतराः । देवश्रेष्ठः स्मृतो लोके वेदेच परमेश्वरः ॥ ३५
क्षिप्रेषुः स्थिरधन्वेति स्वधामाच जगत्पतिः । अषाढस्सहमानश्च भक्तो भक्तजनेषु सः ॥ ३६
तिग्मायुधश्च वेदेषु सर्वत्र परिपठ्यते । तस्य पूजा सदा कार्या नियमेनाखिलात्मभिः ॥ ३७
उपसर्गाः क्षयं यान्ति शत्रवो व्याधयो ग्रहाः । मनः प्रसन्नतां याति पूज्यमाने महेश्वरे ॥ ३८
युष्माभिरर्चनीयोऽसौ रुद्रो बन्धुजनैस्सह । लिङ्गमूर्तौ सदाकालं त्र्यंबकः पुष्टिवर्धनः ॥ ३९
तस्मिन् संपूज्यमानेतु शङ्करे लोकशङ्करे । युष्माकं हिंसका येतु हिंसितास्स्युश्च तेन ते ॥ ४०
स शिवस्सर्वजन्तूनां भुक्तिमुक्तिफलप्रदः । तस्माद्यूयं तमेवैनमर्चयित्वा दिनेदिने ॥ ४१
लिङ्गमूर्तौ जगन्नाथं भक्तिभावेन सुव्रताः । ऐश्वर्यमसुरा नित्यं संप्राप्नुत सपर्यया ॥ ४२

ஸ தானுவாச ஹ்ருஷ்டாத்மா வித்யுன்மாலிமுகானயம் ।
யுஷ்மாபிச்ச வரோ லப்த்தோ நித்யத்வ ஸத்ருசோऽஸுரா: ॥ 33
ஏக ஏவ ஸுரச்ரேஷ்டோ பாணேனைகேன ம்ருத்யுத: ।
ஸஹஸ்ரவத்ஸரஸ்யாந்தே இதீதம் புத்திகௌசலம் ॥ 34
அஸ்மின்னர்தேऽத்ர ச்ருண்வந்து மயோக்தம் து ஸுரேதரா: ।
தேவச்ரேஷ்ட: ஸ்ம்ருதோ லோகே வேதேச பரமேச்வர: ॥ 35
க்ஷிப்ரேஷு: ஸ்திரதன்வேதி ஸ்வதாமாச ஜகத்பதி: ।
அஷாடஸ்ஸஹமானச்ச பக்தோ பக்தஜனேஷு ஸ: ॥ 36
திக்மாயுதச்ச வேதேஷு ஸர்வத்ர பரிபட்யதே । தஸ்ய பூஜா ஸதா கார்யா நியமேனாகிலாத்மபி: ॥ 37
உபஸர்கா: க்ஷயம் யாந்தி சத்ரவோ வ்யாதயோ க்ரஹா: ।
மன: ப்ரஸன்னதாம் யாதி பூஜ்யமானே மஹேச்வரே ॥ 38
யுஷ்மாபிரர்சனீயோऽஸௌ ருத்ரோ பந்துஜனைஸ்ஸஹ ।
லிங்கமூர்த்தௌ ஸதாகாலம் த்ரயம்பக: புஷ்டிவர்தன: ॥ 39
தஸ்மின் ஸம்பூஜ்யமானேது சங்கரே லோகசங்கரே ।
யுஷ்மாகம் ஹிம்ஸகா யேது ஹிம்ஸிதாஸ்ஸ்யுச்ச தேன தே ॥ 40
ஸ சிவஸ்ஸர்வஜந்தூனாம் புக்திமுக்திபலப்ரத: । தஸ்மாத்யூயம் தமேவைனமர்சயித்வா தினேதினே ॥ 41
லிங்கமூர்த்தௌ ஜகன்னாதம் பக்திபாவேன ஸுவ்ரதா: ।
ஐச்வர்யமஸுரா நித்யம் ஸம்ப்ராப்நுத ஸபர்யயா ॥ 42

சந்தோஷமடைந்தார்கள். பிறகு அவர்கள் அந்த மயனையே தங்களுக்கு வேண்டிய நன்மை தீமைகளைக் கேட்டார்கள். (32) அப்பொழுது மிகச் சந்தோஷமடைந்தவனாகி, மயன் வித்யுன்மாலீ முதலிய அம்மூவரையும் பார்த்துக் கூறியதாவது :— ஓ அசுர ச்ரேஷ்டர்களே! ஆயிரம் வருஷங்களுக்குப் பிறகு தேவாதி தேவரான ஒருவராலேயே ஒரே பாணத்தினால் மரணமுண்டாகட்டுமென்று நீங்கள் நித்யத் தன்மைக்கு ஒப்பான வரனை அடைந்தது மிக புத்திசாலித்தனம்தான். (34) இருந்தாலும் ஓ அசுரர்களே! இதுவிஷயத்தைப்பற்றி நான் கூறுவதைக் கேட்கவேண்டும். ஏனென்றால் தேவர்களுக்கெல்லாம் முதன்மையான ஸ்ரீ பரமேச்வரன் வேகமாய்ச் செல்லுகின்ற அம்புகளையும் உறுதியான வில்லையும் உடையவரென்றும் எல்லா ஆத்மாக்களுக்கும் நிதியாயிருப்பவரென்றும், உலகங்களுக்கெல்லாம் பதியாக இருப்பவரென்றும், சத்ருக்களிடத்தில் பொறுமையற்றவரென்றும், பக்த ஜனங்களிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவரென்றும், அவர்கள் செய்த குற்றங்களைப் பொறுப்பவரென்றும் (36) மிகக் கூர்மையான ஆயுதங்களை உடையவரென்றும் வேதங்களில் எங்கும் கூறப்படுகின்றது. ஆகையால் எல்லோராலும் அவரது பூஜை நியமத்துடன் செய்யவேண்டிய கடமையாகும். (37) அவ்வாறு அந்த மஹாதேவரை பூஜித்தால் உபத்ரவங்கள், சத்ருக்கள், வியாதிகள், துஷ்ட கிரஹங்கள் இவைகள் நீங்கி மனம் ஸந்துஷ்டி அடையும். (38) ஆகையால் நீங்கள் ஸகல பந்து ஜனங்களோடு கூட அப்படிப்பட்ட முக்கண்ணனும், புஷ்டியை விருத்தி செய்கின்றவருமான ஸ்ரீ ஸர்வேச்வரனை எந்த சமயத்திலும் லிங்க மூர்த்தியில் பூஜை செய்யவேண்டும். (39) உலகங்களுக்கு சுகத்தை அளிக்கின்ற ஸ்ரீ சங்கரர் இவ்வாறு பூஜிக்கப்பட்டால் உங்களை ஹிம்சிக்கின்றவர்களெல்லாம் அவரால் ஹிம்சையை அடைவார்கள். (40) அந்த பரமேச்வரனே எல்லா ஜீவராசிகளுக்கும் போக மோக்ஷ பலங்களைக் கொடுப்பவர். ஆகையால் நீங்கள் மிக

विजयश्च सदाकालं युष्मत्करतले स्थितः । तथैव ते प्रतिश्रुत्य वचनं तस्य चोमिति ॥ ४३
ययाचिरे च लिङ्गानि मयमैशानि तेऽसुराः । प्रत्येकं स च लिङ्गानि कल्पयामास वै क्षणात् ॥ ४४
गृहे गृहेऽर्चयन्तीशमसुरा भस्मभूषिताः । रुद्राक्षाभरणैर्युक्ताश्शान्ता दान्ता जितक्रुधः ॥ ४५
इति तस्य वचः श्रुत्वा चक्रुर्दैत्या गृहे गृहे । विद्युन्माली तारकाक्षः कमलाक्षश्च ते त्रयः ॥ ४६
लिङ्गानि प्रतिगृह्यास्मात् स्वोचितानि मुदा युताः । प्रत्येकमर्चयामासुर्महाविभवविस्तरम् ॥ ४७
सर्वे स्वाध्यायनिरतास्तपसा दग्धकिल्बिषाः । भस्मरुद्राक्षसंपन्नतनवो विजितेन्द्रियाः ॥ ४८
एवमर्चयतां तेषामासन्नैश्वर्यवृद्धयः । लोके वेदप्रसिद्धाश्च शिवपूजारतात्मनाम् ॥ ४९
तरवः कल्पवृक्षाश्च गृहारामभवाश्च ते । तेषां गोष्ठस्थिता गावो नन्दिन्यः कामधेनवः ॥ ५०
चिन्तामणिशिलास्तेषां प्राङ्कणेषु प्रतिष्ठिताः । एतत्प्रत्यर्थिनामेवमेतेषामर्चतां शिवम् ॥ ५१

விஜயச்ச ஸதாகாலம் யுஷ்மத்கரதலே ஸ்தித: |
ததைவ தே ப்ரதிச்ருத்ய வசனம் தஸ்ய சோமிதி || 43
யயாசிரே ச லிங்கானி மயமைசானி தேSஸுரா: |
ப்ரத்யேகம் ஸ ச லிங்கானி கல்பயாமாஸ வைக்ஷணாத் | 44
க்ருஹே க்ருஹேSர்சயந்தீசமஸுரா பஸ்மபூஷிதா: |
ருத்ராக்ஷாபரணைர்யுக்தாச்சாந்தா தாந்தா ஜிதக்ருத: || 45
இதி தஸ்ய வச: ச்ருத்வா சக்ருர்தைத்யா க்ருஹே க்ருஹே |
வித்யுந்மாலீ தாரகாக்ஷ: கமலாக்ஷச்ச தே த்ரய: || 46
லிங்காநி ப்ரதிக்ருஹ்யாஸ்மாத் ஸ்வோசிதாநி முதாSயுதா: |
ப்ரத்யேகமர்சயாமாஸுர்மஹாவிபவவிஸ்தரம் || 47
ஸர்வே ஸ்வாத்யாயநிரதாஸ்தபஸா தக்த கில்பிஷா: |
பஸ்மருத்ராக்ஷஸம்பன்னதநவோ விஜிதேந்த்ரியா: || 48
ஏவமர்சயதாம் தேஷாமாஸந்நைச்வர்யவ்ருத்தய: |
லோகே வேதப்ரஸித்தாச்ச சிவபூஜாரதாத்மனாம் || 49
தரவ: கல்பவ்ருக்ஷாச்ச க்ருஹாராமபவாச்ச தே |
தேஷாம் கோஷ்டஸ்திதா காவோ நந்தின்ய: காமதேனவ: || 50
சிந்தாமணிசிலாஸ்தேஷாம் ப்ராங்கணேஷு ப்ரதிஷ்டிதா: |
ஏதத்ப்ரத்யர்திநாமேவமேதேஷாமர்சதாம் சிவம் || 51

உறுதியுடையவர்களாகி, பக்தியுடன் ஸ்ரீ ஜகதீசனை தினந்தோறும் பூஜை செய்தால் ஓ அசுரர்களே! நீங்கள் மிகுந்த ஐச்வர்யத்தை அடைவதோடு (42) எக்காலத்திலும் வெற்றி உங்கள் கைவசமாக இருக்கும்'' என்றான். இவ்வாறு மயனுடைய வார்த்தையைக் கேட்டு அவர்கள் அப்படியே ஆகட்டுமென்று சொல்லி (43) அந்த அசுரர்கள் அந்த மயனிடம் சிவலிங்கங்களைக் கொடுக்கும்படி யாசித்தார்கள். அந்த மயனும் ஓர் க்ஷணத்தில் ஒவ்வொருவருக்கும் லிங்கங்களை வெவ்வேறாக அமைத்துக் கொடுத்தான். (44) பிறகு அசுரர்களெல்லாம் விபூதி ருத்ராக்ஷங்களை தரித்துக்கொண்டு அந்தரிந்திரியங்களையும் பஹிரிந்திரியங்களையும் அடக்கி போகத்தை ஜயித்து (45) அந்த மயன் சொன்னபடியே வீடுகள்தோறும் சிவபூஜை செய்து வந்தார்கள். மேலும் வித்யுன்மாலீ, தாரகாக்ஷன், கமலாக்ஷன் இம்மூன்று பேர்களும் (46) மிகுந்த ஸந்தோஷத்தோடு அவனிடமிருந்து தங்களுக்குத் தகுதியான லிங்கங்களைப் பெற்று, மிக விபவமாகவும், விஸ்தாரமாகவும் தனித்தனியாய் பூஜித்து வந்தார்கள். (47) எல்லோரும் வேதாத்யயனத்தில் முயன்றவர்களாகவும், தவத்தினால் பாவங்களை எரிக்கின்றவர்களாகவும், விபூதி ருத்ராக்ஷங்களோடு கூடிய சரீரத்தை உடையவர்களாகவும், இந்திரியங்களை ஜயித்தவர்களாகவும் இருந்துவந்தார்கள். (48) இவ்விதம் பூஜை செய்து வந்த அந்த அசுரர்களுக்கு மேன்மேலும் ஐச்வர்யங்கள் விருத்தியடைந்தன. சிவபூஜை செய்வதிலேயே முயன்றவர்களான அந்த அசுரர்களுக்கு வேதத்தில் பிரஸித்தியாக இருக்கும் எல்லா உலக இன்பங்களும் ஏற்பட்டன. (49) கற்பக விருக்ஷங்களே அவர்கள் வீட்டுக் கொல்லைகளிலிருக்கும் மரங்களாகவும், காமதேனுக்களே அவர்கள் கொட்டில்களிலுள்ள பசுக்களாகவும், (50) சிந்தாமணி ரத்னங்களே அவர்கள் வீட்டுத் திண்ணைகளில் பதித்த கற்களாகவும் ஆயின. இவர்களுக்குச் சத்ருக்களான தேவர்களுடைய இந்த கற்பக விருக்ஷம் முதலியவைகளெல்லாம் இவ்விதமாய் சிவார்ச்சனம்

निधयश्चैव शङ्खाद्यास्सन्निधिं तत्र चक्रिरे । गायन्तश्च हसन्तश्च नृत्यन्तश्चासुरोत्तमाः ॥ ५२
नित्योत्सव अभूत्तेषां नित्यश्रीर्नित्यमङ्गळम् । रथनागतुरङ्गाद्यौ खेलन्तिस्मासुरेश्वराः ॥ ५३
आरामेषु विचित्रेषु वापीषु च सरस्वपि । नदीनदेषु सर्वत्र क्रीडन्तो निन्यिरे समाः ॥ ५४
अमृतान्धोभिरनिशमाहृतात्मक्रिया भृशम् । रमन्तेस्म सपत्नीकास्सुरबन्दीभिरादृताः ॥ ५५
तैः पुरैस्सह यत्रेच्छा तत्र तत्र च रेमिरे । मण्डले च सहस्रांशोश्शीतांशो ऋक्षमध्यमे ॥ ५६
ब्रह्मलोके विष्णुलोके भूलोके चान्तरिक्षके । सुरेन्द्रलोके दिक्पाललोके सर्वत्र रेमिरे ॥ ५७
य एतेषामधोभागे स्युर्जनाश्चरतां पुनः । प्रतिमार्गेच ते सर्वे विनेशुर्भयपीडिताः ॥ ५८
त्यक्तलोकास्तदा विष्णुब्रह्माद्या देवसत्तमाः । महामेरुगिरिं प्राप्य मन्त्रयित्वा परस्परम् ॥ ५९
कथमेतेऽत्र वध्यास्स्युरस्माभिर्वरगर्विताः । तानुवाच ततो विष्णुस्तेऽर्चयन्त्यसुराश्शिवम् ॥ ६०
लिङ्गार्चनपरालोके न शक्या जेतुमात्मभिः । पतिव्रताश्च वै तेषां स्त्रियश्च पतिदेवताः ॥ ६१

நிதயச்சைவ சங்காத்யாஸ்ஸந்நிதிம் தத்ர சக்ரிரே ।
காயந்தச்ச ஹஸந்தச்ச ந்ருத்யந்தச்சாஸுரோத்தமா: ॥ 52
நித்யோத்ஸவ அபூத்தேஷாம் நித்யஸ்ரீர்நித்யமங்களம் ।
ரதநாகதுரங்காதௌ கேலந்திஸ்மாஸுரேச்வரா: ॥ 53
ஆராமேஷு விசித்ரேஷு வாபீஷு ச ஸரஸ்வபி ।
நதீநதேஷு ஸர்வத்ர க்ரீடந்தோ நின்யிரே ஸமா: ॥ 54
அம்ருதாந்தோபிரநிசமாத்ருதாத்மக்ரியா ப்ருசம் । ரமந்தேஸ்ம ஸபத்னிகாஸ்ஸுரபந்தீபிராத்ருதா: ॥ 55
தை: புரைஸ்ஸஹ யத்ரேச்சா தத்ர தத்ரச ரேமிரே ।
மண்டலேச ஸஹஸ்ராம்சோச்சீதாம்சோ ருக்ஷமத்யமே ॥ 56
ப்ரம்ஹலோகே விஷ்ணுலோகே பூலோகே சாந்தரிக்ஷகே ।
ஸுரேந்த்ரலோகே திக்பாலலோகே ஸர்வத்ர ரேமிரே ॥ 57
ய ஏ தேஷாமதோபாகே ஸ்யுர்ஜனச்சரதாம் புந: । ப்ரதிமார்கேச தே ஸர்வே விநேசுர்பய பீடிதா: ॥ 58
த்யக்த லோகாஸ்ததா விஷ்ணு ப்ரம்ஹாத்யா தேவஸத்தமா: ।
மஹாமேருகிரிம் ப்ராப்ய மந்த்ரயித்வா பரஸ்பரம் ॥ 59
கதமேதேऽத்ர வத்யாஸ்ஸ்யுரஸ்மாபிர்வரகர்விதா: ।
தாநுவாச ததோ விஷ்ணுஸ்தேऽர்சயந்த்யஸுராச்சிவம் ॥ 60
லிங்கார்சனபரா லோகேந சக்யா ஜேதுமாத்மபி: ।
பதிவ்ரதாச்ச வை தேஷாம் ஸ்த்ரியச்ச பதிதேவதா: ॥ 61

செய்யும் அசுரர்களுக்கு வசமாகிவிட்டன (51) சங்கம் பத்மம் முதலிய நிதிகள் அங்கு எப்பொழுதும் ஸான்னித்யமாயிருந்தன. அந்த அசுரர்களெல்லாம் எப்பொழுதும் பாடிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் கூத்தாடிக் கொண்டும் இருந்தனர். (52) அவர்களுக்கு நித்யோற்சவங்களும் நித்ய ஸம்பத்துக்களும் நித்ய மங்களங்களும் உண்டாயின. அந்த அசுரர்களெல்லாம் தேர், யானை, குதிரை இவைகளின்மீது ஏறிக்கொண்டும் கோலாகலமாய் விளையாடிக் கொண்டும் (53) வசித்திரமான நந்தவனங்கள், வாபிகள், குளங்கள், நதிகள், நதங்கள் இவைகளிலெல்லாம் விளையாடிக் கொண்டும் காலத்தைப்போக்கி வந்தார்கள். (54) மேலும் அவர்கள் அமிருதத்தை அன்னமாய்க் கொண்ட தேவர்களாலும் சிறையில் வைக்கப்பட்ட தேவ ஸ்திரீகளாலும் எப்பொழுதும் ஊழியம் செய்யப்பட்டவராகி தங்கள் மனைவிகளோடு கிரீடித்து வந்தார்கள். (55) அவர்கள் சூரிய மண்டலம், சந்திர மண்டலம், பிரும்மலோகம், விஷ்ணுலோகம், பூலோகம், ஆகாயம், இந்திரலோகம், திக்பாலலோகம் இந்த இடங்களில் இஷ்டப்பட்ட இடங்களுக்கெல்லாம் அப்பட்டணங்களோடுகூடச் சென்றுவருவார்கள் (57) அவர்கள் இவ்வாறு ஸஞ்சரிக்கும்பொழுது அதற்குக் கீழேயுள்ள ஒவ்வொரு மார்க்கத்திலும் அகப்பட்டுக்கொண்ட ஜனங்களெல்லாம் பயத்தினல் பிடிக்கப்பட்டு மடிந்தார்கள். (58) அந்தக்காலத்தில் விஷ்ணு பிரும்மா முதலிய தேவச்ரேஷ்டர்களெல்லாம் தங்கள் தங்கள் உலகத்தைவிட்டு மஹாமேருமலைக்குச் சென்று ஒருவரோடொருவர் ஆலோசித்து வரத்தினல் கர்வமடைந்திருக்கின்ற இந்த அசுரர்களை நாம் எவ்வாறு கொல்லுவோம் என்று ஆலோசிக்கையில் அவர்களைப் பார்த்து விஷ்ணு கூறியதாவது:— "ஓ தேவர்களே! அந்த அசுரர்கள் சிவபூஜை செய்கின்றனர்கள். (60) லிங்கார்ச்சனம் செய்கிறவர்களை யாரும் ஜயிக்க முடியாது. மேலும்

तस्मादजेयतां प्राप्ता असुरा बलवत्तराः । तमूचुरमरास्सर्वे भक्तिहीनास्सुरद्विषः ॥ ६२
मयस्य वचनात्तक्ष्णः कुर्वन्त्येते शिवार्चनम् । भक्तिहीनार्चनं शंभोरतिप्रीतिकरं नहि ॥ ६३
वयं देवं समाराध्य सर्वेचापि सदाशिवम् । तत्रेश्वराज्ञासंभूतैर्जेष्याम इति ताः पुनः ॥ ६४
तानुवाच हरिस्तेषां न जानीध्वे वरान् सुराः । एकेनैवेषुणा नाशो नान्यथा यागसंभवैः ॥ ६५
उपसद्भूतभूतैश्च जल्पध्वे किं वृथा सुराः । तमाहुस्तेतु चैवं तद्भूतैर्यागोद्भवैर्वयम् ॥ ६६
निरुध्य पीडयिष्यामः पुरेषु यदि शात्रवान् । स्वेषु स्वेषु च लोकेषु वयं स्थातुं क्षमास्ततः ॥ ६७
इति संमन्त्र्य ते सर्वे देवा विष्णुपुरोगमाः । वेदान् सर्वान् समाहूय देवैस्सार्धं जनार्दनः ॥ ६८
उपसद्भिस्तदाऽस्तौषीत् ध्यायन्नीशं जयप्रदम् । तदा भूतानि चोत्तस्थुर्महान्ति बलवन्ति च ॥ ६९
तानि चाज्ञापयामासुस्संभक्षयत ताः पुरः । असुरैस्सह भूतानि गच्छतेति तदा मुदा ॥ ७०

தஸ்மாதஜேயதாம் ப்ராப்தா அஸுரா பலவத்தரா: | தமூசுரமராஸ்ஸர்வே பக்திஹீநாஸ்ஸுரத்விஷ: || 62
மயஸ்ய வசனாத் தக்ஷ்ண: குர்வந்த்யேதே சிவார்சனம் |
பக்திஹீநார்சனம் சம்போரதிப்ரீதிகரம் ந ஹி || 63
வயம் தேவம் ஸமாராத்ய ஸர்வே சாபி ஸதாசிவம் |
தத்ரேச்வராஞ்ஞாஸம்பூதைர் ஜேஷ்யாம இதி தா: புந: || 64
தாநுவாச ஹரிஸ்தேஷாம் ந ஜாநீத்வே வரான் ஸுரா: |
ஏகேநைவேஷுணா நாசோ நான்யதா யாகஸம்பவை: || 65
உபஸத்பூதபூதைச்ச ஜல்பத்வே கிம் வ்ருதா ஸுரா: |
தமாஹுஸ்தேது சைவம் தத்பூதைர்யாகோத்பவைர்வயம் || 66
நிருத்ய பீடயிஷ்யாம: புரேஷு யதி சாத்ரவான் |
ஸ்வேஷு ஸ்வேஷு ச லோகேஷு வயம் ஸ்தாதும் க்ஷமாஸ்தத: 67
இதி ஸம்மந்த்ரிய தே ஸர்வே தேவா விஷ்ணுபுரோகமா: |
வேதான் ஸர்வான் ஸமாஹூய தேவைஸ்ஸார்தம் ஜநார்தன: || 68
உபஸத்பிஸ்ததாऽஸ்தௌஷீத் த்யாயந்நீசம் ஜயப்ரதம் |
ததா பூதாநி சோத்தஸ்துர் மஹாந்தி பலவந்தி ச || 69
தாநி சாஞ்ஞாபயாமாஸுஸ்ஸம்பக்ஷய தத: புர: |
அஸுரைஸ்ஸஹ பூதாநி கச்சதேதி ததாமுதா || 70

புத்ரகாமோ லபேத்புத்ரான் பசுகாம: பசூன் பஹூன் ॥ 51
ஸ்த்ரீகாம: ஸ்த்ரியமாப்னுேதி பூகாமோ புவமுத்தமாம் ।
தஸ்மாத்ஸர்வ ப்ரயத்னேன ச்ரோதவ்யமிதமாதராத் ॥ 52

பூஜித்து அவரை பிரஸன்னராகச் செய்து பின்பு ஸகல வித்யைகளும் உனக்கு விளங்குமென்றுர். (44) ஆகையால் ஓ முனிவர்களே! ஸகல பிராணிகளுக்கும் குரு கடாக்ஷத்தினுலும், ஸ்ரீ மஹாதேவனைப் பூஜிப்பதினுலும் தான் ஸகல மேன்மைகளும் கைகூடுமே அன்றி வேறுவிதத்தினுவில்லை என்பது நிச்சயம். (45) சிவபூஜையின் மஹிமையைப் பற்றி எனது ஆசார்யரான வியாஸ முனிவரால் எனக்கு உபதேசிக்கப்பட்டபடி ஏதோ முடிந்தவரை சிறிது உங்களுக்குச் சொன்னேன். (46) அதன் மஹிமையை உள்ளபடி முழுவதும் இவ்வளவென்று அளவிட்டுச் சொல்லுவதற்கு பிரும்மாவினுலும் முடியாது. ஓ முனிவர்களே! இதற்குமேல் யோகம், ஞானம் இவைகளின் ஸ்வரூபத்தைப் பற்றி நன்றய் உங்களுக்கு எடுத்துச் சொல்லுகிறேன். (47) அதை நீங்கள் ச்ரத்தையுடன் கேட்க வேண்டும். இவ்விதமாக சிவபூஜையின் மஹிமையை எந்த மனிதன் பக்தியுடன் கேட்கிருனே (48) அவன் பல விதங்களான மஹாபாதகங்கள் உபபாதகங்கள் இவைகளால் பாதிக்கப்படமாட்டான். மேலும் பிரும்ம ஹத்தி, குருஹத்தி இவைகளைச் செய்தவன் தங்கத்தைத் திருடியவன், குருவின் மனேவியை புணர்ந்தவன், (49) தாய் தந்தைகளைக் கொன்றவன், இப்படிப்பட்ட மஹாபாதகர்களான கொடியவர்களும் இந்த சிவபூஜையின் மஹிமையை கேட்டமாத்திரத்தில் அப்படிப்பட்ட மஹாபாதகங்களிலிருந்தும் விடுபடுகின்ருர்கள் என்பதில் சந்தேகமில்லை. (50) மேலும் வித்யைகளை வேண்டியவன் வித்யைகளையும், பணத்தை வேண்டியவன் பணத்தையும், பிள்ளையை வேண்டியவன் பிள்ளைகளையும், பசுக்களை வேண்டியவன் நிரம்பப் பசுக்களையும், (51) மனேவியை வேண்டியவன் அழகிய மனேவியையும், பூமியை வேண்டியவன் செழிப்பான பூமியையும் அடைவான். ஆகையால் இந்த சிவபூஜையின் மஹிமையை

इत्थं मुनीन्द्राः परमेश्वरस्य लिङ्गानि पूजां गुरुदक्षिणाञ्च ।
विद्यास्वरूपं कथितं च भक्त्या श्रुतंच युष्माभिरहीनभाग्याः ॥ ५३
इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे षडशीतितमोऽध्यायः ॥

॥ अथ सप्ताशीतितमोऽध्यायः ॥
अष्टाङ्गयोग निरूपणम् ॥

अतः परं प्रवक्ष्यामि शिवयोगमनुत्तमम् । अनुष्ठितायाञ्चर्यायां क्रियायां विधिना द्विजाः ॥ १
चर्या तु प्रातरुत्थाय शौचाचमनपूर्वकम् । स्नात्वा विभूतिरुद्राक्षं धृत्वा देवानृषीनपि ॥ २
सन्तर्प्य पुष्पाण्यारामात्समानीयातिनिर्मलः । अभिषेक जलं तद्वदनुलेपन पूर्वकम् ॥ ३
आनीय तत्तत्कृत्यानि निर्वृत्यच यथाक्रमात् । दीपैर्देवालयं सर्वमलंकुर्याद्विचक्षणः ॥ ४
शिवभक्तवचश्शृण्वन् शिवसेवापरायणः । आचरेदेवमनिशं चर्यां पापप्रणाशिनीम् ॥ ५

இத்தம் முனீந்த்ரா: பரமேச்வரஸ்ய லிங்கானி பூஜாம் குருதக்ஷிணாஞ்ச ।
வித்யாஸ்வரூபம் கதிதஞ்ச பக்த்யா ச்ருதஞ்சயுஷ்மாபிரஹீனபாக்யா: ॥ 53
இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேச காண்டே ஷடசீதிதமோऽத்யாய: ॥

॥ அத ஸப்தசீதிதமோऽத்யாய: ॥

எட்டு விதமான அங்கங்களைக்கொண்ட யோகத்தைப்பற்றி கூறுதல்

அத: பரம் ப்ரவக்ஷ்யாமி சிவயோகமனுத்தமம் ।
அனுஷ்டிதாயாஞ்சர்யாயாம் க்ரியாயாம் விதினா த்விஜா: ॥ 1
சர்யா து ப்ராதருத்தாய சௌசாசமனபூர்வகம் । ஸ்னாத்வா விபூதிருத்ராக்ஷம்த்ருத்வா தேவான்ருஷீனபி ॥ 2
ஸந்தர்ப்ய புஷ்பாண்யாராமாத்ஸமானீயாதி நிர்மல: । அபிஷேகஜலம் தத்வதனுலேபன பூர்வகம் ॥ 3
ஆனீய தத்தத்க்ருத்யானி நிர்வ்ருத்யச யதாக்ரமாத் ।
தீபைர்தேவாலயம் ஸர்வமலங்குர்யாத்விசக்ஷண: ॥ 4
சிவபக்தவசச்ச்ருண்வன் சிவஸேவாபராயண: । ஆசரேதேவமனிசம் சர்யாம் பாபப்ரணாசினீம் ॥ 5

முயற்சியுடனும் ஆதரவுடனும் கேட்க வேண்டும். (52) குறைவற்ற பாக்யமுடைய ஓ முனிவர்களே! இவ்விதமாக ஸ்ரீ பரமேச்வரனுடைய லிங்கங்கள், சிவபூஜை, குருதக்ஷிணை, வித்யை இவைகளின் விவரமானது என்னால் கூறப்பட்டதை நீங்கள் பக்தியுடன் கேட்டீர்கள். (53)

எண்பத்தாறாவது அத்தியாயம் முற்றிற்று.

எண்பத்தேழாவது அத்தியாயம்

ஓ முனிவர்களே! இதற்கு மேல் சரியை, கிரியை இவைகளை முறைப்படி அனுஷ்டித்து அதற்கு மேல் செய்யவேண்டிய மிகச் சிறந்த சிவயோகத்தைப் பற்றி உங்களுக்குச் சொல்லுகிறேன். (1) இவற்றுள் சரியை என்றால் காலையிலெழுந்து சௌசம், ஆசமனம், இவைகளைச் செய்து விபூதி ருத்ராக்ஷங்களைத் தரித்து, தேவரிஷி பித்ருதர்ப்பணங்களைச் செய்து, (2) பிறகு மிகப் பரிசுத்தனாகி, நந்தவனத்திலிருந்து புஷ்பங்களை எடுத்து வந்து, அவ்விதமே அபிஷேக ஜலத்தையும், சந்தனம் முதலிய பூச்சு திரவ்யங்களையும் (3) கொண்டு வந்து, பிறகு முறைப்படி அந்த அந்த கர்மாக்களை முடித்துக்கொண்டு, தேவாலயம் முழுவதும் தீபங்களால் அலங்கரித்து, (4) சிவபக்தர்களின் சொற்படி நடந்து

इयञ्चर्येति विख्याता क्रियातु समनन्तरा । पञ्चशुद्धिं विधायाग्रे चान्तर्यजनपूर्वकम् ॥ ६
शिवञ्च पूजयेत्पश्चादग्निकार्यं समापयेत् । क्रियामप्येवमखिलां निर्वृत्यच यथाक्रमम् ॥ ७
योगे युञ्ज्यान्मनः पश्चाच्छैवे सकलपापहे । अष्टावङ्गानि चैतस्य कथितानि महात्मभिः ॥ ८
प्रथमस्तु यमः प्रोक्तो नियमस्तदनन्तरः । आसनञ्च ततः पश्चात् प्राणायामोऽपि कीर्तितः ॥ ९
प्रत्याहारो धारणा च ध्यानञ्चैव समाधिना । अहिंसासत्यमस्तेयं परद्रव्यानपेक्षता ॥ १०
ब्रह्मचर्यममात्सर्यं यमः प्रोक्तो मनीषिभिः । अक्रोधो लब्धसन्तुष्टिः स्नानतर्पणमेव च ॥ ११
आचार्यशिवभक्तानां वाक्यश्रवणमादरात् । शिवपूजासहत्वञ्च दया च नियमः स्मृतः ॥ १२
कृष्णाजिनं वा वैयाघ्रमजिनं वा विशेषतः । अधिष्ठायासनं पद्मं कृत्वाऽन्यद्वा यथेच्छया ॥ १३
स्वशरीरानुकूल्येन प्रागास्यो वो दगाननः । समधिष्ठेत मतिमान्योगसिद्धिं विचारयन् ॥ १४
पूरयन्वायुमिड(ळ)या मात्रा षोडशिकं द्विजाः । कुंभयंश्च चतुष्षष्टिमात्राकालं विशेषतः ॥ १५

இயஞ்சர்யேதி விக்யாதா க்ரியாது ஸமனந்தரா । பஞ்சசுத்திம் விதாயாக்ரே சாந்தர்யஜனபூர்வகம் ॥ 6
சிவஞ்ச பூஜயேத்பச்சாதக்னிகார்யம் ஸமாபயேத் । க்ரியாமப்யேவமகிலாம் நிர்வ்ருத்யச யதாக்ரமம் ॥ 7
யோகே யுஞ்ஜ்யான்மன: பச்சாச்சைவே ஸகலபாபஹே ।
அஷ்டாவங்கானி சைதஸ்ய கதிதானி மஹாத்மபி: ॥ 8
ப்ரதமஸ்து யம: ப்ரோக்தோ நியமஸ்ததனந்தர: ।
ஆஸனஞ்ச தத: பச்சாத் ப்ராணாயாமோऽபி கீர்தித: ॥ 9
ப்ரத்யாஹாரோ தாரணா ச த்யானஞ்சைவ ஸமாதினா ।
அஹிம்ஸா ஸத்யமஸ்தேயம் பரத்ரவ்யானபேக்ஷதா ॥ 10
ப்ரம்ஹசர்யமமாத்ஸர்யம் யம: ப்ரோக்தோ மனீஷிபி: ।
அக்ரோதோ லப்தஸந்துஷ்டி: ஸ்னானதர்பணமேவ ச ॥ 11
ஆசார்யசிவபக்தானாம் வாக்யச்ரவணமாதராத் । சிவபூஜாஸஹத்வஞ்ச தயா ச நியம: ஸ்ம்ருத: ॥ 12
க்ருஷ்ணாஜினம் வா வையாக்ரமஜினம் வா விசேஷத: ।
அதிஷ்டாஸனம் பத்மம் க்ருத்வாऽன்யத்வா யதேச்சயா ॥ 13
ஸ்வசரீரானுகூல்யேன ப்ராகாஸ்யோவோதகானன: ।
ஸமதிஷ்டேத மதிமான் யோகஸித்திம் விசாரயன் ॥ 14
பூரயன்வாயுமிட(ள)யா மாத்ராஷோடசிகம் த்விஜா: । கும்பயம்ச்ச சதுஷ்ஷஷ்டிமாத்ராகாலம் விசேஷத: 15

ஸ்ரீ பரமேச்வரனை ஸேவிப்பதில் முயன்றவனாகி, ஸகல பாபங்களையும் நாசம் செய்யக்கூடிய சரியையை எப்பொழுதும் புத்திமான் அனுஷ்டித்து வரவேண்டும். (5) இதுதான் சரியை எனப்படும். இதற்குப் பிறகு செய்யவேண்டிய க்ரியையோவென்றால் முதலில் பஞ்சசுத்தியை (இரு கால்களையும், இரு கைகளையும் கழுவிக்கொண்டு ஆசமனம் செய்தல்) செய்துகொண்டு பிறகு மானஸிகமாய்ப் பூஜை செய்துவிட்டு (6) பிறகு பாஹ்யமாய் சிவபூஜை செய்து, சிவபூஜையின் அங்கமாக ஹோமத்தைச் செய்து, இவ்விதமாக க்ரியையாவையும் முறைப்படி முடித்துவிட்டு (7) பிறகு ஸகல பாபங்களையும் போக்கவல்ல சிவயோகத்தில் மனதைச் செலுத்த வேண்டும். இப்படிப்பட்ட யோகத்திற்கு எட்டு அங்கங்களுள்ளன என்று மஹாத்மாக்களால் சொல்லப்படுகின்றது. (8) அவைகளோவென்றால், யமம், நியமம், ஆஸனம், பிராணாயாமம், ப்ரத்யாஹாரம், தாரணம், த்யானம், ஸமாதி என்பவைகள். இவற்றில் யமம் என்பது பிறருக்குத் தீங்கு செய்யாதிருத்தல், ஸத்யம் பேசுதல், பிறர் பொருளை அபகரிக்காமலிருத்தல், பிறர் பொருளை விரும்பாமலிருத்தல், (10) எட்டுவித மைதுனமில்லாமலிருத்தல், பகையாமை ஆகிய இந்த எட்டும் யமம் என்று வித்வான்கள் கூறுவார்கள். நியமமாவது :— கோபமில்லாமை, கிடைத்ததைக் கொண்டு ஸந்தோஷமடைதல், ஸ்நானம், தர்ப்பணம், (11) இவைகளை அனுஷ்டித்தல், ஆசார்யன், சிவபக்தர்கள் இவர்களுடைய வார்த்தைகளை ஆதரவுடன் கேட்பது, சிவபூஜை, ஸஹனசக்தி, பிராணிகளிடத்தில் தயவு, இவைகள் நியமம் எனப்படும். (12) ஆஸனமாவது :— மாந்தோல் அல்லது புலித்தோல் மீது உட்கார்ந்து பத்மாஸனத்தையாவது அல்லது தனக்கு இஷ்டமானதும் தன் சரீரத்திற்கு ஏற்றதுமான வேறு ஆஸனத்தையாவது அமைத்துக்கொண்டு (13) கிழக்கு அல்லது வடக்கு முகமாக இருந்துகொண்டு புத்திமான் யோகஸித்தியை சிந்திப்பது ஆஸனமெனப்படும். ஓ முனிவர்களே! பிராணாயாமமாவது :— இடது மூக்கினால் பதினாறு மாத்திரை காலம் சுவாஸத்தை

मात्रा द्वात्रिंशता वायुं दक्षिणेन विरेचयेत् । एवं दक्षिणमार्गेण पूरयन् कुम्भयंस्तथा ॥ १६
वामतो निस्सरेद्वायुं क्रमेण विधिपूर्वकम् । प्राणायामोऽयमुद्दिष्टस्स द्विधा भिद्यते द्विजाः ॥ १७
सगर्भः प्रथमः ख्यातस्तथाऽगर्भोऽपि चापरः । जपध्यानसमायुक्तस्सगर्भ इति कथ्यते ॥ १८
अगर्भः केवलः ख्यातः प्राणायामो महीसुराः । जप्या पञ्चाक्षरी ब्रह्मक्षत्रविड्भिस्सतारका ॥ १९
शूद्रैः प्रणवनिर्मुक्ता जप्या खलु महीसुराः । तिक्ताम्लमधुरद्रव्याण्यलाबूकमपि त्यजेत् ॥ २०
भुञ्जीयान्मितमेवान्नं क्षीरवर्जं यथाविधि । पिपासुश्च पिबेद्वारि सोष्णं किञ्चिद्यथासुखम् ॥ २१
पञ्चेन्द्रियाणां विजयं प्रत्याहारं वदन्ति हि । धारणा शिवपादाब्जयुगळे चित्तधारणम् ॥ २२
ध्यानं शिवैकविज्ञानं द्विजा हृत्कमले सदा । समाधिश्शङ्करे सम्यक्सत्यानन्दस्वरूपिणि ॥ २३
तादात्म्यभावनं स्वस्य विस्मृत्य विषयान् बहून् । अष्टाङ्गिनं योगमेवमभ्यसेद्यस्तु पण्डितः ॥ २४
सिध्यन्ति सिद्धयस्तस्य चाष्टावपि महात्मनः । अरूपिणमपीशानं सूर्यकोटि समप्रभम् ॥ २५

மாத்ராத்வாத்ரிம்சதா வாயும் தக்ஷிணேன விரேசயேத் ।
ஏவம் தக்ஷிணமார்கேண பூரயன் கும்பயம் ஸ்ததா ॥ 16
வாமதோ நிஸ்ஸரேத்வாயும் க்ரமேண விதிபூர்வகம் ।
ப்ராணாயாமோऽய முத்திஷ்டஸ்ஸ த்விதா பித்யதே த்விஜா: ॥ 17
ஸகர்ப: ப்ரதம: க்யாதஸ்ததாऽகர்போऽபிசாபர: । ஜபத்யானஸமாயுக்தஸ்ஸகர்ப இதி கத்யதே ॥ 18
அகர்ப: கேவல: க்யாத: ப்ராணாயாமோ மஹீஸுரா: ।
ஜப்யா பஞ்சாக்ஷரீ ப்ரம்ஹக்ஷத்ரவிட்பிஸ்ஸதாரகா ॥ 19
சூத்ரை: ப்ரணவநிர்முக்தா ஜப்யா கலு மஹீஸுரா: ।
திக்தாம்ல மதுர த்ரவ்யாண்யலாபூகமபி த்யஜேத் ॥ 20
புஞ்ஜீயாந்மிதமேவான்னம் க்ஷீரவர்ஜம் யதாவிதி ।
பிபாஸுச்ச பிபேத்வாரி ஸோஷ்ணம் கிஞ்சித் யதாஸுகம் ॥ 21.
பஞ்சேந்த்ரியாணாம் விஜயம் ப்ரத்யாஹாரம் வதந்திஹி । தாரணா சிவபாதாப்ஜயுகளே சித்ததாரணம் ॥ 22
த்யானம் சிவைகவிக்ஞானம் த்விஜா ஹ்ருத்கமலே ஸதா ।
ஸமாதிச்சங்கரே ஸம்யக் ஸத்யானந்த ஸ்வரூபிணி ॥ 23
தாதாத்ம்ய பாவனம் ஸ்வஸ்ய விஸ்ம்ருத்யவிஷயான் பஹூன் ।
அஷ்டாங்கினம் யோகமேவமப்யஸேத்யஸ்து பண்டித: ॥ 24
ஸித்யந்தி ஸித்தயஸ்தஸ்ய சாஷ்டாவபி மஹாத்மன: । அரூபிணமபீசானம் ஸூர்யகோடி ஸமப்ரபம் ॥ 25

இழுத்து அறுபத்து நான்கு மாத்திரை காலமளவும் ஸ்தம்பிக்கவைத்து (15) பிறகு வலது மூக்கின் த்வாரத்தினால் முப்பத்திரண்டு மாத்திரை காலமளவும் சுவாஸத்தை வெளியில் விடவேண்டும். மறுபடியும் இதே விதமாக வலது மூக்கினால் வாயுவை நிரப்பி ஸ்தம்பிக்கவைத்து (16) பிறகு முறைப்படி இடது நாஸியின் வழியாக மூச்சை வெளியில் விடுவதே பிராணாயாமம் என்று சொல்லப்படும். மேலும் இந்த பிராணாயாமமானது ஸகர்ப்பம், அகர்ப்பம் என இருவகைப்படும். ஜபம், தியானம் இவைகளோடு செய்யப் படுவது ஸகர்பமென்றும், (18) வெறும் பிராணாயாமத்தை மட்டிலும் செய்வது அகர்ப்பமென்றும் சொல்லப்படும். ஸ்ரீ பஞ்சாக்ஷர மஹாமந்திரத்தை பிராம்மணர், க்ஷத்திரியர், வைச்யர் இவர்கள் பிரணவத் தோடு சேர்த்தும், (19) சூத்திரர்கள் பிரணவமில்லாமலும் ஜபம் செய்ய வேண்டும். கசப்பு, புளிப்பு, தித்திப்பு இவைகளையும், சுரைக்காயையும் விலக்கவேண்டும். (20) விதிப்படி அன்னத்தை பாலில்லாமல் சாப்பிடவேண்டும். தாகம் ஏற்பட்டால் தன் ஸுகத்திற்கேற்றபடி சூடாகச் சிறிது ஜலத்தைக் குடிக்க வேண்டும். (இவைகள் பிராணாயாமத்திற்கு அனுகூலமான ஸாதனங்களாக சொல்லப்பட்டது) (21) ஐந்து இந்திரியங்களையும் ஜயிப்பது ப்ரத்யாஹாரம் எனப்படும். ஸ்ரீ மஹாதேவருடைய பாதகமலங்களில் மனதைத் திடமாக நிறுத்திவைப்பது தாரணையெனப்படும். (22) ஸ்ரீ பரமேச்வரன் ஒருவரையே எப்பொழுதும் ஹிருதயகமலத்தில் தியானம் செய்வது தியானம் எனப்படும். மற்ற எல்லா விஷயங்களையும் மறந்து ஸத்யாநந்த ஸ்வரூபியான ஸ்ரீ சங்கரரிடத்தில் அவர் தன்னைக் காட்டிலும் வேறில்லாதவரென்ற பாவனையைச் செய்வது ஸமாதி எனப்படும். இவ்விதமாக எட்டு அங்கங்களை உடைய யோகத்தை எந்த பண்டிதன் அப்யாஸம் செய்கின்றானோ (24) அப்படிப்பட்ட மஹாத்மாவுக்கு எட்டு வித ஸித்திகளும் கை கூடும். மேலும் அவன் ஸ்ரீ ஜகதீசன் கேவலம் ரூபமற்றவராயினும் அவரைக் கோடி ஸூரியர்களுக்கு

हृन्मध्ये पश्यति क्षिप्रं सर्वालङ्कारसंयुतम् । मूर्तानेतान्महेशस्य पञ्चविंशतिकानपि ॥ २६
सदाशिवञ्च हृदये साक्षात्पश्यति भूसुराः । स्थितश्शयानश्च तथा सञ्चरन्नासनान्वितः ॥ २७
सर्वदा सर्वकार्येषु शिवमेव हृदि स्मरन् । एवञ्चरन्ति ये योगं शिवस्य परमात्मनः ॥ २८
ते वै निर्दग्धसकलपापौघाश्शङ्करप्रियाः । लभन्ते वाञ्छितं सर्वं देहान्ते च शिवाज्ञया ॥ २९
सारूप्यं यान्ति देवस्य परमानन्दनिर्भरम् । एवं वः कथितं सम्यग्योगमार्गो मया द्विजाः ॥ ३०

इति श्री स्कान्दे महापुराणे शङ्करसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे सप्ताशीतितमोऽध्यायः ॥

॥ अथ अष्टाशीतितमोऽध्यायः ॥
पशुपाशपतीनां निरूपणम् ॥

सूतः — अथातस्संप्रवक्ष्यामि शिवज्ञानमनुत्तमम् । यच्छ्रुत्वा मुच्यते पापान्नरस्संसार संभवात् ॥ १

ஹ்ருன்மத்யே பச்யதி க்ஷிப்ரம் ஸர்வாலங்கார ஸம்யுதம் |
மூர்தாநேதான் மஹேசஸ்ய பஞ்சவிம்சதிகாநபி || 26
ஸதாசிவஞ்ச ஹ்ருதயே ஸாக்ஷாத் பச்யதி பூஸுரா: |
ஸ்திதச்சயானச்ச ததா ஸஞ்சரந்நாஸனான்வித: || 27
ஸர்வதா ஸர்வகார்யேஷு சிவமேவ ஹ்ருதி ஸ்மரன் |
ஏவம் சரந்தியே யோகம் சிவஸ்ய பரமாத்மன: || 28
தேவை நிர்தக்த ஸகல பாபௌகாச்சங்கரப்ரியா: |
லபந்தே வாஞ்சிதம் ஸர்வம் தேஹாந்தே ச சிவாக்ஞயா || 29
ஸாரூப்யம் யாந்தி தேவஸ்ய பரமானந்த நிர்பரம் |
ஏவம் வ: கதிதம் ஸம்யக் யோகமார்கோ மயா த்விஜா: || 30

இதி ஸ்ரீ ஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேசகாண்டே ஸப்தாசீதிதமோऽத்யாய:

॥ அத அஷ்டாசீதிதமோऽத்யாய: ॥
பசு பாசம் பதி இவைகளை நிருபித்தல்

ஸூத: — அதாதஸ்ஸம்ப்ரவக்ஷ்யாமி சிவக்ஞான மனுத்தமம் |
யச்ச்ருத்வா முச்யதே பாபாந்நரஸ்ஸம்ஸார ஸம்பவாத் || 1

ஒப்பான காந்தியை உடையவராகவும், (25) ஸகல அலங்காரங்களோடு கூடியவராகவும், வெகு சீக்கிரத்தில் தனது ஹிருதயகமலத்தில் காண்பான். மேலும் அவன் நிற்கையிலும், படுக்கும்பொழுதும், நடக்கும்பொழுதும், உட்காரும்பொழுதும் எப்பொழுதும் எல்லா கார்யங்களிலும் ஸ்ரீ மஹேச்வரனையே மனதில் தியானித்துக்கொண்டு அவரது இருபத்தைந்து மூர்த்திகளையும் ஸச்சிதானந்த ரூபியான ஸ்ரீ சதாசிவனையும் பிரத்யக்ஷமாக தனது ஹிருதயகமலத்தில் காண்பான். எவர்கள் ஸ்ரீ பரமாத்மாவான ஸ்ரீ பரமேச்வரனுடைய யோகத்தை இவ்வாறு அனுஷ்டிக்கின்றார்களோ (26–28) அவர்கள் பொசுக்கப்பட்ட ஸகல பாபக்கூட்டங்களை உடையவர்களாகவும் ஸ்ரீ சங்கரருக்கு மிகப்பிரியமுள்ளவர்களாகவும் ஆகி ஸகல அபீஷ்டங்களையும் அடைந்து ஸ்ரீ சிவனின் கட்டளையால் தேஹத்தின் முடிவில் (29) பரமானந்தம் நிறைந்ததான ஸ்ரீ தேவாதி தேவருடைய ஸாரூப்ய பதவியை அடைகிறார்கள். ஓ முனிவர்களே! நான் உங்களுக்கு இவ்விதமாக யோகமார்க்கத்தைப்பற்றி நன்கு சொன்னேன். (30)

எண்பத்தேழாவது அத்யாயம் முற்றிற்று.

எண்பத்தெட்டாவது அத்தியாயம்

ஸூத முனிவர் கூறுகிறார்:— ஓ முனிவர்களே! இதன் பிறகு எதைக் கேட்டவுடன் மனிதன் ஸம்ஸாரத்தினுலுண்டாகும் பாபங்களிலிருந்து விடுபடுகின்றானோ அப்படிப்பட்ட மிகச் சிறந்த சிவ

ऋषयः — किं तत् ज्ञानमिति प्रोक्तं ज्ञेयज्ञानेन किं वद । ज्ञात्वा वा किं फलं तस्य भवेत्सूत महामते ॥ २
सूतः — पशुपाशपतिज्ञानं यत्तत् ज्ञानमितीरितम् । एतदेव मुनिश्रेष्ठैस्संज्ञाभेदेन वर्ण्यते ॥ ३
अज्ञानसंभवं दुःखं ज्ञानेनैव निवर्त्यते । ज्ञानं ज्ञेयपरिच्छित्तिर्ज्ञेयंच त्रिविधं मतम् ॥ ४
अजडश्च जडश्चैव नियन्ता च तयोर्द्वयोः । पशुः पाशः पतिश्चेमे वर्ण्यन्ते ब्रह्मवादिभिः ॥ ५
अजडो यः पशुः प्रोक्तस्सोऽक्षरः परिकीर्तितः । पाशः प्रोक्तो जडो योऽयं सक्षरः परिकीर्तितः ॥ ६
क्षराक्षरपरश्शंभुस्त्रयोऽप्येतेह्यनादयः । योऽक्षरः पशुरित्युक्तः स एव पुरुषः स्मृतः ॥ ७
क्षरात्मकस्तु यः पाशः प्रकृतिस्सा निगद्यते । क्षराक्षरपरो यस्तु तयोः प्रेरकईश्वरः ॥ ८
मुनयः — एतांश्चैव वयं विद्मः पृथक्पृथगसङ्करम् । ब्रूहि सूत महाबुद्धे यथैतान्विद्महे वयम् ॥ ९
स्वरूपञ्चापि चैतेषां क्रियाश्च वद तत्त्वतः । सूतः – माया प्रकृतिरुद्दिष्टा शक्तिर्माहेश्वरी जडा ॥ १०

ருஷய: — கிம் தத்ஞானமிதி ப்ரோக்தம் ஜ்ஞேயஞ்சானேந கிம்வத |
ஞாத்வா வா கிம் பலம் தஸ்ய பவேத் ஸூத மஹாமதே || 2
ஸூத: — பசுபாசபதி ஞானம் யத்தத் ஞானமிதீரிதம் |
ஏததேவ முனிச்ரேஷ்டைஸ்ஸம்ஞாபேதேந வர்ண்யதே || 3
அஞ்ஞான ஸம்பவம் து:கம் ஞானேனைவ நிவர்த்யதே |
ஞானம் ஜ்ஞேயபரிச்சித்திர் ஜ்ஞேயஞ்ச த்ரிவிதம் மதம் || 4
அஜடஞ்ச ஜடஞ்சைவ நியந்தா ச தயோர் த்வயோ: |
பசு: பாச: பதிச்சேமே வர்ண்யந்தே ப்ரும்ஹவாதிபி: || 5
அஜடோ ய: பசு: ப்ரோக்தஸ்ஸோSக்ஷர: பரிகீர்தித: |
பாச: ப்ரோக்தோ ஜடோ யோSயம் ஸ க்ஷர: பரிகீர்தித: || 6
க்ஷராக்ஷர பரச்சம்புஸ்த்ரயோ ப்யேதே ஹ்யனாதய: |
யோSக்ஷர: பசுரித்யுக்த: ஸ ஏவ புருஷ: ஸ்ம்ருத: || 7
க்ஷராத்மகஸ்துய: பாச: ப்ரக்ருதிஸ்ஸா நிகத்ய தே |
க்ஷராக்ஷரபரோ யஸ்து தயோ: ப்ரேரக ஈச்வர: || 8
முனய: — ஏதாந்நைவ வயம் வித்ம: ப்ருதக் ப்ருதகஸங்கரம் |
ப்ருஹிஸூத மஹாபுத்தே யதைதான்வித்மஹே வயம் || 9
ஸ்வரூபஞ்சாபி சைதேஷாம் க்ரியாச்ச வத தத்வத: |
ஸூத: — மாயா ப்ரக்ருதிருத்திஷ்டா சக்திர்மாஹேச்வரீ ஜடா || 10

ஞானத்தைப்பற்றி உங்களுக்குச் சொல்லுகின்றேன் என்றார். (1) முனிவர்கள் கேட்டதாவது:— மஹா புத்திசாலியான ஓ ஸூத முனிவரே! அப்படிப்பட்ட ஞானமென்பது என்ன? அதை அறிந்ததினால் என்னபயன் ஏற்படும் என்பதை எங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்டார்கள். (2) அதற்கு ஸூத முனிவர் கூறியதாவது:— ஓ முனிவர்களே! பசு, பாசம், பதி என்பவைகளின் பகுத்தறிவே ஞானம் எனப்படும். இதையே சில முனி ச்ரேஷ்டர்கள் வெவ்வேறு பெயர்களால் கூறுகின்றார்கள். (3) அக்ஞானத்தினாலுண்டாகும் துக்கம் ஞானத்தினால்தான் விலகும். ஞானமென்றால் அறியத்தகும் பொருளை குறிப்பிடும் தன்மையே ஆகும். அந்த ஜ்ஞேயமானது (அறியத்தகும் பொருளானது) (4) அஜடம், ஜடம் இவ்விரண்டிற்கும் நியந்தா (ஆட்டிவைப்பவன்) என மூன்று வகைப்படும். பிரம்மஞானிகள் பசு, பாசம், பதி இவைகளையே இவ்விதமாய் கூறுகின்றார்கள். (5) மேலும் அஜடம் என்று சொல்லப்பட்ட பசு அக்ஷரமென்றும், ஜடமென்றும், பாசம் க்ஷரமென்றும், நியந்தாவென்னும் பதியாகிய ஸ்ரீ சம்புவானவர் க்ஷரம், அக்ஷரம் இரண்டிற்கும் மேலானவர் என்றும் சொல்லப்படுகின்றது. இம் மூன்றுக்கும் ஆதி இல்லை. (6) மேலும் அக்ஷரம் என்று சொல்லப்பட்ட பசுவே புருஷன் என்றும், (7) க்ஷரம் என்று சொல்லப்பட்ட பாசம் பிரகிருதி என்றும் சொல்லப்படும். க்ஷரம், அக்ஷரம் இவ்விரண்டிற்கும் வேறாகியதோ வென்றால் அவ்விரண்டிற்கும் பிரேரகரான (ஆட்டிவைப்பவரான) ஈச்வரன் எனப்படுவார் என்றார். (8) அப்பொழுது முனிவர்கள் ஸூதரைப் பார்த்து வினவியதாவது:— மஹா புத்திசாலியான ஓ ஸூத முனிவரே! இவை எங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆகையால் எங்களுக்கு நன்றாகத் தெரியும்படி வெவ்வேறாகப் பிரித்துத் தெளிவாகச் சொல்ல வேண்டும். இன்னும் அவைகளுடைய ஸ்வரூபம், கார்யம் இவைகளை எங்களுக்கு உண்மையாக எடுத்துச் சொல்லவேண்டும் எனக் கேட்டார்கள். (9) அதற்கு ஸூத முனிவர் பதில் கூறியதாவது:— ஓ முனிவர்களே! ஸ்ரீ மஹேச்வரனது சக்தியாகிய மாயையானது

नचित्सापरमाकाशे विलसन्ती शिवाश्रया । पुरुषस्त्वावृतो जीवो मायया जडरूपया ॥ ११
स्वरूपावरणं प्रोक्तं मलशब्देन सूरिभिः । आवृतोऽसौ मलेनैव भुङ्क्ते कर्मफलं स्वकम् ॥ १२
कर्मैव हेतुर्भोगार्थं निवृत्तिस्तु मलक्षयात् । पुण्यपापात्मकं कर्म सुखदुःखफलञ्च तत् ॥ १३
तदीयानुभवो भोगश्शरीरं भोगसाधनम् । बाह्यान्तः करणद्वारा भोक्ता पशुरुदाहृतः ॥ १४
नैवास्य भविता कश्चिन्नासौ भवति कस्यचित् । पथिसङ्गम एवायं दारैरन्यैश्च बन्धुभिः ॥ १५
छादितश्च विविक्तश्च शरीरैरेव लक्ष्यते । चन्द्रबिंबवदाकाशे तरळैरभ्रसञ्चयैः ॥ १६
अनागता अतीताश्च तनवोऽस्य सहस्रशः । यथा वासांसि जीर्णानि विहाय दधते जनाः ॥ १७
एवं शरीराण्यप्यात्मा चादत्ते नूतनं पुनः । आमोक्षं संसरत्येव मत्स्यः कूलद्वयं यथा ॥ १८
स्वर्गपाताळभूलोकेष्वात्मकर्मवशादसौ । असौ बद्धः पशुः पाशैस्सुखदुःखाशनः पशुः ॥ १९
ईशलीलाविनोदार्थमिति शास्त्रस्य निर्णयः । पिपीलिकान्ता ब्रह्माद्याः पशवः परिकीर्तिताः ॥ २०

நசித்ஸாபரமாகாசே விலஸந்தீ சிவாச்ரயா । புருஷஸ்த்வாவ்ருதோ ஜீவோ மாயயா ஜடரூபயா ।। 11
ஸ்வரூபாவரணம் ப்ரோக்தம் மலசப்தேன ஸூரிபி: ।
ஆவ்ருதோऽஸௌ மலேனைவ புங்க்தே கர்மபலம் ஸ்வகம் ।। 12
கர்மைவ ஹேதுர்போகார்தம் நிவ்ருத்திஸ்துமலக்ஷயாத் । புண்யபாபாத்மகம் கர்ம ஸுகது:கபலஞ்ச தத் 13
ததியானுபவோ போகச்சரீரம் போகஸாதனம் । பாஹ்யாந்த: கரணத்வாரா போக்தா பசுருதாஹ்ருத: ।।14
நைவாஸ்ய பவிதா கச்சின்னாஸௌ பவதி கஸ்யசித் ।
பதிஸங்கம ஏவாயம் தாரைரன்யைச்ச பந்துபி: ।। 15
சாதிதச்ச விவிக்தச்ச சரீரைரேவ லக்ஷ்யதே । சந்த்ரபிம்பவதாகாசே தரளைரப்ரஸஞ்சயை: ।। 16
அனாகதா அதீதாச்ச தனவோऽஸ்ய ஸஹஸ்ரச: । யதா வாஸாம்ஸி ஜீர்ணானி விஹாய தததே ஜனா: ।। 17
ஏவம் சரீராண்யப்யாத்மா சாதத்தே நூதனம் புன: ।
ஆமோக்ஷம் ஸம்ஸரத்யேவ மத்ஸ்ய: கூலத்வயம் யதா ।। 18
ஸ்வர்கபாதாளபூலோகேஷ்வாத்மகர்மவசாதஸௌ ।
அஸௌ பத்த: பசு: பாசைஸ்ஸுகது:காசன: பசு: ।। 19
ஈசலீலாவினோதார்தமிதி சாஸ்த்ரஸ்ய நிர்ணய: । பிபீலிகாந்தா: ப்ரம்ஹாத்யா: பசவ: பரிகீர்திதா: ।। 20

பிரகிருதி எனவும், ஜடம் எனவும் சொல்லப்படும். (10) பதி சேதனம் அன்று. பின்னோவெனில் ஸ்ரீ சிவபிரானை அண்டி பரமாகாசத்தில் விளங்கிவருகிறது. புருஷன் என்னும் ஜீவனோவென்றால் ஜட ரூபமான மாயையால் ஆபரணமாய்ச் சூழப்பட்டிருக்கிறது. (11) ஜீவனுடைய அப்படிப்பட்ட ஆபரணத்தை வித்வான்கள் மலமென்று சொல்லுகின்றார்கள். இந்த ஜீவனானது அவ்விதம் மலத்தினால் சூழப்பட்டதாகி தனது கர்மத்துக்கு ஏற்ற பலனை அனுபவிக்கின்றது. (12) போகத்திற்குக் காரணம் கர்மமேயாகும். மலம் தொலைந்தால்தான் போகம் தொலையும். புண்ய, பாப ரூபமான கர்மத்திற்கு (நல்வினை, தீவினைகளுக்கு) ஸுக துக்கங்கள் பயனாகின்றன. (13) அந்த ஸுக துக்கங்களின் அனுபவமே போகம் எனப்படும். போகத்திற்கு ஸாதனமாக உள்ளது சரீரமாகும். அந்தரிந்திரியம், பஹிரிந்திரியம் (உள் இந்திரியம், வெளி இந்திரியம்) இவைகளின் மூலமாக பசுவானது போகங்களை அனுபவிப்பதாகச் சொல்லப்படுகின்றது. (14) பசுவுக்கு மற்றதனால் ஆவது ஒன்றும் இல்லை, இப்பசுவினாலும் மற்றதற்கு ஒன்றும் ஆவதில்லை. பசுவுக்கு மனைவி, பிள்ளைகள், மற்றவர்களோடும் நேரும் சேர்க்கையெல்லாம் நடு வழியில் நேர்ந்ததேயாகும். (15) மேகக் கூட்டங்கள் ஸஞ்சரிக்கும்போது ஆகாயத்திலுள்ள சந்திர பிம்பமானது மூடி மூடி திறக்கப்படுவதுபோல் அந்தப் பசுவானது சரீரத்தினால் மட்டும் மூடப்பட்டதாகவும் திறக்கப்பட்டதாகவும் தோன்றுகிறது. (16) இந்தப் பசுவுக்கு சென்ற சரீரங்களும் அநேகம். வரப் போகின்றவைகளும் அநேகம். மேலும் ஜனங்கள் கிழிந்த வஸ்திரங்களை எறிந்துவிட்டு புதியவைகளை எடுத்துக்கொள்வதுபோல் (17) ஜீவனானது உள்ள சரீரங்களை விட்டு மறுபடியும் மறுபடியும் புதிய சரீரத்தை அடைந்துகொண்டே மோட்சத்தை அடையும் வரையில் மீன்கள் அக்கரைக்கும் இக்கரைக்கும் போய்வருவதுபோல் சம்சாரத்தில் அலைந்து வருகின்றது. (18) மேலும் ஜீவனாகிய இந்தப் பசுவானது, பதியாகிய ஈசனுடைய லீலா விநோதார்த்தமாக தனது கர்ம வசத்தினால் மாயையாகிற கயிறுகளால் கட்டுப்பட்டதாகி, ஸ்வர்க்கம், பாதாளம், பூலோகம் இவைகளில் அலைந்து ஸுக துக்கங்களை அனுபவிக்கின்றது என்பது சாஸ்திரத்தின் நிர்ணயமாகும். பிரம்மா முதலாக எறும்பு வரையில் உள்ளவைகளெல்

पशूनामेव सर्वेषां प्रोक्तमेतन्निदर्शनम् । ऋषयः — या सा प्रकृतिरुद्दिष्टा त्वया मायेति चाधुना ॥ २१
तस्या वद स्वरूपं नस्तत्कार्यञ्च महामते । सूतः — यैषा प्रकृतिराख्याता सा महेशाश्रया पुनः ॥ २२
पशूनामपि सर्वेषां मायाशब्देन शब्द्यते । साऽव्यक्तं प्रकृतिर्माया प्रधानमिति नामभिः ॥ २३
कथिता सा ह्युपादानं कारणञ्चाखिलात्मनाम् । कालतस्तदभिव्यक्तमनभिव्यक्तलक्षणम् ॥ २४
सुखदुःखविमोहात्मा भिद्यतेच गुणस्त्रिधा । सत्वं रजस्तम इति गुणाः प्रकृतिसंभवाः ॥ २५
तन्मात्रापञ्चकञ्चैव भूतपञ्चकमेव च । ज्ञानेन्द्रियाणि पञ्चैव पञ्च कर्मेन्द्रियाणिच ॥ २६
मनोबुद्धिरहङ्कारश्चित्तञ्चेति चतुष्टयम् । समासादेवमव्यक्तं सविकारमुदाहृतम् ॥ २७
तत्कारणदशापन्नमव्यक्तमिति कथ्यते । व्यक्तं कार्यदशापन्नं शरीरादि घटादिच ॥ २८
व्यक्तमेतच्छरीरादि नाव्यक्तादतिरिच्यते । तस्मादव्यक्तमेवैकं कारणं करणानि च ॥ २९
शरीरञ्च तदाधारं तद्भोग्यञ्चापि नेतरत् । एभिरावृतमात्मानं मायया मोहिता बुधाः ॥ ३०

பசூனாமேவ ஸர்வேஷாம் ப்ரோக்தமேதன்னிதர்சனம் ।
ருஷய: — யா ஸா ப்ரக்ருதிருத்திஷ்டா த்வயா மாயேதி சாதுனா ॥ 21
தஸ்யா வத ஸ்வரூபம் நஸ்தத்கார்யஞ்ச மஹாமதே ।
ஸூத: — யைஷா ப்ரக்ருதிராக்யாதா ஸா மஹேசாச்ரயா புன: ॥ 22
பசூனாமபி ஸர்வேஷாம் மாயாசப்தேன சப்த்யதே ।
ஸாऽவ்யக்தம் ப்ரக்ருதிர்மாயா ப்ரதானமிதி நாமபி: ॥ 23
கதிதா ஸா ஹ்யுபாதானம் காரணஞ்சாகிலாத்மனாம் ।
காலதஸ்ததபிவ்யக்த மனபிவ்யக்தலக்ஷணம் ॥ 24
ஸுகது:கவிமோஹாத்மா பித்யதேச குணஸ்த்ரிதா । ஸத்வம் ரஜஸ்தம இதி குணா: ப்ரக்ருதிஸம்பவா: 25
தன்மாத்ராபஞ்சகஞ்சைவ பூதபஞ்சகமேவச । ஞானேந்த்ரியாணி பஞ்சைவ பஞ்சகர்மேந்த்ரியாணிச 26
மனோபுத்திரஹங்காரச்சித்தஞ்சேதி சதுஷ்டயம் । ஸமாஸாதேவமவ்யக்தம் ஸவிகாரமுதாஹ்ருதம் ॥ 27
தத்காரணதசாபன்ன மவ்யக்தமிதி கத்யதே । வ்யக்தம் கார்யதசாபன்னம் சரீராதி கடாதிச ॥ 28
வ்யக்தமேதச்சரீராதி நாவ்யக்தாததிரிச்யதே । தஸ்மாதவ்யக்தமேவைகம் காரணம் கரணானி ச ॥ 29
சரீரஞ்ச ததாதாரம் தத்போக்யஞ்சாபி நேதரத் । ஏபிராவ்ருத்மாத்மானம் மாயயா மோஹிதா புதா: ॥ 30

லாம் பசுக்கள் எனப்படும். (20) ஓ முனிவர்களே! இது எல்லா பசுக்களுக்கும் த்ருஷ்டாந்தமாகக் கூறப்பட்டது என்றார். அதற்கு முனிவர்கள் வினவியதாவது :— மகா புத்திசாலியான ஸூத முனிவரே! எதைப் பிரகிருதி என்று சொன்னீரோ அதை இப்பொழுது மாயை என்றும் சொல்லுகின்றீர். ஆகையால் அதன் ஸ்வரூபத்தையும், கார்யத்தையும் எங்களுக்குச் சொல்லவேண்டும் எனக் கேட்டார்கள். ஸூத முனிவர் பதில் கூறுகின்றார் :— ஓ முனிவர்களே! யாதொன்றானது ஸ்ரீ மஹேச்வரனை அண்டி இருக்கின்ற பிரகிருதி என்று சொல்லப்படுகிறதோ (22) அதாவது ஸகல பசுக்களுக்கும் மாயை என்று சொல்லப் படும். மேலும் அது அவ்யக்தம், பிரகிருதி, மாயை, ப்ரதானம் இப்பெயர்களால் கூறப்படுகின்றது. (23) அது ஸகல ப்ரபஞ்சங்களுக்கும் பரிணாமி காரணமென்றும், உபாதான காரணம் என்றும் சொல்லப்படும். பிரளய காலத்தில் வியக்தம் இன்றி ஸூட்சும ரூபமாய் இருக்கும் அந்த பிரகிருதியானது ஸ்ருஷ்டி காலம் தொடங்கி வியக்த ரூபமான பிரபஞ்சங்களாக ஆகின்றன. (24) ஸுகம், துக்கம், மோகம் இவைகளின் ஸ்வரூபமான குணமானது ஸத்வம், ரஜஸ், தமஸ் என மூன்று வகைப்படும். அந்த குணங்கள் பிரகிருதி யிலிருந்து உண்டானவைகளே. (25) ஓ முனிவர்களே! முன் கூறிய பிரகிருதியே ஐந்து தன்மாத் திரைகள், ஐந்து பூதங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், மனஸ், புத்தி, அகங்காரம், சித்தம் இவைகளாக ஆகின்றன. அவ்யக்தமானது இவ்வாறாக விகாரங்களுடன் (மாறு ரூபங்களுடன்) உங்களுக்குச் சுருக்கமாகக் கூறப்பட்டது. (27) அது காரணாவஸ்தையில் இருக்கும் போது அவ்யக்தம் என்றும், சரீரம், குடம் முதலிய கார்யாவஸ்தையில் இருக்கும்போது வ்யக்தம் என்றும் சொல்லப்படும். (28) என்றாலும், இவ்வாறாக வ்யக்தமாகிய சரீரம் முதலியவைகள் அவ்யக்தத்தைக் காட்டிலும் வேறல்ல. ஆகையால் அவ்யக்தம் ஒன்றுதான் பரிணாமி காரணமாகவும், உபாதான காரண மாகவும் ஆகின்றது. மேலும் இந்திரியங்கள் (29) சரீரம் அனுபவத்துக்குரிய பதார்த்தங்கள் இவைக ளும் அதுவேயன்றி வேறில்லை. ஜீவனானது இப்படிப்பட்டவைகளால் மூடப்பட்டிருக்கையில் புலவர்கள் மாயையால் மோஹிக்கப்பட்டவர்களாகி, இந்த ஜடவர்க்கங்களையே நானே பிரம்மன், நானே பிராமணன்,

एतान्येव प्रशंसन्ति पशून् ब्रह्मादिकानपि । ब्रह्माऽहं ब्राह्मणश्चाहं काणश्च बधिरः कविः ॥ ३१
श्यामोऽहमपि रक्तोऽहं कृशोऽहं मूक एव च । एभ्यो विलक्षणोह्यात्मा पश्यन्नेतान् स्वलीलया ॥ ३२
अस्मदीयं शरीरं हि शरीरं नाहमित्यपि । जडान्येतानि सर्वाणि न पश्यन्ति शरीरिणम् ॥ ३३
तञ्च तानिच देवेशः पश्यत्येव न तं पुनः । तानि जीवोऽपि सर्वत्र परिपूर्णमपीश्वरम् ॥ ३४
यदा पश्यति देवेशं नियन्तारं हिरण्मयम् । विधूय पुण्यं पापञ्च तदैवैति तदैक्यताम् ॥ ३५

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे अष्टाशीतितमोऽध्यायः ॥

॥ अथ एकोननवतितमोऽध्यायः ॥

श्रीपरमेश्वरस्य पतित्वनिरूपणम् ॥

सूतः — य एव जीव आख्यातः परतन्त्रः पशुः स्मृतः । स तु देहे स्थितो देही शिवेन समधिष्ठितः ॥ १
अवस्थापञ्चकं तस्य कथितं वेदवादिभिः । अनन्तावैत आत्मानस्संसारवशवर्तिनः ॥ २

ஏதான்யேவ ப்ரசம்ஸந்தி பசூன் ப்ரம்ஹாதிகானபி ।
ப்ரம்ஹாऽஹம் ப்ராம்ஹணச்சாஹம் காணச்ச பதிர: கவி: ॥ 31
ச்யாமோऽஹமபி ரக்தோऽஹம் க்ருசோऽஹம் மூக ஏவ ச ।
ஏப்யோ விலக்ஷணோஹ்யாத்மா பச்யன்னேதான் ஸ்வலீலயா ॥ 32
அஸ்மதீயம் சரீரம்ஹி சரீரம் நாஹமித்யபி । ஜடான்யேதானி ஸர்வாணி ந பச்யந்தி சரீரிணம் ॥ 33
தஞ்ச தானிச தேவேச: பச்யத்யேவ ந தம் புன: । தானி ஜீவோऽபி ஸர்வத்ர பரிபூர்ணமபீச்வரம் ॥ 34
யதா பச்யதி தேவேசம் நியந்தாரம் ஹிரண்மயம் । விதூய புண்யம் பாபஞ்ச ததைவைதி ததைக்யதாம் 35

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம சிவரஹஸ்யகண்டே
உபதேச காண்டே அஷ்டாசீதிதமோऽத்யாய:॥

॥ அத ஏகோனநவதிதமோऽத்யாய: ॥

ஸ்ரீ பரமேச்வரன் யாவருக்கும் பதியாக இருத்தலை நிரூபித்தல்.

ஸூத: — ய ஏவ ஜீவ ஆக்யாத: பரதந்த்ர: பசு: ஸ்ம்ருத: ।
ஸ து தேஹே ஸ்திதோ தேஹீ சிவேன ஸமதிஷ்டித: ॥ 1
அவஸ்தாபஞ்சகம் தஸ்ய கதிதம் வேதவாதிபி: । அனந்தா வைத ஆத்மானஸ்ஸம்ஸாரவசவர்தின: ॥ 2

நான் கண்ணில்லாதவன், நான் செவிடன், நான் கவனம் செய்கின்றவன் (31) நான் கறுத்தவன், நான் சிவந்தவன், நான் மெலிந்தவன், நான் ஊமையன் என்று பிரம்மா முதலிய பசுக்களாகச் சொல்லுகிறார்கள். ஆனால் ஜீவனோவென்றால் இவைகளைக் காட்டிலும் வேறாகி, இவைகளைத் தன் லீலையால் சரீரமானது நம்முடையதேயன்றி, நாம் சரீரம் அல்ல என்றும் பார்த்து வருகிறதேயன்றி இந்த ஜடங்களெல்லாம் ஜீவனைப் பார்ப்பதில்லை. (33) ஆனால் ஜீவனையும், அந்த ஜடங்களையும் பதியாகிய ஸ்ரீ தேவேசன் பார்த்து அருளுகின்றார். ஸ்ரீ ஜகதீசன் எங்கும் பரிபூர்ணமாய் விளங்கிக்கொண்டிருந்தபோதிலும் (34) இவ்விரண்டும் அவரைப் பார்ப்பதில்லை. எல்லா உலகங்களுக்கும் நியாமகரும் (நடத்துகின்றவரும்) பரஞ்ஜோதிப் பொருளுமான அப்படிப்பட்ட ஸ்ரீ தேவேசனை ஜீவன் எப்பொழுது ஞானக்கண்ணினால் பார்க்கின்றானோ, அப்பொழுதே அவன் ஸகல பாபங்களிலிருந்தும், புண்யங்களிலிருந்தும் விலகி, அவருடன் ஐக்கியத்தை (ஒன்றாயிருத்தலை) அடைகிறான். (35)

எண்பத்தெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

எண்பத்தொன்பதாவது அத்தியாயம்.

ஓ முனிவர்களே! ஜீவனென்பது பரதந்த்ரனான பசுவெனக் கூறப்படுகிறான். அந்த ஜீவன் சரீரத்துக்குள் இருந்துகொண்டு, ஸ்ரீ சிவபிரானால் ஆளப்பட்டு வருகிறான். (1) வேதம் அறிந்தவர்கள்

केवलाख्यास्ततः केचित्सकलाश्शुद्धसंज्ञिताः । तेषु स्यात्परमेशोऽयमुन्निनीषुः कृपावशात् ॥ ३
तस्मिञ्छक्तिर्निपतति साधुकर्म करोति सः । तद्वशात्स तु निष्ठावाञ्छिवशास्त्रोक्तवर्त्मसु ॥ ४
तन्निष्ठस्तत्परो भूत्वा शिवे लीनमनास्सदा । मध्ये मध्ये यदा चित्तं शिवात्पृथगसौ तदा ॥ ५
शिवालयदिदृक्षार्थं विहरत्येष नैष्ठिकः । करोतिच महेशस्य कैङ्कर्यादिकमप्यसौ ॥ ६
लिङ्गार्चामपि देवस्य करोति बहुविस्तराम् । शिवभक्तान् संयतात्मा तर्पयत्येव भूरिशः ॥ ७
सततं भस्मरुद्राक्षमालालङ्कृतविग्रहः । पञ्चाक्षरीजपासक्तस्सर्वप्राण्यभयप्रदः ॥ ८
विहरत्येव निष्ठावाञ्जीवन्मुक्तस्स ईरितः । एष ज्ञानी विरक्तश्च मतिमान् लोकपूजितः ॥ ९
नानेन सदृशः कश्चित् त्रिषु लोकेषु विद्यते । एतस्य पूजनादेव पूजितः परमेश्वरः ॥ १०
अस्यावज्ञा शिवावज्ञा सत्यमेव न संशयः । अस्य जिह्वाग्रमास्थाय भुङ्क्ते देवः स्वयं शिवः ॥ ११
अस्य दृष्टिं गतास्सर्वे मुक्तपाप्मान एव ते । तस्मात् ज्ञानेन वै मुक्तिस्सत्यं सत्यं मुनीश्वराः ॥ १२

கேவலாக்யாஸ்தத: கேசித்ஸகளாச்சுத்தஸம்ஜ்ஞிதா: ।
தேஷு ஸ்யாத்பரமேசோऽயமுன்னினீஷு: க்ருபாவசாத் ॥ 3
தஸ்மிஞ்சக்திர்நபததி ஸாதுகர்ம கரோதி ஸ: ।
தத்வசாத்ஸது நிஷ்டாவாஞ்சிவசாஸ்த்ரோக்தவர்த்மஸு ॥ 4
தன்னிஷ்டஸ்தத்பரோ பூத்வா சிவே லீனமனாஸ்ஸதா ।
மத்யே மத்யே யதா சித்தம் சிவாத்ப்ருதகஸௌ ததா ॥ 5
சிவாலய தித்ருக்ஷார்தம் விஹரத்யேஷ நைஷ்டிக: । கரோதிச மஹேசஸ்ய கைங்கர்யாதிகமப்யஸௌ ॥ 6
லிங்கார்சாமபி தேவஸ்ய கரோதி பஹுவிஸ்தராம் । சிவபக்தான் ஸம்யதாத்மா தர்பயத்யேவ பூரிச: ॥ 7
ஸததம் பஸ்மருத்ராக்ஷமாலாலங்க்ருதவிக்ரஹ: । பஞ்சாக்ஷரீஜபாஸக்தஸ்ஸர்வப்ராண்யபயப்ரத: ॥ 8
விஹரத்யேவ நிஷ்டாவான் ஜீவன்முக்தஸ்ஸ ஈரித: । ஏஷ ஜ்ஞானீ விரக்தச்ச மதிமான் லோகபூஜித: ॥ 9
நானேன ஸத்ருச: கச்சித் த்ரிஷு லோகேஷு வித்யதே । ஏதஸ்ய பூஜனாதேவ பூஜித: பரமேச்வர: ॥ 10
அஸ்யாவக்ஞா சிவாவக்ஞா ஸத்யமேவ ந ஸம்சய: ।
அஸ்ய ஜிஹ்வாக்ரமாஸ்தாய புங்க்தே தேவ: ஸ்வயம் சிவ: ॥ 11
அஸ்ய த்ருஷ்டிம் கதாஸ்ஸர்வே முக்தபாப்மான ஏவ தே ।
தஸ்மாத் க்ஞானேன வை முக்திஸ்ஸத்யம் ஸத்யம் முனீச்வரா: ॥ 12

அந்த ஜீவனுக்கு ஐந்து அவஸ்தைகள் உண்டென்று சொல்லுகிறார்கள். அந்த ஜீவன்களோ கணக்கற்றவைகள். அவைகள் ஸம்ஸாரத்தின் வசமாயிருந்து வருகின்றன. (2) அவைகளில் சில ஜீவன்கள் கேவலமென்றும், சில ஸகளமென்றும், சில சுத்தமென்றும் சொல்லப்படும். அவைகளில் எந்த ஜீவனை ஸ்ரீ பரமேச்வரன் கிருபையினால் கைதூக்கிவிட விரும்புகிறாரோ (3) அவனிடத்தில் மாயை அணுகுவதில்லை. அவன் நல்ல காரியங்களையே செய்வான். அதனால் அவன் சைவ சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட மார்க்கங்களில் நிலை பெற்றவனாகி, (4) எப்பொழுதும் அந்த பரமேச்வரனிடத்தில் நிஷ்டை உள்ளவனாகவும், அவரிடத்திலேயே பற்றிய மனமுடையவனாயும், அவரிடத்திலேயே பற்றுதல் உடையவனாயும் ஆகின்றான். மேலும் அவனுக்கு எப்பொழுதெல்லாம் ஸ்ரீ பரமேச்வரனிடமிருந்து மனம் வேறுபடுகின்றதோ, அப்பொழுதெல்லாம் (5) அந்த நிஷ்டை உடையவன் சிவாலய தரிசனத்துக்குச் சென்று, சிவ கைங்கர்யம் முதலியவைகளைச் செய்து (6) சிவலிங்கார்ச்சனத்தையும் மிக விஸ்தாரமாகச் செய்வான். பிறகு மனதை அடக்கியவனாய் சிவ பக்தர்களை விசேஷமாகத் திருப்தி செய்விப்பான். (7) எப்பொழுதும் விபூதி, ருத்திராக்ஷங்களால் தனது உடலை அலங்கரித்துக்கொண்டும், ஸ்ரீ பஞ்சாட்சர மஹாமந்த்ரத்தை எப்பொழுதும் ஜபிக்கின்றவனாயும், ஸகல ப்ராணிகளுக்கும் அபயம் அளிப்பவனாயும் இருப்பான். (8) இவ்வாறு எவன் நிஷ்டையுடன் நடக்கின்றானோ அவனே ஜீவன் முக்தனென்று சொல்லப்படுகிறான். இப்படிப்பட்டவனே ஞானி. இவனே வைராக்கியம் உடையவன். இவனே புத்திசாலி. இவனே உலகங்களால் பூஜிக்கப்படுகிறான். (9) மூன்று உலகங்களிலும் இவனுக்கு நிகராக ஒருவரும் இல்லை. இவனைப் பூஜித்த மாத்திரத்தில் ஸ்ரீ பரமேச்வரனே பூஜிக்கப்பட்டவராக ஆகின்றார். (10) இவனை அவமதித்த மாத்திரத்தில் ஸ்ரீசிவபிரானே அவமதிக்கப்பட்டவராகின்றார் என்பதில் ஸந்தேகமில்லை. இவனது நாக்கின் நுனியிலிருந்துகொண்டு ஸ்ரீசிவபிரான் தானே நேரில் சாப்பிடுகின்றார். (11) இவனது கண் பார்வையில் அகப்பட்டவர்களெல்லாம் தங்கள் பாபம் நீங்கியவர்களே. ஆகையால் ஓ முனிவர்களே! ஞானத்தினால்

त्रिलोक्यां ज्ञाननिष्ठस्य दुर्लभञ्च न विद्यते । ऋषयः — पशुपाशौ श्रुतौ विद्वन् पतिं नो वद सांप्रतम् ॥ १३
यत् ज्ञात्वा न पुनर्जन्म लभते मानवो भुवि । सूतः — हन्त वस्संप्रवक्ष्यामि देवदेवस्य वैभवम् ॥ १४
यस्य श्रवणमात्रेण कृतार्थः पुरुषो भवेत् । अस्ति कश्चिन्मुनिश्रेष्ठा भुवि विश्वाधिकश्शिवः ॥ १५
अनन्तमहिमाधारः कल्याणगुणसागरः । संसृज्य विश्वमादौ तद्गोपान्ते सञ्चुकोच सः ॥ १६
विश्वतश्चक्षुरेवायमुतायं विश्वतोमुखः । तथैव विश्वतो हस्तो विश्वतः पादसंयुतः ॥ १७
सर्वज्ञः सर्वकर्ता च सच्चिदानन्दविग्रहः । परिपूर्णः परञ्ज्योतिः पशुपाशविमोचकः ॥ १८
अनादिमलनिर्मुक्तो विभुर्व्यापी सनातनः । निष्कलस्सकलश्चायं सकलङ्क इतीरितः ॥ १९
स क्रियोपाधिभेदेन भिद्यतेऽनेकधा विभुः । शिवोऽमूर्तिश्च मूर्तिश्च कर्ता कर्माह्वयोऽपरः ॥ २०
त इमे पञ्चसादाख्याः परमेश्वरसंभवाः । स पुनर्विद्यते पञ्चब्रह्मात्मा च षडङ्गवान् ॥ २१
सदाशिवोऽयमपरो महानपि सदाशिवः । पञ्चविंशति सङ्ख्याका मूर्तयोऽस्य प्रकीर्तिताः ॥ २२

த்ரிலோக்யாம் க்ஞானநிஷ்டஸ்ய துர்லபஞ்ச ந வித்யதே ।
ருஷய: — பசுபாசௌ ச்ருதௌ வித்வன் பதிம் நோ வத ஸாம்ப்ரதம் ॥ 13
யத் க்ஞாத்வா ந புனர்ஜன்ம லபதே மானவோ புவி ।
ஸூத: — ஹந்த வஸ்ஸம்ப்ரவக்ஷ்யாமி தேவதேவஸ்ய வைபவம் ॥ 14
யஸ்ய ச்ரவணமாத்ரேண க்ருதார்த: புருஷோ பவேத் ।
அஸ்தி கச்சின்முனிச்ரேஷ்டா புவி விச்வாதிக: சிவ: ॥ 15
அனந்தமஹிமாதார: கல்யாணகுணஸாகர: ।
ஸம்ஸ்ருஜ்ய விச்வமாதௌ தத்கோப்தாந்தே ஸஞ்சுகோச ஸ: ॥ 16
விச்வதச்சக்ஷுரேவாயமுதாயம் விச்வதோமுக: । தத்தைவ விச்வதோ ஹஸ்தோ விச்வத: பாதஸம்யுத: ॥ 17
ஸர்வக்ஞ: ஸர்வகர்தாச ஸச்சிதானந்த விக்ரஹ: । பரிபூர்ண: பரஞ்ஜ்யோதி: பசுபாசவிமோசக: ॥ 18
அனாதிமலநிர்முக்தோ விபுர்வ்யாபீ ஸனாதன: । நிஷ்களஸ்ஸகளச்சாயம் ஸகளங்க இதீரித: ॥ 19
ஸ க்ரியோபாதிபேதேன பித்யதேऽனேகதா விபு: ।
சிவோऽமூர்திச்ச மூர்திச்ச கர்தா கர்மாஹ்வயோऽபர: ॥ 20
த இமே பஞ்சஸாதாக்யா: பரமேச்வரஸம்பவா: । ஸ புனர்வித்யதே பஞ்சப்ரம்ஹாத்மாச ஷடங்கவான் 21
ஸதாசிவோऽயமபரோ மஹானபி ஸதாசிவ: । பஞ்சவிம்சதி ஸங்க்யாகா மூர்தயோऽஸ்ய ப்ரகீர்திதா: ॥ 22

தான் மோக்ஷம் உண்டாகுமென்பது சத்தியம். (12) ஞான நிஷ்டனுக்கு இம்மூன்று உலகிலும் அடைய முடியாதது ஒன்றுமில்லை என்றார். இவ்வாறு சொன்ன ஸூத முனிவரைப் பார்த்து சௌனகாதி முனிவர்கள் வினவினார்கள். வித்வானான ஓ ஸூத முனிவரே! பசு, பாசம் இவைகளைப்பற்றி தாங்கள் சொல்லக் கேட்டோம். இப்பொழுது எதை அறிந்ததால் இப்பூமியில் மனிதர்கள் மறு பிறவியை அடையமாட்டார்களோ அப்படிப்பட்ட பதியைப்பற்றி எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள். ஸூத முனிவர் கூறுகின்றார் :— ஓ முனிவர்களே! எந்த மஹாதேவரின் மஹிமையைக் கேட்ட மாத்திரத்தில் மனிதர்கள் க்ருதார்த்தர்களாவார்களோ, அப்படிப்பட்ட பதியைப்பற்றி உங்களுக்குச் சொல்கிறேன். (13, 14) ஓ முனிவர்களே! அளவற்ற மஹிமைகளுக்கு ஆதாரமாக இருப்பவரும், கல்யாண குணங்களுக்குக் கடலாக இருப்பவரும், விச்வங்களை அதிகரித்தவருமான ஸ்ரீ சிவபிரான் ஒருவர் இருக்கின்றார். (15) அவர் ஆதியில் உலகத்தை ஸ்ருஷ்டித்து காப்பாற்றி பிறகு தனக்குள்ளேயே அடக்கிக்கொள்கிறார். (16) அவர் அனேகம் கண்கள், முகங்கள், கைகள், கால்கள் இவைகளை உடையவர். (17) மேலும் அவர் ஸர்வக்ஞரும், ஸர்வ கர்த்தரும், ஸச்சிதானந்த ரூபியும், பரிபூர்ணரும், பரஞ்ஜோதியும், பசு, பாசங்களை தீர்ப்பவரும், (18) அநாதியாகிய மாயையால் ஸம்மந்தப்படாதவரும், ப்ரபுவும், எங்கும் வியாபித்தவரும், நித்யராகவும் ஆனவர். மேலும் அப்பிரபுவானவர் உபாதி பேதத்தினால் ஸகளர் என்றும், நிஷ்களர் என்றும், நிஷ்களங்கர் என்றும், ஸக்ரியர் (க்ரியையோடு கூடியவர்) என்றும், பற்பல பேதமாக சொல்லப்படுகிறார். மேலும் சிவம், அமூர்த்தி, மூர்த்தி, கர்த்தா, கர்மா, (20) ஆகிய இந்த ஐந்து ஸாதாக்ய மூர்த்திகளும், ஸ்ரீ பரமேச்வரனிடமிருந்து உண்டானவைகளே. தவிரவும் அவர், ஸத்யோஜாதம், வாமதேவம், தத்புருஷம், அகோரம், ஈசானம் ஆகிய பஞ்ச (ஐந்து) ப்ரும்ம மூர்த்தியும், ஸர்வக்ஞ சக்தி, நித்ய த்ருப்த சக்தி, அநாதிபோத சக்தி, ஸ்வதந்த்ர சக்தி, அலுப்த சக்தி, அனந்த சக்தி, ஆகிய ஷடங்க சக்தி மூர்த்தியும், ஸதாசிவ மூர்த்தியும், மஹா ஸதாசிவ மூர்த்தியுமாக இருக்கின்றார்.

करोति पञ्चकृत्यानि सर्वदाऽयं महेश्वरः । सृष्ट्याख्यं प्रथमं कृत्यं द्वितीयं तस्य रक्षणम् ॥ २३
तृतीयं तस्य संहारस्तिरोभावश्चतुर्थकः । पञ्चमोऽनुग्रहः प्रोक्तः पञ्चकृत्यानि धूर्जटेः ॥ २४
स एवैकः परं ब्रह्म तदन्ये पशवः स्मृताः । बध्वा सर्वानिमान् पाशैः शरीरकरणादिभिः ॥ २५
क्रीडत्येव सदा शंभुस्सर्वज्ञत्वादिशक्तिमान् । लीलासाधनभूतास्ते ब्रह्माद्याः पशवः प्रभोः ॥ २६
सर्वज्ञोऽयमतश्शंभुस्सृजत्यवति हन्ति च । तृप्तो यतस्सदादेवस्सर्वानुग्राहकः स्मृतः ॥ २७
बोधोऽनादिः परोऽस्येति मोहकस्सकलात्मनाम् । स्वतन्त्रशक्तिर्देवेशः पक्वान्मोचयति प्रभुः ॥ २८
अलुप्तशक्तिमान्यस्मात्पञ्चकृत्यपरस्सदा । अनन्ताश्शक्तयोऽस्येति निमित्तमखिलात्मनाम् ॥ २९
एवं षडङ्गवान् पञ्चब्रह्मरूपी सदाशिवः । ज्ञेयः पशुपतिः सर्वैः ; पशुपाशविलक्षणः ॥ ३०
अस्य ज्ञानेन सर्वेषां बन्धमुक्तिर्नचान्यथा । अमुं ज्ञात्वा शिवं शान्तिमेति शोकं तरत्यपि ॥ ३१
चर्या क्रिया च योगश्च ज्ञानंचेति चतुर्विधम् । आत्मनां बन्धमुक्त्यर्थं कल्पितानि शिवेन वै ॥ ३२

கரோதி பஞ்சக்ருத்யானி ஸர்வதாSயம் மஹேச்வர: ।
ஸ்ருஷ்ட்யாக்யம் ப்ரதமம் க்ருத்யம் த்விதீயம் தஸ்ய ரக்ஷணம் ॥ 23
த்ருதீயம் தஸ்ய ஸம்ஹாரஸ்திரோபாவச்சதுர்தக: ।
பஞ்சமோSனுக்ரஹ: ப்ரோக்த: பஞ்சக்ருத்யானி தூர்ஜடே: ॥ 24
ஸ ஏவைக: பரம் ப்ரம்ஹ ததன்யே பசவ: ஸ்ம்ருதா: । பத்வா ஸர்வானிமான் பாசை: சரீரகரணாதிபி: ॥ 25
க்ரீடத்யேவ ஸதா சம்புஸ்ஸர்வக்ஞத்வாதி சக்திமான் ।
லீலாஸாதனபூதாஸ்தே ப்ரம்ஹாத்யா: பசவ: ப்ரபோ: ॥ 26
ஸர்வக்ஞோSயமதச்சம்புஸ்ஸ்ருஜத்யவதி ஹந்தி ச ।
த்ருப்தோ யதஸ்ஸதா தேவஸ்ஸர்வானுக்ராஹக: ஸ்ம்ருத: ॥ 27
போதோSநாதி: பரோSஸ்யேதி மோஹகஸ்ஸகலாத்மனாம் ।
ஸ்வதந்த்ரசக்திர்தேவேச: பக்வான்மோசயதி ப்ரபு: ॥ 28
அலுப்தசக்திமான் யஸ்மாத் பஞ்சக்ருத்ய பரஸ்ஸதா ।
அனந்தாச்சக்தயோSஸ்யேதி நிமித்தமகிலாத்மனாம் ॥ 29
ஏவம் ஷடங்கவான் பஞ்சப்ரம்ஹரூபீ ஸதாசிவ: । க்ஞேய: பசுபதி: ஸர்வை: பசுபாசவிலக்ஷண: ॥ 30
அஸ்ய க்ஞானேன ஸர்வேஷாம் பந்தமுக்திர் நசான்யதா ।
அமும் க்ஞாத்வா சிவம் சாந்திமேதி சோகம் தரத்யபி ॥ 31
சர்யா க்ரியாச யோகச்ச க்ஞானஞ்சேதி சதுர்விதம் ।
ஆத்மனாம் பந்தமுக்த்யர்தம் கல்பிதானி சிவேன வை ॥ 32

இவ்வாறு அவருக்கு இருபத்தைந்து மூர்த்திகளும் உண்டென்று சொல்லப்படுகின்றது. (22) அந்த மஹேச்வரர் எப்பொழுதும் பஞ்ச க்ருத்யங்களை செய்து வருகின்றார். அதாவது ஸ்ருஷ்டி, ஸ்திதி (23) ஸம்ஹாரம், திரோபாவம், அனுக்ரஹம் ஆகிய இவ்வைந்தும் ஸ்ரீ பரமேச்வரனுடைய பஞ்ச க்ருத்யங்கள் எனப்படும். (24) அவர் ஒருவரே பரப்ரும்மம் என்றும், மற்றவர்களெல்லாம் பசுக்கள் என்றும் சொல்லப் படுகின்றது. சர்வக்ஞத்துவம் முதலிய சக்திகளை உடைய சம்புவானவர் சரீரம், இந்திரியங்கள் முதலிய பாசங்களால் (கயிறுகளால்) அந்த எல்லா பசுக்களையும் கட்டி எப்பொழுதும் விளையாடுகின்றார். பிரம்மா முதலிய பசுக்களெல்லாம் ஸ்ரீ பிரபுவினுடைய அவ்வாறான திருவிளையாடலுக்குரிய கருவிகளாக ஆகின்றார்கள். (26) அவர் சர்வக்ஞராகியதால் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களை செய்கின்றவராகவும், நித்ய திருப்தராகியதால் சகல அனுக்கிரஹங்களையும் செய்கின்றவராகவும், அனாதிபோதராகியதால் சகல பிராணிகளையும் மோகிக்கச் செய்கின்றவரும், ஸர்வ ஸ்வதந்தரம் உள்ளவராகியதால் பக்குவம் அடைந்தவருக்கு (ஞானிகளுக்கு) மோக்ஷமளிக்கின்றவரும் (28) அலுப்த சக்தி உடையவராகியதால் எப்பொழுதும் பஞ்ச கிருத்தியங்களை செய்கின்றவராகவும், அனந்த சக்தியை உடையவராதலால் சகல பிரபஞ்சங்களுக்கும் காரணராகவும் இருக்கின்றார். (29) ஆகையால் இவ்விதமாக ஆறு அங்க சக்திகளை உடையவரும், பஞ்ச பிரம்ம ஸ்வரூபியுமான ஸ்ரீ ஸதாசிவன் பசுபாசங்களிலிருந்து வேறான பசுபதி என்றே யாவராலும் அறியத்தக்கவர். (30) இப்படிப்பட்ட பரமசிவனை இவ்வாறாக அறிவதால்தான் யாவருக்கும் மோக்ஷமுண்டாகுமே அன்றி வேறு விதத்தால் இல்லை. இந்த சிவபிரானை அறிவதினால் துக்கங்களைக் கடந்து க்ஷேமத்தை அடைகின்றான். (31) பிராணிகள் ஸம்சாரத்திலிருந்து மோக்ஷமடைவதற்காக

चर्यानुष्ठानतो मर्त्याश्शिवसालोक्यमेत्यच । सायुज्यं कालतो यान्ति तस्माच्चर्या च मुक्तिदा ॥ ३३
क्रियापादपरो मर्त्यश्शिवसामीप्यमेत्य च । आप्नोति शिवसायुज्यं ज्ञानेनैवतु केवलम् ॥ ३४
योगाभ्यासरतो यस्तु योगपादोक्तवर्त्मना । संप्राप्य शिवसारूप्यं पश्चात्सायुज्यमेत्यसौ ॥ ३५
ज्ञानाभ्यासपरो यस्तु ज्ञानपादोक्तवर्त्मना । अविलंबेन सायुज्यमाप्नोत्यस्य प्रभावतः ॥ ३६
तस्मात् ज्ञानेन वै मुक्तिर्ज्ञानं त्रैलोक्यदुर्लभम् । विज्ञानेनच सर्वेषां बन्धमुक्तिर्नसंसृतेः ॥ ३७
लब्धज्ञानो नरो लोके जीवन्मुक्तो न संशयः । यं यं कामयते ज्ञानी तं तमाप्नोत्यसंशयः ॥ ३८
तस्मात्सर्वेषु लोकेषु ज्ञानिनां नास्ति दुर्लभम् । योऽधीत्य चतुरो वेदान् सषडङ्गपदक्रमान् ॥ ३९
पुराणन्यायमीमांसा धर्मशास्त्रपुरस्सरान् । सर्वागमार्थतत्वज्ञस्समयान्तरतत्ववित् ॥ ४०
पतिं पाशान् पशूंश्चैव तत्तल्लक्षणलक्षितान् । ज्ञात्वा ज्ञानेन तेनैव ज्ञाताऽहं ज्ञेय ईश्वरः ॥ ४१
ज्ञानञ्च स्वात्मनिष्ठं तच्छिवैकविषयं मतम् । ज्ञात्वैतत् त्रितयं विद्वांस्तन्निष्ठो नियतेन्द्रियः ॥ ४२

சர்யானுஷ்டானதோ மர்த்யாச்சிவஸாலோக்யமேத்யச ।
ஸாயுஜ்யம் காலதோ யாந்தி தஸ்மாச்சர்யாச முக்திதா ॥ 33
க்ரியாபாதபரோ மர்த்யச்சிவஸாமீப்யமேத்யச । ஆப்னோதி சிவஸாயுஜ்யம் க்ஞானேனைவது கேவலம் ॥ 34
யோகாப்யாஸரதோ யஸ்து யோகபாதோக்தவர்த்மனா ।
ஸம்ப்ராப்ய சிவஸாரூப்யம் பச்சாத்ஸாயுஜ்யமேத்யஸௌ ॥ 35
க்ஞானாப்யாஸபரோ யஸ்து க்ஞானபாதோக்தவர்த்மனா ।
அவிளம்பேன ஸாயுஜ்யமாப்னோத்யஸ்ய ப்ரபாவத: ॥ 36
தஸ்மாத் க்ஞானேன வை முக்திர்க்ஞானம் த்ரைலோக்யதுர்லபம்
விக்ஞானேன ச ஸர்வேஷாம் பந்தமுக்திர் ந ஸம்ஸ்ருதே: ॥ 37
லப்தக்ஞானோ நரோ லோகே ஜீவன் முக்தோ ந ஸம்சய: ।
யம் யம் காமயதே க்ஞானீ தம் தமாப்னோத்ய ஸம்சய: ॥ 38
தஸ்மாத்ஸர்வேஷு லோகேஷு க்ஞானினாம் நாஸ்தி துர்லபம் ।
யோऽதீத்ய சதுரோவேதான் ஸஷடங்கபதக்ரமான் ॥ 39
புராணன்யாயமீமாம்ஸா தர்மசாஸ்த்ரபுரஸ்ஸரான் । ஸர்வாகமார்த தத்வக்ஞஸ்ஸமயாந்தரதத்வவித் ॥ 40
பதிம் பாசான் பசூம்ச்சைவ தத்தல்லக்ஷண லக்ஷிதான் ।
க்ஞாத்வா க்ஞானேன தேனைவ க்ஞாதாஹம் க்ஞேய ஈச்வர: ॥ 41
க்ஞானஞ்ச ஸ்வாத்மனிஷ்டம் தச்சிவைகவிஷயம் மதம் ।
க்ஞாத்வைதத் த்ரிதயம் வித்வாம்ஸ்தந்நிஷ்டோ நியதேந்த்ரிய: ॥ 42

ஸ்ரீ பரமேச்வரனுல் சரியை, கிரியை, யோகம், க்ஞானம் என்று நான்கு பாதங்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. (32) மனிதர்கள் சரியை என்னும் பாதத்தை அனுஷ்டிப்பதினுல் ஸ்ரீ சிவபிரானுடைய ஸாலோக்ய பதவியை அடைந்து பிறகு நாளடைவில் ஸாயுஜ்ய முக்தியை அடைகின்றுர்கள். ஆகையால் சரியை என்பதும் மோக்ஷத்தை அளிக்கக் கூடியது. (33) கிரியை என்னும் பாதத்தை அனுஷ்டிப்பதினுல் ஸ்ரீ சிவபிரானுடைய ஸாமீப்யத்தை அடைந்து, பிறகு ஞானத்தினுல் மோக்ஷமடைகின்றுன். (34) ஞானம் என்னும் பாதத்திற்கு கூறிய முறைப்படி ஞானத்தை அப்பியசிப்பவன் என்றுல் அதன் மகிமையால் சிறிதும் தாமதமின்றி ஸாயுஜ்யத்தை அடைகிருன். (36) ஆகையால் மோக்ஷமடைவது ஞானத்தினுல்தான். மூன்று உலகில் உள்ளவர்களுக்கும் க்ஞானம் வெகு துர்லபம். விக்ஞானத்தினுல் (சிற்ப சாஸ்திரங்கள் முதலியவற்றுல்) ஒருவருக்கும் ஸம்ஸாரத்திலிருந்து மோக்ஷம் கிடைப்பதில்லை. (37) உலகில் க்ஞானம் அடைந்தவன் ஜீவதசையிலேயே ஸம்ஸாரத்திலிருந்து மோக்ஷமடைந்தவன் என்பதில் சந்தேகம் இல்லை. (38) ஆகையால் ஞானிகளுக்கு எல்லா உலகங்களிலும் ஒன்றும் துர்லபம் இல்லை. எவனொருவன் ஆறு அங்கங்கள் பதம், கிரமம் இவைகளோடு கூடிய நான்கு வேதங்களையும் (39) புராணம், தர்க்கம், மீமாம்சை, தர்ம சாஸ்திரம் முதலிய யாவற்றையும் கற்று சகல ஆகம பொருட்களின் தத்துவங்களையும், மதாந்தரங்களின் தத்துவங்களையும் அறிந்தவனுகி, (40) பசு, பாசம், பதி இவைகளை அந்தந்த லக்ஷணங்களால் குறிக்கப்பட்டபடி அறிந்து அப்படிப்பட்ட க்ஞானத்தினுல் க்ஞாதா (அறிகிறவன்) நானே என்றும் க்ஞேயர் (அறியத்தக்கவர் ஸ்ரீ ஜகதீசனே என்றும், (41) ஞானமோவெனில் ஸ்ரீ சிவபிரானை விட்டு அகலாமல் தனக்குள் இருக்கும் அறிவே என்றும், இம்மூன்றையும் நன்றுக அறிந்து,

स जीवन्नेव मुक्तश्च मोचकश्शिवसंमतः । पतिश्शिवः समाख्यातः परिपूर्णः स्वभावतः ॥ ४३
पञ्चसादाख्यरूपेण पञ्चब्रह्म षडङ्गवान् । सदाशिवस्वरूपेण महांश्चैव सदाशिवः ॥ ४४
पञ्चविंशतिमूर्त्यात्मा परापरविभागशः । अनादिरेव देवेशस्सर्वानुग्राहकश्शिवः ॥ ४५
पञ्चकृत्यपरो नित्यमात्मनामर्थसिद्धये । एवं परशिवश्शक्त्या करोति सकलं प्रभुः ॥ ४६
वेत्तीति तत्वतो यस्तु स वै ज्ञानी मुनीश्वराः । इति श्रुत्वा मुनिश्रेष्ठात्सर्वे ज्ञानं शिवात्मकम् ॥
अपृच्छन् सूतमनघं संशयाविष्टमानसाः ॥ ४७

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे एकोननवतितमोऽध्यायः ॥

॥ अथ नवतितमोऽध्यायः ॥

श्रीपरमेश्वरस्य पञ्चविंशतिमूर्तीनां कृत्यानि ॥

मुनयः — परस्य ब्रह्मणस्सूत पञ्चविंशतिविग्रहाः । अनादय इति प्रोक्तास्त्वयेदानीं पुरा श्रुतम् ॥ १

ஸ ஜீவன்னேவ முக்தச்ச மோசகச்சிவஸம்மத:। பதி: சிவ: ஸமாக்யாத: பரிபூர்ண: ஸ்வபாவத: ।। 43
பஞ்சஸாதாக்யரூபேண பஞ்சப்ரம்ஹ ஷடங்கவான் । ஸதாசிவஸ்வரூபேண மஹாம்ச்சைவ ஸதாசிவ: 44
பஞ்சவிம்சதிமூர்த்யாத்மா பராபரவிபாகச:। அனாதிரேவ தேவேசஸ்ஸர்வானுக்ராஹகச்சிவ: ।। 45
பஞ்சக்ருத்யபரோ நித்யமாத்மனாமர்தஸித்தயே। ஏவம் பரசிவச்சக்த்யா கரோதி ஸகலம் ப்ரபு: ।। 46
வேத்தீதி தத்வதோ யஸ்து ஸ வை க்ஞானீ முனீச்வரா: ।
இதி ச்ருத்வா முனிச்ரேஷ்டாத் ஸர்வே க்ஞானம் சிவாத்மகம் ।।
அப்ருச்சன்ஸூதமனகம் ஸம்சயாவிஷ்டமானஸா: ।। 47

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேசகாண்டே ஏகோனநவதிதமோऽத்யாய:

॥ அத நவதிதமோऽத்யாய: ॥

ஸ்ரீ பரமசிவனின் இருபத்தைந்து மூர்த்திகளும், அதன் கார்யங்களும்.

முனிய: — பரஸ்ய ப்ரம்ஹணஸ்ஸூத பஞ்சவிம்சதி விக்ரஹா: ।
அனாதய இதி ப்ரோக்தா ஸ்த்வயேதானீம் புரா ச்ருதம் ।। 1

இந்திரிய அடக்கமுள்ளவனாகி, அதே நிஷ்டையில் இருக்கின்றானோ (42) அப்படிப்பட்டவன் ஸம்சாரத்திலிருந்து விடுபட்டவனாகி, ஸ்ரீ சிவபிரானுக்கு ஸம்மதனாகி ஜீவதசையிலேயே மோக்ஷமடைகிறான். ஸ்ரீ சிவபிரான் பரிபூர்ணராகிய ஸ்வபாவத்தை உடையவராதலால் பதியும் (43) பஞ்ச சாதாக்கிய உருவங்களைக் கொண்டவராகையால் பஞ்ச பிரம்ம ஸ்வரூபத்தையும், ஷடங்க சக்திகளையும் கொண்டவரும், ஸதாசிவ ஸ்வரூபியுமானதால் ஸ்ரீ மகாஸதாசிவனும் (44) பரம், அபரமென்னும் பிரிவைக்கொண்டிருப்பதால் இருபத்தைந்து திருமூர்த்திகளைக்கொண்டவருமாகின்றார். அனாதியும் எல்லோருக்கும் அனுக்ரஹம் செய்கின்றவருமான அந்த தேவாதி தேவர்தான் (45) பிராணிகளுக்கு ஸகல புருஷார்தங்களும் சித்திப்பதற்காக என்றும் பஞ்ச கிருத்யங்களைச் செய்கின்றார். இவ்விதமாக ஸ்ரீ பிரபுவானவர் எல்லாவற்றையும் சக்தியினால் செய்தருளுகின்றார். (46) ஓ முனிவர்களே! இவ்வாறாக எவன் உண்மையாய் அறிகிறானோ அவனே ஞானியெனப்படுவான் என்றார். அப்பொழுது சௌனகாதி முனிவர்களெல்லாம் சிவஸ்வரூப ஞானத்தை இவ்விதமாய் சூதமுனிவரிடமிருந்து கேட்டு மனதினால் சந்தேகமடைந்தவர்களாகி பரிசுத்தரான சூத முனிவரைக் கேட்டார்கள். (47)

எண்பத்தொன்பதாவது அத்யாயம் முற்றிற்று.

தொண்ணூறாவது அத்தியாயம்

ஓ ஸூத முனிவரே! பரப்பிரும்மத்தின் இருபத்தைந்து மூர்த்திகளும் கைலாஸம் சிவலோகம் முதலிய இடங்களில் காரியார்த்தமாய் அனாதியாக உள்ளன என்று கேள்விப்பட்டு இருப்பதாக எங்களுக்கு

कैलासशिवलोकादौ कार्यार्थमिति नः श्रुतम् । एतन्नस्संशयं छिन्धि न त्वदन्योऽस्ति तत्ववित् ॥ २
सूतः — पञ्चविंशतिमूर्तीनामनादित्वं मुनीश्वराः । यथा व्यक्तं तथा वच्मि ब्रुवतो मन्निबोधत ॥ ३
शिवस्य नित्यतृप्तस्य पञ्चविंशतिमूर्तयः । अनाद्या एव देवस्य सन्ति नित्या महेशितुः ॥ ४
शुद्धे माहेश्वरे तत्वे कार्यार्थं विभुना धृताः । किमर्थमिति चेद्विप्राश्शृणुध्वं ब्रुवतो मम ॥ ५
आत्मनामुद्भवार्थं तु लिङ्गोद्भव उदाहृतः । सर्वात्मना महेशेन यादृशी मूर्तिराहृता ॥ ६
आत्मानश्चापि ते सर्वे तादृशाश्च भवन्ति वै । सुखासनात्मिका मूर्तिर्निर्विकारा द्वितीयका ॥ ७
आत्मानश्चापि ते बाल्ये निर्विकारा भवन्ति वै । उवाह देवः स्वां शक्तिमुमारूपां यतः प्रभुः ॥ ८
ततस्सर्वेऽपि चात्मानः पाणिग्रहणकांक्षिणः । तृतीया सा ततो मूर्तिरुमापरिणयोन्मुखी ॥ ९
कल्याणसुन्दरा मूर्तिः कृतकल्याणरूपिणी । अर्धनारीश्वरीमूर्तिरात्मनां मोहकारिणी ॥ १०
तस्मात्ते कृतकल्याणा रमन्ते स्त्रीभिरन्वहम् । मोहेन महता युक्ताः कृतशास्त्रपरिश्रमाः ॥ ११

கைலாஸசிவலோகாதௌ கார்யார்தமிதி நः ச்ருதம் ।
ஏதந்நஸ்ஸம்சயம் சிந்தி ந த்வதன்யோऽஸ்தி தத்வவித் ॥ 2
ஸூத: — பஞ்சவிம்சதிமூர்தீனாமனாதித்வம் முனீச்வரா: ।
யதா வ்யக்தம் ததா வச்மி ப்ருவதோ மந்நிபோதத ॥ 3
சிவஸ்ய நித்யத்ருப்தஸ்ய பஞ்சவிம்சதிமூர்தய: । அனாத்யா ஏவ தேவஸ்ய ஸந்தி நித்யா மஹேசிது: ॥ 4
சுத்தே மாஹேச்வரே தத்வே கார்யார்தம் விபுனா த்ருதா: ।
கிமர்தமிதி சேத்விப்ராச்ச்ருணுத்வம் ப்ருவதோ மம ॥ 5
ஆத்மனாமுத்பவார்தம் து லிங்கோத்பவ உதாஹ்ருத: ।
ஸர்வாத்மனா மஹேசேன யாத்ருசீ மூர்திராத்ருதா ॥ 6
ஆத்மானச்சாபி தே ஸர்வே தாத்ருசாச்ச பவந்தி வை ।
ஸுகாஸனாத்மிகா மூர்திர்நிர்விகாரா த்விதீயகா ॥ 7
ஆத்மானச்சாபி தே பால்யே நிர்விகாரா பவந்தி வை ।
உவாஹ தேவ: ஸ்வாம் சக்திமுமாரூபாம் யத: ப்ரபு: ॥ 8
ததஸ்ஸர்வேऽபி சாத்மான: பாணிக்ரஹணகாங்க்ஷிண: ।
த்ருதியா ஸா ததோ மூர்திருமாபரிணயோன்முகீ ॥ 9
கல்யாணஸுந்தரா மூர்தி: க்ருதகல்யாணரூபிணீ । அர்தநாரீச்வரீ மூர்திராத்மனாம் மோஹகாரிணீ ॥ 10
தஸ்மாத்தே க்ருதகல்யாணா ரமந்தே ஸ்த்ரீபிரன்வஹம் ।
மோஹேன மஹதா யுக்தா க்ருதசாஸ்த்ரபரிச்ரமா: ॥ 11

தங்களால் இப்பொழுது கூறப்பட்டதல்லவா? தங்களைக் காட்டிலும் தத்துவம் அறிந்தவர் மற்றொருவரும் இல்லாதபடியால் அதில் எங்களுக்கு ஏற்படும் ஸந்தேகத்தைப் போக்க வேண்டும் என்றார்கள். (2) ஸூத முனிவர் கூறுகின்றார் :— ஓ முனிச்ரேஷ்டர்களே! இருபத்தைந்து மூர்த்திகளுக்குள்ள அனாதித் தன்மையை கூடியமட்டில் தெளிவாக நான் கூறுவதை நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். (3) என்றும் திருப்தி உள்ளவரான ஸ்ரீ மஹாதேவருடைய இருபத்தைந்து மூர்த்திகளும் அனாதியாகவும், நித்தியமுமாகவே உள்ளன. (4) அம்மூர்த்திகளெல்லாம் ஸ்ரீ பிரபுவினால் தனது சுத்த தத்துவத்தில் காரியார்த்தமாய் தரிக்கப்பட்டிருக்கின்றன. ஓ முனிவர்களே! அது எதற்காகவென்றால் நான் சொல்லுவதைக் கேளுங்கள். (5) லிங்கோத்பவ மூர்த்தியானது பிராணிகளின் உற்பத்திக்காக ஏற்பட்டிருப்பதாய்ச் சொல்லப்படுகின்றது. ஸ்ரீ மஹேச்வரனால் பூரணமான அம்சத்துடன் எவ்வாறு அம்மூர்த்தியானது தரிக்கப்பட்டதோ (6) அவ்வாறே ஸகல பிராணிகளும் ஆகின்றார்கள். இரண்டாவதான நிர்விகாரமாகிய ஸுகாஸன மூர்த்தியினால் (7) எல்லாப் பிராணிகளும் பால்யத்தில் விகாரமற்றவர்களாய் இருக்கின்றார்கள். பிரபுவானவர் தனது சக்தியாகிய உமாதேவியை மணம் புரிந்துகொள்ள விரும்பியபடியால் (8) எல்லாப் பிராணிகளும் விவாஹம் செய்துகொள்ள விருப்பமடைகின்றார்கள். மூன்றாவதாகிய "உமாசகர்" என்னும் மூர்த்தியால் (9) பிராணிகள் கல்யாணம் செய்துகொள்ளுகிறார்கள். திருமணம் செய்துகொண்ட கல்யாணஸுந்தரமூர்த்தியால் அவர்கள் தினந்தோறும் மனைவிகளோடு சேருகிறார்கள். பிராணிகளுக்கு மோகத்தை அளிக்கின்ற அர்த்தநாரீச்வர மூர்த்தியால் அவர்கள் மோகத்தோடு கூடியவர்களாயும், சாஸ்திரங்களைக் கற்பதில் பிரயாசைப் படுகின்றவர்களாயும் ஆகின்றார்கள். (11) ஸ்வாமியானவர்

सोमास्कन्दो यतः स्वामी मूर्तिमानभवच्छिवः । आत्मानोहि ततो लब्धपुत्राहि स्युर्नचान्यथा ॥ १२
प्रससाद यतश्चक्रं विष्णवे विश्वयोनये । तत एवात्मवर्गोऽपि लब्धभोगो नचान्यथा ॥ १३
त्रिमूर्तिमूर्तिमादत्ते भगवानीश्वरो यतः । आत्मानोऽपि ततो मूर्तित्रयं विन्दन्त्ययत्नतः ॥ १४
पुण्यपापे समीकृत्य चात्मनामीश्वरेश्वरः । प्रयच्छति स्वात्मशक्तिपातं हरिहरात्मना ॥ १५
परमेशः कृपासिन्धुः परात्परतरः प्रभुः । भक्तानामुपदेशार्थं दक्षिणामूर्तिमाश्रितः ॥ १६
अजातमिममेवैकं ज्ञात्वा जन्मनि भीरवः । प्रपद्यन्तेऽस्य देवस्य मोक्षार्थं दक्षिणामुखम् ॥ १७
तस्मात्सर्वात्मनां मुक्तिर्दक्षिणामूर्तिसेवया । आश्रित्यान्यानपि सुरान्नमुक्तिस्संसृतेर्नृणाम् ॥ १८
भिक्षामटति या मूर्तिश्शंभोः परमशोभना । आत्मभ्यस्सातु पक्वेभ्यस्तनुते भोगसंग्रहम् ॥ १९
अत एव तु यो वेद परे व्योम्नि प्रतिष्ठितम् । गुहायां स्वात्मनः सत्यं ज्ञानमानन्दमद्वयम् ॥ २०
सोऽश्नुते ब्रह्मणा तेन कामान् सर्वान् विपश्चिता । कङ्कालाख्यापि या मूर्तिर्देवेन समलंकृता ॥ २१
तया पक्वात्मनामीशो विदधाति विरागताम् । विषयेभ्यस्समस्तेभ्यस्तस्मादेते विरागिणः ॥ २२

ஸோமாஸ்கந்தோ யத: ஸ்வாமீ மூர்திமானபவச்சிவ: ।
ஆத்மானோஹி ததோ லப்தபுத்ராஹி ஸ்யுர்நசான்யதா ॥ 12
ப்ரஸஸாத யதச்சக்ரம் விஷ்ணவே விச்வயோனயே । தத ஏவாத்மவர்கோऽபி லப்தபோகோ நசான்யதா
த்ரிமூர்திமூர்திமாதத்தே பகவானீச்வரோ யத: । ஆத்மானோऽபி ததோ மூர்தித்ரயம் விந்தந்த்யயத்னத:14
புண்யபாபே ஸமீக்ருத்ய சாத்மனாமீச்வரேச்வர: । ப்ரயச்சதி ஸ்வாத்மசக்திபாதம் ஹரிஹராத்மனா ॥ 15
பரமேச: க்ருபாஸிந்து: பராத்பரதர: ப்ரபு: । பக்தாநாமுபதேசார்தம் தக்ஷிணாமூர்திமாச்ரித: ॥ 16
அஜாதமிமமேவைகம் க்ஞாத்வா ஜன்மனி பீரவ: । ப்ரபத்யந்தேऽஸ்ய தேவஸ்ய மோக்ஷார்தம் தக்ஷிணாமுகம்
தஸ்மாத் ஸர்வாத்மனாம் முக்திர் தக்ஷிணாமூர்திஸேவயா ।
ஆச்ரித்யான்யானபி ஸுராந்நமுக்திஸ்ஸம்ஸ்ருதேர் ந்ருணாம் 18
பிக்ஷாமடதி யா மூர்திச்சம்போ: பரமசோபனா । ஆத்மப்யஸ்ஸாது பக்வேப்யஸ்தனுதே போகஸங்க்ரஹம்19
அத ஏவ து யோ வேத பரே வ்யோம்னி ப்ரதிஷ்டிதம் ।
குஹாயாம் ஸ்வாத்மனஸ்ஸத்யம் க்ஞானமானந்தமத்வயம் ॥ 20
ஸோऽச்னுதே ப்ரம்ஹணா தேன காமான் ஸர்வான் விபச்சிதா ।
கங்காளாக்யாபி யா மூர்திர்தேவேன ஸமலங்க்ருதா ॥ 21
தயா பக்வாத்மனாமீசோ விததாதி விராகதாம் । விஷயேப்யஸ்ஸமஸ்தேப்யஸ்தஸ்மாதேதே விராகிண: 22

